108589

புதிய
நல்ல தங்கை நாடகம்

# புதிய
# நல்ல தங்கை நாடகம்
பதிப்பு 1965

0-852, NDU5, N
N65
108589
1965

உ

வேதவிநாயகர் துணை

## புதிய

# நல்லதங்கை நாடகம்

திண்டிவனம் தாலூகா

...பிலம் அ. வா. துரைசாமி முதலியார்

எழுதியதை,

புஸ்தக வியாபாரம்

... க. சு. துரைசாமி முதலியார்

பதிப்பித்துவந்ததை,

ஷையாரிடம் சர்வ சுதந்தரமும் பெற்றது.


...மரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை-1



காபிரைட்]



1964

[இதன் விலை ரூபா 2

நெ-23, தாண்டவராயப்பிள்ளை வீதி.

O—892 NDUS,N
N65
108589

## ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: திண்டிவனம் தாலூகா, மயிலம் - அ. வா. துரைசாமி முதலியாரால் எழுதிய "புதிய நல்லதங்கை நாடகம்" என்னும் இந்நூலை, ஷை துரைசாமி முதலியாரிடம் காஞ்சீபுரம் புத்தக வியாபாரம் கை. சு. துரைசாமி முதலியார் சர்வ சுதந்தரத்துடன் கிரயத்திற்குப் பெற்று, தான் அச்சிட்டு தன்பேரால் ரிஜிஸ்டர் காபிரபிட் செய்து விற்பனைசெய்து வந்தனர் இந்நூலை அமரம்பேடு இரங்கசாமிமுதலியார் ஸன்ஸ் பூமகள் விலாச அச்சுக்கூடத் தலைவர்களில் ஒருவராகிய அ. முத்துவடிவேல்முதலியார் பேருக்கு 7-1-31-ல் ரிஜிஸ்டர் பாத்தியதையை சர்வ சுதந்தரத்துடன் கிரயத்திற்குப் பெற்று ஷை அ. முத்துவடிவேல் முதலியார்போல் 1937ளு எமது பூமகள் விலாச அச்சுக்கூடத்திலேயே அச்சிட்டு ரிஜிஸ்டர் காபிரைட்செய்து விற்பனை செய்துவந்தோம். அதனை நான் சுத்தமாகச் சீர்திருத்தி அச்சிட்டு மகாகனம் பொருந்திய கவர்ண்மெண்டார் அவர்கள் சட்டப்படிக்கு என்பேரால் ரிஜிஸ்டர் காபிரைட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் இந்நூலை எனது உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதை தெரியப்படுத்தி யிருக்கிறேன்.

அ. இராஜரத்தின முதலியார்.

உ

ஸ்ரீ வேதவிநாயகர் துணை

## புதிய

# நல்லதங்கை நாடகம்

### விநாயகர் காப்பு

சீர்புகழ்மா மதுரைவளர் செயபூப ராஜனருள்
பார்புகழ்நற் றங்கைதமிழ்ப் பாடுதற்குப்—பேர்பெறவே
தற்பரமெய்ப் பொருளாகித் தாரணி யெலாங்காக்கும்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு

### விநாயகர் வருகிற கவி

திங்கள்கங்கை முடிமீதி லணிந்தசெல்வன்
செங்கண்மால் வண்ணனுக்கு மருகனல்லோன்
அங்கமுனி யமருக்கு மண்டரண்ட
மளித்தமா லயன்சிவனுக் கிவனேமூத்தோன்
சங்கையறும் வேதாக மத்தின்முன்னோன்
தானவனே மூலமுதற் பொருளாய்நின்றோன்
மங்கையெனும் வல்லபைதன் பாகனான
மாவேழ முகவரிதோ வருகின்றாரே.

### தரு. பல்லவி

கணநாதர் இதோவந்தனர்    ஜெயஜெய
கணநாதர் இதோவந்தனர்

### அநுபல்லவி

கணநாதர்வந்தனர்    கயமுகாசுரனை
ஜெயமாகவேமுடித்த    சிவனருளியபாலன்    கண

### சரணங்கள்

செம்பொற்கமலக்காத்தோன்    இந்திரனுக்காய்
கும்பமுனியோன்    ஜலத்தை
உம்பர்க்கரியமிக    வெம்புங்காவுக்களித்த
தம்பிக்காய்வனக்குற    கொம்பனையாளைச்சேர்த்த    கண

கங்கைமகிழுஞ்சுதனார்    திருமாமுக
மங்கைவல்லபை    நேயனார்
திங்கள்வதனிநல்ல    தங்கைநாடகஞ்சொல்ல
இங்கேவந்தருள்செய்ய    மங்களமாகவே    கண

## கட்டியன் வருகிற கவி

வட்டமாமதிலும்நீண்ட மாடகோபுரமுஞ்சூழ்ந்த
திட்டமாமதுரைபாளுந் திங்கள்தன்குலத்தில்வந்தோன்
இஷ்டமாமிராமலிங்க விராஜபூபாலன்வாசல்
கட்டியக்காரன்வந்து கனமுடன்தோன்றினனே.

### கட்டியன் தரு. பல்லவி

இராமலிங்காஜாஜன் வாசற்காக்கும்
நாகரீகக்கட்டியக்காரன் வந்தானே

### அநுபல்லவி

சோமனணிந்தசெம் மானிடமேந்திய
சொக்கர்மருவிய மிக்கமதுரையில் இரா

### சரணங்கள்

தலையிற்சரிகைப்பாகை தானுமுருக்காப்கட்டி
தட்டிச்சல்லடமிட்டு சமுதாடுமேகட்டி
வதுமைபுடனேபேசி வாகைபுடனேயீட்டி
வாளும்வல்லயங்கையில் நாளுமிடைவிடாமல் இரா

நெற்றியினில்பட்டை நாமந்திறக்கச்சாத்தி
நெரித்தபார்வையுமீசை முறுக்கிக்கொண்டுலாத்தி
பார்த்தோர்நடுநடுங்க வார்த்தைசொல்லியநேர்த்தி
பட்டுச்சரிகைபுடன் சாலுவைமேல்போர்த்தி இரா

### பொது வசனம்

அகோதெப்படியென்றால், தென்மதுராபுரி பட்டணத்தை யாளாநின்ற சந்திரகுலசேகரனுகிய இராமலிங்கமகாராஜன் தனது மந்திரி பிரதானிகள் புடைசூழ கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

## இராமலிங்கராஜன் வருகிற கவி

உலகெலாம்புகழ்ந்துபோற்றும் ஒளிர்சொக்கநாதர்வாழும்
இலகுநன்மதுரையாளும் இந்துவின்குலத்தில்வந்தோன்
நலமிகுமிராமலிங்க நல்லபூபதியோன்தானும்
குலவியவமைச்சர்சூழக் கொலுவுக்குவருகின்றனே.

### தரு. பல்லவி

இராஜபூபாலன் வந்தான் . ஜெயராமலிங்க
இராஜகெம்பீரன் வந்தான்

### அநுபல்லவி

வாசமலரணிந்து தேசாதிபர்களுடன் நேசமுடனேபணிந்து
நீண்டசெஞ்சடை ஆண்டவன்திகழ்
பாண்டியன்பதி யாண்டபூபதி இராஜ



### சரணங்கள்

சிரசில்மகுடமின்னவே இருசெவியில் சிறந்தகுண்டலந்துன்னவே
மருமணிமாலையாடவே இருபுயம் வல்லயம்பளபளென்னவே
அருமறையோர்கள்சூழ அருகில்கட்டியங்கூற
இருபுறமுங்கவரி ஏந்திழைமார்கள்போட
ஏகபோகம தாகவீரிய நாகரீகம தாகவேகியே இரா

சந்திரக்குடைபிடிக்கவே பட்டாங்கி சார்ந்துமாதரெடுக்கவே
வந்துதினம்நடிக்கவே தேவதாசிகள் வாணர்பதம்படிக்கவே
சிந்தூரத்திலர்தருதல் தேவியாம்ராணிகூட
வந்துஅஞ்சல்செய்யும் மந்திரிமார்கள்நாட
மண்டலம்புகழ்பாண்டியன்பதிகண்டநீலனையும்அண்டிபோற்றியே இ

தாளமத்தளம்போடவே யாழ்வீணைகள் தம்புருகின்னரிநீடவே
நாளுங்கடல்போல்ஜாடவே முரசதிர நாதசுரங்கள்பாடவே
காளசின்னங்களொடு கருணையூதாரையண்ட
கோளங்கிடுகிடென்ன கொடியுமவெடிகள்நீண்ட
கொடியுடன்வெடி மடமடென்னவே விடைபெரும்பர னடியைப்
போற்றியே இராஜ

## இராமலிங்கராஜன் கவி

மாதமும்மாரிபெய்ய மனுநெறிதவறிடாமல்
நீதிசெங்கோலுமோங்க நீணிலத்தோர்கள்வாழ்ந
ஆதியாய்மதுரைவாழும் அணிசொக்கநாதர்செமபொற்
பாதமேபோற்றிபோற்றி பகர்வினைகடிந்தாய்போற்றி.

### வசனம்

அகோ வாருங்கள் மந்திரிமார்களே! நமது பட்டணத்தில் மனு நீதி தவறாமலிருக்கவும், என் கையில் தாங்கியிராநின்ற செங்கோலும் குறைவின்றி வாழக்கடவது. அன்றியும், ஸ்ரீ அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராகிய நமது சொக்கநாதக்கடவுளுடைய பாதாரவிந்தம் சபா வந்தனம்.

## இராமலிங்கராஜன் கவி

அருகினில்வாழுகின்ற அமைச்சரேசொல்லக்கேளீர்
திருவளர்மதுரைதன்னில் திங்கள்மும்மாரிபெய்து
வருகுதோகுறைவில்லாமல் வளர்நிலந்தானுமிங்கு
காமுடனும்லொன்று கடமையுஞ்செல்லுதோதான்.

### வசனம்

வாருங்களப்பா மந்திரிமார்களே! நமது மதுராபுரிபட்டணத்தில் மாதமும்மாரி பெய்து வருகிறதா? நீர்வளம் நிலவளம் பொருந்திய விளைவு வெள்ளாண்மை மிகுதியாய் விளைந்துவருகிறதா? நமது

பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாம் குறைவின்றி வாழ்ந்துவருகின்றார்களா? சிவாலயம் விஷ்ணுவாலயம் இதுகளுக்கு ஆறுகால பூஜை அபிஷேகம் உற்சவம் அன்னநைவேத்தியம் முதலானதும் நடந்து வருகின்றதா? விளம்புவீர்களாக.

மந்திரி வசனம்

அரசே! சாட்சாத் பரமேஸ்வரனாகிய சொக்கநாதக்கடவுளுடைய கிருபாகடாட்சத்தால் யாதொரு குறைவுமின்றி நமது நாடு குபேரலோகம்போல் செழித்து ஓங்கி வளர்ந்துவருகின்றது அரசே

பொது வசனம்

இவ்விதமாக இராமலிங்கராஜன் மதுராபுரி பட்டணத்தில் கொலுவிற்றிருக்கும்போது அவரைக் காணும்படிக்கு சோதிடர் வருகிறவிதங் காண்க.

சோதிடர் வருகிற கவி

ஆதிபாஞ்சோதிடத்தின் அரும்பொருள்தன்னையாய்ந்து
போதவேகற்றுணர்ந்த புண்ணியப்பெரியோரான
சோதிடராகும்நல்ல சூஸ்திரசாஸ்திரிமாரும்
வேதியரெவருங்கூடி வேந்தன்முன்வருகின்றாரே.

தரு பல்லவி

சோதிடர்வந்தாரே நல்ல சோதிடர்வந்தாரே
சோதிடர்வந்தாரேநல்ல ஜாதகமெழுதவல்ல
ஆதிபாய்விரமாமுனி ஓதியேவீமேசர்பாடி சோ

அநுபல்லவி

வேதியர்வந்தாரே நல்ல வேதியர்வந்தாரே
வேதியர்வந்தாரேநன்றாய் ஓதியேவேதங்கள்பாடி
* சாதகஅலங்காரம் விநோதமாயெழுதி சோ

சரணங்கள்

சாஸ்திரிகள்வந்தாரே வெகுவித சாஸ்திரிகள்வந்தாரே
சாஸ்திரிகள்வந்தார்வெகு நேர்த்தியாய்க்கருமகாண்டம்
பார்த்திருந்தவர்கள்போலே சாஸ்திரங்கள்சொல்லிக்கொண்டு சோ

சூஸ்திரியர்வந்தாரே நல்ல சூஸ்திரியர்வந்தாரே
சூஸ்திரிமார்களும்நல்ல சாஸ்திரவாதிகள்போலே
வார்த்தைகள்மிகவேபேசி யேகிராஜன்சபைக்கு சோ

---

* "சாதக அலங்காரம்" என்னும் நூலுக்கு, வேலூர் வேலப்பாடி வி. கே. வேலுநாயகர் அவர்களாலும், கே. எம். தெய்வசிகாமணி சோதிடர் அவர்களாலும் எழுதிய அரிய உரையுடன் எமது மலர்மகள் அச்சகத்தில் பல ராசி சக்கரங்களுடன் 844 - பக்கங்களாக சுத்தப்பிரதியாய் அச்சிட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கிறது. இதன் விலை ரூபா 15.



இராமலிங்கராஜன் கவி

வேதவேதியரேபோற்றி வித்தகப்பொருளைத்தேர்ந்த
மாதவத்தோரேபோற்றி மதுரையில்வாழுகின்ற
சோதிடராகுமுங்கள் தாளையடிபோற்றிபோற்றி
ஏதுகாரியமாய்வந்தீர் எந்தனுக்குரைசெய்வீரே.

வசனம்

சரணம் சரணம் ஐயா சோதிடர்களே! தாங்கள் என்னிடம் யாது காரியமாக வந்தீர்; தெரியச்சொல்லுங்கள் சோதிடர்களே.

சோதிடர் தரு. பல்லவி

மன்னனேயின்று நாங்கள்
சொல்லும் வார்த்தையைக் கேளும்
உன்னதமாகிய மின்னுமுடிபெற்ற மன்

சரணங்கள்

பிள்ளையில்லாத அரசுக்கு உரியவரெவரோ
தெள்ளுமணியைப்போலே தினகரனொளிபோலே
வள்ளலேநீயிந்த மதுரையாளுவதாலே மன்

உனைவிடவேறே அரசுக்கு உரியவரெவரோ
இனிதானமதிகுலம் இருந்துமிதுவரையில்
புனையுமவனிக்குப் பிள்ளையில்லாததாலே மன்

உலகாளுங்கீர்த்தி அரசருக்கு உறமாகும்வெற்றி
பலமாகுமேதவப் பிள்ளையினால்மெத்த
குலம்வருமோமுத்தி குடியாகுமோசித்தி மன்

சோதிடர் கவி

திருமுடிமன்னவர்தன் தேவியும்நீயுமாக
இருவரும்மனதொன்றாகி இருடிபோல்வேடங்கொண்டு
பெருந்தவம்முடிப்பீரானால் பேருலகாளும்நல்ல
சிறுவர்களுனக்குநகைலே சிவனும்வந்தருள்செய்வாரே.

வசனம்

கேளும் மகாராஜனே! உமக்குப் பிற்காலம் இந்த மதுராபுரி பட்டணத்தை முடிசூட்டிக்கொண்டு அரசாள்வதற்குப் புத்திரனில்லாமல் இருப்பதால் அதற்கு ஒரு யோசனையுண்டு. அதென்னவென்றால், நீரும் உமது பாரியாளாகிய இந்திராணியும் இல்லறம் விட்டு துறவறமடைந்து காவி காம்பரம் தரித்து சரீரமெங்கும் வெண்ணீறணிந்து கைலாச சார்புக்குச்சென்று பரமசிவத்தை நோக்கி அரிதாகியதவஞ்செய்தால் பரமசிவன்வந்து புத்திரசந்தானம் உண்டாகும்படி கிருபைசெய்வார் மகாராஜனே.

### இராஜன் வசனம்

கேளும் சுவாமி சோதிடர்களே! தாங்கள்சொல்லியபடி நடந்து கொள்ளுகிறேன். உங்களுக்கு வேண்டிய வெகுமதி தந்தேன் உங்கள் ஸ்தானம் போய்வாருங்கள் சுவாமிகளே.

### சோதிடர் வசனம்

சுகிபவா! சுகிபவா! அப்படியே போய்வருகின்றோம் அரசே.

### இராஜன் கவி

என்னிடமந்திரிமாரே இதற்கானென்னசெய்வேன்
இந்தடவாகளிங்கள் எடுத்துரைக்காமற்போனீர்
வந்தசோதிடர்கள்சொன்னார் மதிகுலம்விளங்கத்தக்க
பிந்திபோள்வதற்குப் பிள்ளையில்லாமற்போச்சே.

### வசனம்

கேளுங்கள் மந்திரிமார்களே! நீங்கள் என்னிடம் இடைவிடாம லிருந்து இந்த விஷயங்களை எனக்குச் சொல்லாமற் போனீர்கள். இந்த சந்திரவமிசம் தழைக்கும்படி எனக்கு சந்ததியில்லாமல் என் மனம் வாடலானேன் மந்திரிமார்களே.

### தரு. பல்லவி

பிள்ளையில்லாததொரு பாக்கியமேபாக்கியம் இனி
பெற்றுமென்ன இலாக்கியம்

### அநுபல்லவி

கன்னியான தலங்கி கப்புங்கிளையாணும்
காயுண்டோபூவுண்டோ கனியுண்டோவதுபோல பிள்ளை

### சரணங்கள்

மாடமாளிகையென்ன கூடகோபுரமென்ன
மதிலுமகழியென்ன மண்டபப்படியென்ன
நாடுநகரமென்ன நவிலுஞ்செங்கோலுமென்ன
நாலுநகரமென்ன மேலானெனக்குமென்ன பிள்

கொடியுங்கொடையுந்தேடிக் கொண்டுமென்னபலன்
கோடிகோடியாய்செய்பொ குவித்துமென்னபலன்
அடருந்தருமங்கோடிகான் அளித்துமென்னபலன்
அமார்தொழும்மதுரை அரசாளவெனக்குப்பின் பிள்

இரதகஜதுரக பதாதியிருந்துமென்ன
நன்றாய்நால்வகைச்சேனை யாவுமிருந்துமென்ன
விதவிதமாய்ரண சூரர்களிருந்தென்ன
விருதென்னசதிரென்ன வீரமிருந்துமென்ன பிள்



### இராஜன் கவி

பின்னரசாள்வதற்குப் போறிவாளர்சொன்ன
நன்மொழிப்படியேகைலை நாடியதவத்தைச்செய்து
மன்னியவரத்தைப்பெற்று மாவரசாள்வேன்மந்திரி
என்னிடமனைவியான இந்திராணியைவரச்செய்வாயே.

வசனம். வாராய் மந்திரி! சோதிடர் சொல்லியபடி எனக்குப் பின் அரசாளுவதற்கு புத்ரசந்தானம் கிடைக்கும்படி பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்யப் போகவேண்டும். என் தேவியாகிய இந்தி ராணியை சீக்கிரம் வரும்படி தாதிகளுக்கு திட்டஞ் செய்வாயாக.

### மந்திரி வசனம்

தங்கள் திருவுளப்படியே வரவழைக்கின்றேன் மன்னவா. அம்மா தாதிகளே! நமது பட்டத்தரசியாகிய இந்திராணியம்மனை அரசன் ஏதோ காரியார்த்தமாக வரச்சொன்னாரென்று அழைத்து வாருங்களம்மா.

தாதிகள் வசனம்:—இதோ அழைத்துவருகின்றோம். வாரும் அம்மா பட்டத்தரசியாகிய இந்திராணிதேவியே! உம்மை உமது நாயகன் அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டார்; சீக்கிரம் வாருமம்மா.

இந்திராணி வசனம்:—ஹா! அப்படியா, அவர் யாது காரண யாக என்னை வரும்படி கட்டளையிட்டாரோ தெரியவில்லையே; ஆனால் இதோ வருகின்றேன் புறப்படுங்கள் தோழிமார்களே.

### இந்திராணி வருகிற கவி

மின்னூரற்பணிவிளங்க மெல்லிடைமின்னுமேலாம்
வர்ணப்பட்டாடைசாத்தி மாமயிலொயிலாளான
இன்னிலத்தரசன்தேவி இந்திராணியென்னுமாது
கன்னியர்கவரிவீச காதலன்சபைவாராளே.

### தரு. பல்லவி

வந்தேன் இந்திராணிமாது வந்தேனே இதோ
வாரேன் இந்திராணிமாது வாரேனே

### அநுபல்லவி

வந்தேனிந்திராணிதேவி மதுரைமன்னவனுவி
சிந்தைமிகமகிழ்ந்து விந்தையாய்சபையைநாடி வந்

### சரணங்கள்

காரிருள்தன்னையொத்த கருங்குழல்மணம்வீச
காதிறகொந்தளவோலை கதிரவனொளிவீச
சாருநகைவாயிதழ் தனக்காய்ப்பவளங்கூச
தாளநகைவிலாசம் குரலுங்குயில்போல்பேச வந்

பூரணச்சந்திரன் போல வதனந்தன்ன
புகழுஞ்சாந்தணிமார்பில் பொன்னாபரணமின்ன
வாரணிஸ்தனத்தின்மேல் வாசங்கமகமவென்ன
மருமலர்மாலைசூடும் திருமகளிவளென்ன வர்
சேலைசிற்றிடைதங்க சிரொட்டியாணமாட்டி
செங்கைமலர்க்கரத்தில் தங்கவளையல்பூட்டி
காலில்சதங்கைதண்டை கதருமோசையைக்காட்டி
கருணைக்கண் மைதீட்டி பெருமைக்குளிவள்மேட்டி வர்

இந்திராணி கவி

மன்னனேபோற்றி மணாளனேபோற்றி
என்னையாளும் இறைவனேபோற்றி
தன்னிகரில்லாத் தலைவனேபோற்றி
உன்னியசேதி புரைத்திடுவீரே.

வசனம். கேளும் என்பிராணேசா! என்னை அழைத்த காரியம் யாது உரைப்பீர்; உமது பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம் சுவாமி.

இராஜன் கவி

உரைத்திடுமென்றுசொன்ன உசிதமாங்குயிலேமானே
கருத்தினுக்கிசைந்தோனே கண்ணேநீவாழிவாழி
பெருத்தபூஷணத்தினளே பிரியன்யானுனையிப்போது
திருத்தமாயழைத்தசேதி செப்புவேனெழுந்திராயே.

வசனம். எனது பிராணநாயகியே! உன்னை அழைப்பித்த விபரம் தெரியச்சொல்லுகிறேன் கேட்பாயாக.

தரு

இராஜன் அளகாபுரிநிகராம் மதுராபுரியதனை
அழகாக ஆண்டிருந்தோம் பெண்மயிலேமானே
இராணி ஆண்டிருந்ததினாலே தோன்றினதின்னதென்று
ஆச்சரியஞ் சொல்லவந்தீர் என்மன்னவரே
இராஜன் இந்தமதுரைதன்னில் என்சந்திரகுலம்விளங்க
இனிதாக வாழ்ந்திருந்தோமே பெண்மயிலே
இராணி இருந்ததாலென்னகுற்றம் அறிந்ததைச்சொல்லுவீர்
எதுக்கிந்ததுயரம் என்மன்னவரேசுவாமி
இராஜன் ஆனைபரிசேனைரதம் மாடமதில்கோபுரமும்
அனைத்தும் இருந்துமென்ன பெண்மயிலே
இராணி அனைத்துமிருக்கும்போது மனத்துயரானதென்ன
அதிசயமதனைச்சொல்லும் என்மன்னவரே
இராஜன் நாடுநகரம்மேலும் தேடும்பொருள்களெல்லாம்
நாம்தேடி யென்னபலன் பெண்மயிலேமானே



இராணி தேடும்பொருள்களெல்லாம் சேதமில்லாதிருக்க
சிந்தைவாடுவதென்ன என்மன்னவரேசுவாமி
இராஜன் பேருலகங்கள்தன்னை யாரிருந்தாளுவாரோ
பின்முடிக்கு யாருங்காணேன் பெண்மயிலே
இராணி பின்முடிக்கென்றுசொன்ன பின்புநான்கண்டறிந்தேன்
பேதைநான் என்னசெய்வேன் மன்னவரே

இராஜன் கவி.

கானமாமயிலைப்போல கட்டழகுடையவேந்தன்
மானேயிம்மதுரையாள மைந்தனில்லாததாலே
ஆனையுஞ்சேனைசெங்கோல் அமைச்சருக்களித்துநாமும்
மானிடத்தவரைநோக்கி மகாதவஞ்செய்குவோமே.

வசனம். கேளும் பெண்ணே இந்திராணி! நமக்குப் பிற்காலம் மதுராபுரியை யாளப் புத்திரன் இல்லாமையால் நமது அரசை மந்திரியிடம் விட்டுப் பார்த்துக்கொள்ளச்சொல்லி கைலாச பர்வதத்தை யடைந்து தவஞ்செய்து சாக்ஷாத் பரமசிவனிடத்தில் புத்திரப்பேறு பெற்று மீள்வோம் வருவாய் பிராணநாயகி.

இந்திராணி வசனம்

உமது இஷ்டப்படியே வரம்பெற்று வரலாம் சுவாமி.

பொது வசனம்

அகோதெப்படியென்றால், மதுராபுரிக்கு அரசனாகிய இராமலிங்க மகாராஜனும், அரசி இந்திராணியும் கைலாசமலையையடைந்து தவஞ்செய்கிறவிதங் காண்க.

தரு

சிவயோகியைபோல்தவவேடங்கொண்டாரே ஜெயராமலிங்கமன்னன்
பவமதைத்துலைத்து சிவபாதமேதுதித்து பாவையுந்தானுமன்பாய் சி
பாவங்களைதுநீங்கு மூபாயமவிபூதியென்று உடலெங்குமேபூசி
காவிகாஷாயத்தைப் பூஷணமாகவே கனமாய்ருத்திராக்ஷம்பூண்டு சி
தாங்குமுடிபெற்ற ஓங்குஞ்சிரசினில் சடைமுடியுந்தரித்து
வாகுவல்லயமீட்டி தாங்குங்கையினில்செப மாலையுந்தான்தரித்து சி
திருமதுரையைவிட்டு ஒருமனதாகத்தன் தேவியுடன்நடந்தான்
அரகராசிவசிவா பரிபூரணாவென்று அன்புடன்நகர்கடந்தான் சி
தங்கியேமுனிவர்க ளெங்குமிருக்கின்ற தவநிலைகண்டறிந்து
இங்கிதமாம்திரு மங்கையுடனகூடி இதுநலமென்றறிந்து சி
ஓங்காரகம்பத்தை பாங்காய்நிறுத்தியதில் ஒருகாலைத்தான்மடக்கி
ஆங்காரகிரமங்கள் ஓகைமல்நிர்மித்து ஐம்புலனையடக்கி சி
நாசிநுனியினில் வைசிமுனையினின்று நாட்டிஞானநிலையை
தேசமவுனியாகி வாசிவழியதனில் தெரிந்தனன்தன்நிலையை சி

### இராஜன் தேவாரம்

காந்தனில்மழுமானேந்தும் கர்த்தனேபோற்றிபோற்றி
சிரந்தனில்கொன்றைதும்பை திங்களுங்கங்கைசூடி
புரமெரித்தவனேபோற்றி புண்ணியாவுன்னைவேண்டி
அருந்தவஞ்செய்பலானேனும் அரகாசிவனேபோற்றி.

### தரு

அரனேசிவபரனேயென்னை யாளாய்மலர்த்தாளாய்
அடியேன்செபுந்தவமீடேற அருள்வாய்கிருபைபுரிவாய் அ

மதிசூடியமுடியாய்நதி வளர்செஞ்சடையுடையாய்
மலைமாதிடப்பாகாயென்முன் வருவாய்வரந்தருவாய் அ

விரிசெஞ்சடையுடையாய்கொடி விடையாய்வெள்ளைப்பொடியாய்
உனையேன்செய்புந்தவமீடேற விடையேறிமுன்வருவாய் அ

மகவாசையேமிகவாகியான் வாடியுன்னைத்தேடி
வந்தேன்மனம்நொந்தேனுடல் வருந்தித்தவம்புரிந்தேன் அ

திருமாலயனறியாதநின் சிரமுந்திருமுடியும்
தேனும்பிகையுடனேயென்முன் தெரிசிக்கவேவாராய் அ

### பொது வசனம்

இவ்விதமாக இராமலிங்கமகாராஜன் பரமசிவத்தை நோக்கி அரிதாகிய தவஞ்செய்ய, அத்தவத்துக்கு இரங்கி கைலாசபதி வரந்தர வரும்விதங் காண்க.

### பரமசிவன் வருகிற கவி

பிறைநதிகொன்றைதும்பை பெருஞ்சடைதலங்கமார்பில்
அரவபூஷணமிலங்க அருந்தவமுனிவர்சூழ
மருவியவானோரெல்லாம மலர்மழைபொழிந்துபோற்ற
விரைவினிலரசன்முன்னே விமலரும்வருகின்றாரே.

### பரமசிவன் தரு

கைலாசபதியீசர்வந்தார் இதோ
கைலாசபதியிதோவந்தார் கைலாச

கைலாசபதியீசர்வந்தார் நாளும்
கருதும்அடியவர்க்கு கதிதனைத்தந்தார் கைலாச

மயிலானஉமைக்கிடந்தந்தார் நல்ல
மகிழ்வானகங்கைக்கு வார்சடைதந்தார் கைலாச

உடுத்தும்புலித்தோல்சிறக்க நல்ல
உத்திராட்சமாலையும் ஓங்கிசிறக்க கைலாச



### இராஜன் கவி

ஐயனேபொருளேபோற்றி ஆதியாஞ்சிவனேபோற்றி
மைவிழிபாகாபோற்றி வார்சடையானேபோற்றி
பையரவணிந்தாய்போற்றி பரமனேபோற்றியானும்
செய்தவத்தெதிரேவந்த தேவாதிதேவாபோற்றி.

வசனம். ஓம் அரகரா! சிவசிவா! காளகண்டதிரிநேத்ரா! கைலாசபதியாகிய கர்த்தனே! அடியேன் தங்கள் பாதாரவிந்தங்களுக்கு நமஸ்காரம். யான் செய்த தவத்தை ஈடேற்றும் கர்த்தனே.

### பரமசிவன் கவி

நீதியாயுலகையாளும் நிருபனேவாழிவாழி
ஏதுகாரியமாய்நீங்கள் எந்தனைநோக்கியிங்கு
மாதவஞ்செய்கின்றீர்கள் மனமுவந்துன்கருத்தை
ஆதியோடந்தமாக அரைகுவாயரசரேறே.

வசனம். கேளாய் மகாராஜனே! நீயும் உனது மனைவியும் எந்நாளும் சுகத்துடனே வாழக்கடவது. நீங்கள் எதற்காகத் தவஞ் செய்தீர்கள் வெளியிடுவாய்

### இராஜன் கவி

தகைபெறச்செய்தயெந்தன் தவத்தினுக்கிரங்கிவந்த
ககனவரோடுநின்றாள் கண்டுநான்பாக்கியம்பெற்றேன்
செகம்புகழ்மதுரைதன்னில் திங்கள்தன்குலம்விளங்க
மகவெனக்கருள்புரிந்து மலரடிதருகுவீரே.

வசனம். அடியேன் தங்களை நோக்கி அரிதாகிய தவஞ்செய்த காரணம் யாதெனில், எங்கள் சந்திரவமிசம் விளங்கத்தக்கதாக எனக்குப் புத்திரசந்தானம் இல்லாமையால் என் முடியைப் பூண்டு மதுராபுரியை யாளப் புத்திரவரம் தரவேண்டும் கர்த்தனே.

### பரமசிவன் கவி

மனைவியும்நீயுஞ்செய்த மகாதவமெச்சிக்கொண்டோம்
உனதெழில்கருத்துவோங்கி உயர்குலம்விளங்கத்தக்க
தனையனுமொன்றுநல்ல தையலுமொன்றளித்தோம்
புனைமணிமகுடஞ்சூட்டிப் பூவுலகாளுவாயே.

வசனம். கேளாய் அரசனே! நீங்கள் இருவரும் புத்ரவாஞ்சையால் தவஞ்செய்தமையால் உனது வம்மிசம் ஈடேறும்படியாக ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்மகவும் பிறக்கும்படியான வரம் அளித்தோம்; போய்வாராய் மகாராஜனே.

### இராஜன் வசனம்

அரகரா! கைலாசபதி! தங்கள் திருவடி கமலங்களுக்கு அடியேன் சாஷ்டாங்க நமஸ்காரம். போய்வருகிறோம் சுவாமி.

### பொது வசனம்

அகோதெப்படியென்றால், பரமசிவனிடம் வரம் பெற்றுக் கொண்ட இராமலிங்கராசனுனவர் மதுராபுரிபட்டணத்தையடைந்து அரசுசெலுத்திவருகிறபோது பரமசிவனுடைய அனுக்கிரகத்தினால் அரசனுக்கு ஒரு ஆண்சந்தானமும், ஒரு பெண்சந்தானமும் உற்பவமாக, பிள்ளைக்கு நல்லண்ணன் என்றும், பெண்ணுக்கு நல்லதங்கை என்றும் நாமதேயமிட்டு, இவ்விரண்டு குழந்தைகளையும் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்த்துவருகையில், பிள்ளைகளுக்கு ஐந்துவயதானவுடன் சகல வித்தைகளையும் கற்பித்து வைத்து, அதற்குமேல் அப்பிள்ளைக்கு குந்தளதேசாதிபதியாகிய கோமுகராஜன் குமாரத்தி அலங்காரசுந்தரி யென்னும் மூளியை விவாகஞ்செய்து முடித்து மகா சந்தஷ்டியாக யிருக்கையில், இராமலிங்கராஜன் மந்திரிமார்களைப் பார்த்துச் சொல்லுவது.

### இராஜன் கவி

மந்திரிசொல்லக்கேளாய் மதுரைமாநகரையிப்போ
சுந்திரநல்லண்ணனுக்குச் சுகமுடன்மகுடஞ்சூட்டச்
சிந்தையிற்கொண்டேன்நீயோ சென்றவன்றனையேயிங்கு
தந்தையானழைப்பதாகச் சடுதியிலழைத்துவாராய்.

வசனம். கேளாய் எனக்கு இனிய மந்திரி! எனது குமாரனுகிய நல்லண்ணனுக்கு மகுடாபிஷேகஞ் செய்துவைக்க வேண்டுமெனகிற எண்ணம் எனக்குப் பிறந்தது; ஆனபடியால் உடனே அவனை இங்கு அழைத்துவாராய் மந்திரியே.

### மந்திரி வசனம்

இதோ அழைத்துவருகிறேன் அரசே! ஐயா, சிவபெருமான் வரந்தரப் பிறந்த செல்வச் சிகாமணியாகிய நல்லண்ணமகாராஜனே! உமது தந்தையாராகிய இராமலிங்கமகாராஜன் உடனே உம்மை சபைக்கு அழைத்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டாரையா.

### நல்லண்ணராஜன் வசனம்

தந்தையிட்ட கட்டளைக்கு மறுமொழியும் உண்டா? இதோ வருகின்றேன் மந்திரியே.

### நல்லண்ணன் வருகிற கவி

மதிகுலத்தரசனுன மதுரைமாநகரையாள்வோன்
துதிபெருந்தவத்தால்வந்த சுந்திரமுகவிலாசன்
அதிவிதவரசரெல்லாம் அன்புடன்மனங்களிக்க
சதிருடன்நல்லண்ணனென்போன்சபைக்கிதோவருகின்றுனே.



### நல்லண்ணன் தரு

#### பல்லவி

மதிகுலாதிபதி மன்னன் இராமலிங்கன்
மைந்தன் நல்லண்ணன்வந்தேன் தந்தையைக்காண
மைந்தன் நல்லண்ணன்வாறேன்

#### அநுபல்லவி

கதிர்மணிமுடியின்ன காதிற்குண்டலந்துன்ன
கனகாபரணமின்ன காமனிவனேயென்ன மதி

#### சரணங்கள்

வச்சிரமழுத்திய பச்சைமரகத மாணிக்கமார்பிலிலங்க நல்ல
விசித்திரமாகவே பூச்சக்கரக்குடைகவிக்க
வேதியர்மறைபாட வேந்தர்வந்தடிதாழ
காதலாய்த்தந்தையை காணஅதிவேகமாய் மதி
அங்கிகிசாருடன் அரையிற்கச்சைபுங்கட்டி
அணிந்தபீதாம்பரமும்மார்பில் அணிந்தபதக்கமும்
தொங்குமலர்மாலை எங்கும்மணம்வீச
சுபசோபனங்கள்பாட தோழன்மார்களுடன்கூட மதி
வங்குவில்அம்புடன் வளைதடிசக்கரம்
பல்லயங்கையிற்கொண்டு நல்லசொல்லையும்விண்டு
தாங்கும்பலவீரர் ஓங்கிச்சாமரைவீச
தருந்தமங்களம்பாடி தந்தைசபையைநாடி மதி

### நல்லண்ணன் கவி

வந்தனம்வந்தனம் மைந்தனென்வந்தனம்
வந்தனம்வந்தனம் மகிழுடனீன்றவென்
தந்தையேயுமதுதிருத் தாளுந்தேவந்தனம்
வந்தனம்வந்தனம் வளரடிதனக்கே.

வசனம். வந்தனம் தந்தையே! மகிழ்ச்சியாய் எனையீன்ற தங்கள் மலரடிக்கு வந்தனம்.

### இராமலிங்கராஜன் கவி

இந்துவின்குலத்தில் வந்தவதரித்த
சுந்திரமானவென் மைந்தனேவாழி.

வசனம். எனது குலம் விளங்கவந்த என் கண்மணியாகிய நல்லண்ண மகாராஜனே! சுகம் பெறக்கடவது எழுந்திராய்.

### ந லண்ணன் வசனம்

கேளும் தந்தையே! அரண்மனையிலிருந்த என்னை அழைப்பித்த விபரம் இன்னதென்று அருள்செய்ய வேண்டுகிறேன்.

### இராமலிங்கராஜன் கவி

வந்தடிபணிந்துநின்ற மைந்தனேசொல்லக்கேளாய்
அந்தணர்முனிவர்சூழ அரசர்களதியத்தக்க
உந்தனுக்கெனதுசெம்பொ னுயர்முடிசூட்டுகின்றேன்
இந்தமாமதுரைதன்னை யிருந்தரசாளுவாயே.

வசனம் அப்பா! உன்னை அழைப்பித்தவிதமாவது யாதெனில் எனக்கு முதிர்வயதானபடியால் உலகமறிய உனக்கு என்னுடைய திருமுடியைச் சூட்டிப் பட்டாபிஷேகஞ் செய்வதாக எண்ணியிருக்கிறேன்; ஆனபடியால் இந்த முடியைப்பூண்டு மதுராபுரியை அரசு புரிந்து வருவாய் என் கண்மணியே.

### நல்லண்ணன் வசனம்

உமது திருவுளப்படியே நடத்திவைபும் தந்தையே

## நல்லண்ணனுக்கு மகுடஞ் சூட்டுதல்

### தரு. பல்லவி

மணிமுடிபூண்டாரே நல்லண்ணராஜன்
மணிமுடிபூண்டாரே

### அநுபல்லவி

மணிமுடிபூண்டாரே மன்னன்நல்லண்ணராஜன்
அணியணியாகவே அரசர்வந்தடிதாழ மணி

### சரணங்கள்

பண்ணவர்மலர்மழை விண்ணினின்றுஞ்சொரிய
கண்ணுடையோரென்னும் கற்றவர்கவிகூற மணி
அந்தணர்முனிவர் ஆசீர்வதிக்கநல்ல
சந்தனம்பன்னீர்ஜவ்வாது பெண்கள்மிகதெளிக்க மணி
குறைவில்லாகோதானம் பூதானங்கள்கொடுக்க
பிறைநுதல்மாதர்கள் பிரியமங்களம்பாட மணி
உலகாளும்பூச்சக்கர வுசிதகுடைபிடிக்க
பலர்கூடிபல்லாண்டு பல்லாண்டெனத்துதிக்க மணி

### இராமலிங்கராஜன் கவி

அப்பனேமகனேயெந்தன் அருமைகண்மணியேகேளாய்
செப்பமாயுனக்குயெந்தன் திருமுடிசூட்டி விட்டேன்
ஒப்பிலாமதுரையாளும் உயர்செங்கோல்கைபிடித்து
தப்பிலாமநுவின்நீதி தன்னைகொண்டரசாள்வாயே.

வசனம். கேளாய் குமாரனே! என் மனம் சந்தோஷிக்கும்படி எனது மணிமுடியை உனக்குத் தந்தேன். நீதிசாஸ்திரப்படி தவறுதலில்லாமல் குடிகளிடம் ஆறிலொரு கடமைபெற்று சுகமாக ஆண்டு வருவாய் அடா என் தவாத்தினமே.



### இதுவும் இராஜன் கவி

அரசளித்திட்டேனந்த வுருயிர்க்குயிரோநீதி
முறைமையுஞ்சொன்னேனந்த மொய்குழல்நல்லதங்கை
அருமையதாகநீயும் அன்புடன்பாதுகாத்து
திறமையாயாசுசெய்து செழிப்புடன்வாழ்குவாயே.

வசனம். கேளாய் குமாரனே! என் அரசும் செங்கோலும் உனக்கு அளித்தேன். அன்றியும் சகலமன்னநீதியார்க்கமும் எடுத்து உரைத்தேன். உன்னுடன் அருமையாகப் பிறந்த நல்லதங்கையின் மனம் கோணாமல் இதுவரையில் எவ்விதம் பாதுகாத்து வந்தோமோ அதற்கு இரண்டத்தனையாகப் பாதுகாத்து, நற்செய்கையும் தீரத்தனமும் படைத்த ஒரு அரசனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து அதற்கு உண்டாகிய சீதனவரிசைகளைத் தந்து சுகமாக வாழ்ந்திருக்கக்கடவது. நான் அரண்மனைக்குச் செல்லுகின்றேன்.

### நல்லண்ணன் வசனம்

தந்தையே! தங்கள் திருவுளப்படியே நடப்பதற்குச் சித்தமாய் இருக்கின்றேன்.

### நல்லண்ணன் கவி

வையகமுழுதும்வாழ்க மகாவேதம்வாழ்கதிங்கள்
பெய்யுமும்மாரிவாழ்க போகைங்கள்தன்னில்
செப்புமாதவத்தோர்வாழ்க செங்கோலென்கையில்வாழ்க
அப்பனுஞ்சொக்கநாதர் அருட்பதம்போற்றிபோற்றி.

வசனம் இந்த ஈரேழு பதினாலுலோகமும் நான்கு வேதம் ஆறுசாஸ்திரம் பதினெண்புராணம் தொண்ணூற்றாறு தத்துவம் வாழ்க. மாதமும்மாரிபெய்து மாதவத்தோராகிய ரிஷியீஸ்வரான் முதலாகிய வேதவேதியர்கள் வாழ்க. அன்றியும் லோகமாதாவாகிய மீனாட்சியம்மையார் சமேதராகிய சொக்கநாதருடைய பாதாரவிந்தங்களுக்குப் போற்றி போற்றி.

## தேச விசாரணை

இராஜன் — மந்திரி தேவாலயங்களில் பூசை
மாறாமல் நடக்கின்றதா,

மந்திரி — மன்னனே திரிகாலபூசை தவறாமல்
மகிழ்ச்சியாய் நடக்கின்றது.

இராஜன் — சொந்தநற்குடிகள் சோராதிருக்க
தொடர்மழை பெய்கிறதா;

மந்திரி — துயனே மாதமும் மாரியும்பெய்து
சுகமாக வாழ்கின்றனர்.

இராஜன் எந்தனரசக்குப் பகுதிகட்டுமன்னர்
எல்லாரும் கட்டினரா,
மந்திரி ஏந்தலேபற்பல அரசரும்பகுதி
இச்சையாய்ச் செலுத்திவிட்டார்.

பொது வசனம்

இவ்விதமாக நல்லண்ணமகாராஜன் மதுராபுரியை மநுநீதி தவறாமல் செங்கோல் செலுத்திவருங்காலத்தில் காசிராஜனானவன் நல்லதங்கையை விவாகஞ் செய்துகொண்டு போகத்தக்கதாக நல்லண்ணனிடம் வருகிறவிதம் காண்க.

காசிராஜன் வருகிற கவி

சங்கினந்தவழ்நீர்நாடு சகலமுந்தழைக்குங்காசி
தங்கியேயரசாள்வேந்தன் தன்மனத்துதித்தநல்ல
தங்கையைவிவாகஞ்செய்யத் தமிழ்மணங்கமழுகின்ற
துங்கமாமதுரைதேடி துரிதமாய்வருகின்றானே.

தரு. பல்லவி

இராஜன்வந்தானே மதுரைநாடி
இராஜன்வந்தானே

அநுபல்லவி

இராஜன்வந்தானிதோ தேசம்புகழுகின்ற
நேசமாய்தென்மதுரைக்கு ஆசையதாகவே இரா

சரணங்கள்

பகலவனென்ன சிரசில் இரத்தினமகுடமின்ன
தகதகவென்னமிக்க மகரகுண்டலந்தைக்க
வெகுரத்தினமாணிக்க புஜகீர்த்தியும்பளிக்க இ
அணிமார்பிலங்க செம்பொன் நவமணிமாலைதுலங்க
பணிகளிலங்கநல்ல அணிபொன்கடகமாட
துணைவேந்தர்களுஞ்சூழ மணமாலையுஞ்சூட இ
வேதியர்சூழ சங்கீதராகம் வேசையர்பாட
சோதிகுலத்துதித்த நீதிவேந்தனென்ன
நீதிகட்டியங்கூற நிறைந்தவீரர்கள்கூட இ

பொது வசனம்

அகோதெப்படியென்றால், காசிராஜனானவன் நல்லதங்கையை விவாகஞ் செய்துகொள்வதற்காக சகல ஆடம்பரத்துடன் மதுராபுரியை நாடிச் சென்றபோது அதைக் கேள்வியுற்ற நல்லண்ணமகாராஜனானவன் எதிர்கொண்டு அழைக்கும்விதம் காண்க.



நல்லண்ணராஜன் கவி

தாரணிபுகழுங்காசி தன்னைபேயாளுகின்ற
பேரணிமனனவாரும் பிரியமாய்மதுரைநாடி
சீரணிவேதியர்களோடு சிறப்புடன்வந்தஅந்த
காரணமறியச்சொல்லும் கதிரவன்குலத்துவேந்தே.

வசனம். வாருங்கள் காசிமாநகரையாளும் சூரியகுலத்தரசனே! நீர் பிரியமாய் இந்த தென்மதுராபட்டணத்தை நாடிவந்த காரணம் யாது? சந்தோஷமாய் என்னிடம் சொல்லும் ஐயா.

காசிராஜன் கவி

பாண்டிநாடாளுமன்னா பகருவேன்கேளுங்காசி
ஆண்டிடுமெனக்குகந்த அரசியைமணக்கவந்தேன்
வேண்டியபரியமபத்து லட்சம்பொன்தாரேன்மாலை
பூண்டிடநல்லதங்கையை புகழ்மணஞ்செய்விப்பீரே.

வசனம். கேளும் நல்லண்ணமகாராஜனே! நான் உமது தங்கையை மாலையிடுவதற்காக வந்தேன். இதோ பிடியும் பரியம் பத்துலட்சம் பொன் அரசனே.

நல்லண்ணமகாராஜன் வசனம்

கேளும் மந்திரி! எனது தந்தை சிவலோகபிராப்தி யடைந்த பொழுது என் தங்கையின் கரத்தை என்னிடத்தில் பிடித்துக் கொடுத்து மநுநீதி தவறாது அரசாளும் இராஜகுமாரன் எவனோ அவனைக் கண்டறிந்து அவனுக்கு விவாகம் முடித்துவைக்கும்படி யாய்ச் சொல்லியிருக்கிறார். அவரது திருவாக்கின்படி நாம் நமது நல்லதங்கைக்கு உகந்த மணாளனை தேடாததற்கு முந்தியே தக்க புருஷனாக நமது காசிராஜனை தாமே தேடிவந்துவிட்டார். ஆனகயால் திருக்கலியாணத்தை உடனே முடித்துவைக்கலாம் மந்திரி புரோகிதரைக்கொண்டு நாள்குறித்துவிடும். இதற்குள் அந்தப்புறஞ்சென்று என் தங்கையினிடம் அறிந்து வருகிறேன். ஐயா காசிராஜனே! நீர் சுகமாக இந்த விடுதியில் எழுந்தருளியிரும்.

மந்திரி வசனம்

தங்களுடைய கட்டளையின்படி செய்கின்றேன்.

நல்லண்ணன் வசனம்

வாராய் எனது அருமைத் தங்கையே! மங்களகரமான சேதி பொன்று உனக்காகக் கொண்டுவந்தேன்.

நல்லதங்கை வசனம்

தங்களுடைய கிருபை என்னுடைய பாக்கியம். நமஸ்கார் அண்ணா.

### நல்லண்ணராஜன் கவி

என்னிடதங்கையேகேள் இகலிலாகாசிவேந்தன்
தன்னிகரில்லான்வேத சாஸ்திரமுணர்ந்தோன்சீலன்
அன்னியமாதர்போக ஆசையாமவலையிற்சிக்கான்
உன்னையேமாலைசூட வந்தனனென்றெப்பினேனே.

### நல்லண்ணராஜன் வசனம்

வாராய் எனது அன்பிற்குரிய தங்கையே! பகைவரென்பவரில்லாதவன், தனக்கு நிகரில்லாதவன், வேத சாஸ்திரங்களை புணர்ந்தவன், சீலமுடையவன், பிறருடைய தாரத்தின்மேல் இச்சைவைக்காதவன், அப்படிப்பட்ட காசிராஜன் என்பவர் உன்னைக்கோரி மாலையிட வந்திருக்கிறார், நானும் ஒப்புக்கொண்டேன். உன்னுடைய கருத்தை வெளியிடுவாய் அம்மா தங்கையே.

### நல்லதங்கை தரு

பல்லவி

என்னநான் சொல்லுவேன்    அண்ணா உமக்கு
ஏதுநான் சொல்லுவேன்

அநுபல்லவி

தன்னம்புவியிற்றந்தை    தமையன்மொழியிரண்டோ
தன்னிமொழிகளிபெண்கள்    தானுரைப்பதுமுண்டோ என்

சரணம்

பொன்னுடன்பிறந்தாலும்    பொறுமையிருக்கவேண்டும்
புகழுடம்பெடுக்கவே    பெண்கள்நடக்கவேண்டும்
தனனிகரில்லாது    கற்பையுங்காக்கவேண்டும்
தந்தைபுருடனபிள்ளை    தமையனசொலகேட்கவேண்டும் என்

### நல்லதங்கை கவி

அண்ணாவேவுமதுசொல்லே அருளமொழியாகுமாகும்
எண்ணியபடியேசெப்பும் எனககவரேமணாளன
விண்ணொடுமண்ணைக்காக்கும் விமலசொகேசநாதா
புண்ணியபுருஷன்வாய்த்தார் போற்றினின்பாதம்போற்றி.

வசனம். கேளும் தமையனாரே! பூமியில் பெண்ணாய்ப் பிறந்தவர்கள் முதலில தகப்பனாரிட சுவாதீனததிலும், விவாகமானபின புருஷனிட சுவாதீனத்திலும், அதற்குப்பின முதியவயதில் பிள்ளையின சுவாதீனத்திலும இருக்கவேண்டுமென்று முனனோர்கள் கூறியிருக்கிறார்கள். ஆதலால என்னுடைய இந்த இளம்பிராயத்தில தந்தைக்கு அடங்கி நடக்கவேண்டும. அவரிலலாதபடியால் அவருக்குப்பதிலாக உமது வார்த்தைக்குப் பதில சொல்லாமல உமது மனம் போல நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன் அண்ணாவே.



### பொது வசனம்

இப்படியாக நல்லண்ணமகாராஜனானவன் நல்லதங்கையினுடைய மனோபீஷ்டத்தைக் கண்டறிந்து மந்திரிமூலமாக அந்தணர் நல்ல நாள் குறிக்க, நகரை அலங்கரித்து ஐம்பத்தாறுதேசத்து அரசர்களுக்கும் மணவோலை பனுப்பி, யாவரும் வந்துசேர்ந்தபின் முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கருடர் காந்தருவர் கின்னரர் கிம்புருடர் சித்த வித்தியாதரர்களும் அறிய, வேதியர்கள் முன்னிலையில் விவாகம் நடக்கும்விதம் காண்க.

## திருக்கலியாண வைபவம்

### காசிராஜன் தரு

பல்லவி    காசிராஜன்

கட்டினனே தாலி
கட்டினனே தாலி

அநுபல்லவி

கட்டினனேநல்ல    தங்கையுளமகிழ
தொட்டுவேதியர்தர    சுமங்கலிகள்புகழ    கட்டி

சரணங்கள்

அம்பிவலமாக    அரசாணிமுன்பாக
அரகராசிவனேயுன்    னருளென்றுமெம்பாக
செம்மையாய்த்தாலியைக்    கட்டென்றுகும்பாக
சிறந்தபெண்கள்கூற    திகழ்மன்னனன்பாக    கட்டி

வாழிவாழியென    வாழ்த்துபெரியோர்கூற
வளர்விளக்கெடுக்கின்ற    மங்கையர்புறஞ்சார
ஆழிசூழ்புவியினர்    அறியமேளமொலிக்க
ஆடிப்பாடிகுடிகள்    எல்லோருஞ்சம்மதிக்க    கட்டி

தாசிவேசையாட    சங்கீதந்தமிழ்ப்பாட
தரணியாளரசர்கள்    சபாஷென்றுகொண்டாட
மாசில்லாத்தேவரும்    மலர்மாரிசொரிந்திட
மங்கைநல்லதங்கை    கழுத்துக்குனிந்திட    கட்டி

வேதியருக்குப்பட்டு    வேஷ்டிதட்சணைதந்து
வேந்தர்முதல்யாவர்க்கும்    விருந்திட்டுபசரித்து
ஆதிபனாதிகட்கு    அன்னந்துணிமணியீந்து
அவரவருக்குத்தகுந்த    உபசாரமும்புரிந்து    கட்டி

### பொது வசனம்

இவ்விதமாக காசிராஜனுக்கும் நல்லதங்கைக்கும் திருமணக்காட்சி நடந்தேறினபிறகு, நல்லண்ணமகாராஜனானவன் அவரவர்கள் அந்தஸ்துக்குத் தகுந்தபடி சந்தனம் புஷ்பம தாம்பூலம் முதலிய மரியாதைகளும் போசனமும் நடத்திவைத்து சகலரும் கண்டு சந்தோஷிக்கும்படியாக நல்லதங்கைக்கு சீதனம் அளிப்பது காண்க.

## சீதனச் சிறப்பு

நல்லண்ணன் தரு

பல்லவி

சீதனம் தந்தேனம்மா தங்காயுனக்கு
சீதனம் தந்தேனம்மா

அநுபல்லவி

சீதனங்களில்லையென்று தியங்காதேமயங்காதே
கோதையரேமனங்களிக்க கொடுத்தேன்குறையாதே சீத

சரணங்கள்

உட்கார்ந்துமோர்கடைய முக்காலிபொன்னாலே
உச்சிதமாம்மத்துகள் நவரத்தினங்களாலே
அக்கரையாயணைக்கும் அணைகயறும்பொன்னாலே
அணியாகப்பாத்திரங்கள் அபரஞ்சிப்பொன்னாலே சீத
சாருமணைகட்டில் சந்தனமரத்தாலே
சாய்ந்தாடும்ஊஞ்சல்தொட்டில் தந்தியின்தந்தத்தாலே
பாரில்போடும்நல்ல பாய்களும்பட்டாலே
பாவையர்விளையாடும் பதுமைமாணிக்கத்தாலே சீத
மாணிக்கம்மரகதம் ஆணிப்பொன்மேல்கொடுத்து
வச்சிரமணிபதக்கம் உச்சிதமாயெடுத்து
வேணப்பணிகளெல்லாம் தோணவுனக்குத்தந்து
விலைமதிக்காதகோடி அபரஞ்சிப்பட்டெடுத்து சீத
பட்டுநிறைந்திருக்கும் பாற்பசவுங்கன்றுகளும்
பால்சொரியுமெருமைகளும் பகர்வெள்ளை ஆடுகளும்
திட்டமாய்நஞ்சைபுஞ்சை திரளாகபானைகளும்
தென்னைவாழைமாபலா தேன்சொரியும்தோப்புகளும் சீத
பட்டணத்தைக்காக்கப் படைமன்னர்வீரர்களும்
பாக்குநறுக்கித்தரும் பாவையரும்சேவகரும்
இட்டமுடனேதந்தேன் ஏதுகுறைநீதாரும்
இத்தனைசீதனமும் என்னிடம்பெற்றாளும் சீத

நல்லண்ணன் கவி

மனமதுமகிழ்ந்துதந்த வரிசைசீதனங்களெல்லாம்
மனமதுமகிழப்பெற்று மாநகரதனைச்சேர்ந்து
மனமதுமகிழ்ந்துவுந்தன் மணவாளன்நீயுமாக
மனமதுமகிழ்ந்துநன்றாய் வாழ்ந்துநல்லரசாள்வாயே.

வசனம். கேளும் எனது அருமையான தங்கையே! உனக்கு இந்த சபையில் நிறைந்திருக்கும் இராஜராஜர்கள் களிக்கும்படி நான் கொடுத்த சீதனவரிசைகளெல்லாம் நீ சந்தோஷமாகப் பெற்றுக் கொண்டு உன் நகரஞ்சேர்ந்து உன் நாயகனும் நீயும் சந்தோஷமாக வாழ்ந்து சுகசீவியாக இருக்கக்கடவது.



நல்லதங்கை கவி

மாந்துளிரன்னாசிந்தா வகையமுதூட்டியென்னை
சூழ்ந்துசீராட்டியுந்தன் தோள்மீதும்மார்பின்மீதும்
வாய்ந்தெடுத்தூஞ்சலாட்டி வளர்த்ததைக்கொஞ்சமேனும்
ஆய்ந்துமேபாராதென்னை ஆளன்பின்போவென்றீரே.

வசனம். கேளும் தமையனாரே! என்னை நம்மை ஈன்ற தாய் தகப்பனாருக்கு மேலாக நான் பசித்திருக்கப் பாராமல் அமுதூட்டி உமது மார்மேலும் தோள்மேலும் வைத்து வளர்த்து இப்போது மனதிரங்காமல் போகும்படி சொல்லலாமா அண்ணாவே.

நல்லண்ணன் கவி

உனக்குநான்செய்தகுற்றம் ஒன்றுமேயில்லைசெல்வம்
மனக்குறையின்றிதந்தேன் மதுரைமீனாட்சிசொக்கர்
தனக்குநீதிபுரிந்து தரணிதன்மாதர்போலே
சினக்குறியொழிந்துக்காசி சேர்ந்துநாடாளுவாயே.

வசனம். கேளாய் தங்கையே! உனக்கு நான் யாதுகுற்றம்செய்தேன், உன் செல்வத்துக்கு என்ன தாட்சியிருக்கிறது. நீ விசனப்படவேண்டாம், நீ சந்தோஷமாக இப்பிரபஞ்சத்தில் உன்னைப்போல் இராநின்ற ஸ்திரீகள் வாழ்ந்து வருவதுபோல நீ உன் பட்டணஞ் சென்று வாழ்ந்துவந்தால் எனக்கும் பார்ப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் அழகாயிருக்கும், போய்வருவாய் தங்கையே.

நல்லதங்கை தரு

பார்ப்போர்க்கழகாமென்று தீர்க்கமாகவேசொன்னீர்
வார்த்தையிதென்னவுமக்கு ஏற்குமோ அண்ணாவே
பாவையருடனேநான் மேவியிருந்தேனே
போவென்றுசொல்லிட நாவதுவந்ததோ பா

நல்லண்ணன் தரு

வந்ததென்றுரைத்தாய்நீ சிந்தையிலென்னகுறை
அந்தமாய்சீதனங்கள் தந்தேனேகங்கோடி
வாய்மொழிதவறாத் தாயேவுன்நகர்க்கே
நேயமதாகவே போய்வருவாயே வந்

நல்லதங்கை தரு

அண்ணாஎனக்கொன்றானால் உன்கண்ணிற்பட்டதுபோலே
எண்ணியெனைவளர்த்து நன்றாகவைத்திருந்து
அந்தமதாகவுன் சிந்தையுமகிழ
எந்தன்மனமது நொந்திடவேசொன்னீர் அ

நல்லண்ணன் தரு

எந்தனுடன்பிறந்து வளர்ந்தவென்தங்கையே
சிந்தனைப்படவேண்டாம் உந்தன்நகருக்கேகி

இருந்திடுமம்மா சிறப்புடனுனையான்
விருந்திட்டழைக்கிறேன் மறந்திடவேயில்லை எ

நல்லதங்கை தரு

சேலையையுங்கட்டி மாலைமலர்முடித்து
மேலாபரணம்போட்டு காலில்சதங்கையிட்டு
சின்னயிடைதுவள என்னைவளர்த்துவிட்டு
பின்னேயிருந்தமன துள்ளமகிழ்ந்தஅண்ணா சே

நல்லண்ணன் தரு

உன்னழகுக்கேற்ற மன்னவன்வந்துவாய்த்தார்
என்னிலுமதிகமாய் அன்னவருன்னைமேலாய்
ஒப்பிடுவாரினி செப்பிடக்கேளாய்நீ
தப்புரையேனுனக் கிப்பொழுதம்மா உ

நல்லதங்கை தரு

மடிமேலெனைவளர்த்தி அடியாதழுதளித்து
துடாவரசர்பின்னே கடவுமென்றேயுரைக்க
வந்ததோமனது எந்தனைப்பிரிய
சிந்தனையேயிது விந்தையதாகவே ம

நல்லண்ணன் தரு

தாயேநீசொல்வதெல்லாம் ஞாயமல்லவே அம்மா
தூயமதியுரைக்க வேண்டியதில்லைசும்மா
தங்கையேநீசெல்லு அங்கொருதீதில்லை
துங்கன்காசிராஜன் மங்களமாய்க்காப்பார் தா

நல்லதங்கை கவி

அப்பனன்னைக்குமேலாய் அருமையாயெனக்கெப்போதும்
மூப்பழம்பாலூட்டி முகஞ்சுளிக்காமல்நல்ல
கைப்பொருள்தனைப்போலும் கண்ணிமைபோலுங்காத்து
இப்பொழுதேயனுப்ப இசைந்ததோமனந்தானண்ணா.

வசனம். கேளும் தமையனாரே! என்னை தாய் தகப்பனுக்கு மேலாக பாதுகாத்து மகா செல்வமாகவளர்த்து இப்போது அனுப்ப எவ்விதம் மனம் துணிந்ததோ அண்ணாவே

நல்லண்ணன் கவி

தங்கையேகேளாய்பேதை பெதும்பையுந்தாய்க்கடக்கம்
மங்கையுமடந்தைசேர்ந்த மணாளனுக்கடக்கமம்மா
சிங்கமாமகனிடத்து தெரிவைபேரிளமடக்கம்
எங்கினுமுரைக்கக்கேட்டும் இப்படிபகரலாமோ.

வசனம். கேளும் தங்கையே! இப்பிரபஞ்சத்தில் ஸ்திரீகள் தங்கள் வாழ்நாளில் இருக்கவேண்டிய இடங்களையும் காலங்களையும்



சொல்லுகிறேன் கேட்பாயாக. நல்ல குலத்திற் பிறந்த பெண்ணானவள் பேதை பெதும்பை என்கிற பதினாறு வயதுவரையில் தன் தாயார் வீட்டிலும், மடந்தை தெரிவை பேரிளம்பெண் என்கிற நாற்பதுவயதுவரையில் தன்புருஷன் அடக்கத்திலும், அதற்குமேல் தன் புத்திரன் பாதுகாப்பிலுமாக இருக்கவேண்டும். இதுவே தரும சாஸ்திரத்தின் கட்டளை. ஆதலால் உன் வயதுக்குத் தக்கபடி உனக்குப் புருஷன்வந்து வாய்த்தபடியால் நீ மணாளனுடன்சென்று அவருக்கு அடங்கி வாழவேண்டும், என் அருமை சகோதரியாகிய நல்லதங்கையே.

நல்லதங்கை கவி

முதியவர்மொழிந்தநீதி முன்னவாகேட்டேனிந்தப்
பதியிலுள்ளோருமெந்தன் பகங்கினிஅண்ணியாரும்
மதியுடனெனையனுப்ப மன்னவர்பின்னேயானும்
துதிபெருங்காசிதேசம் துணிந்துமேசெல்லுவேனே.

வசனம். அண்ணா! தாங்கள் பெரியோர்களாயுள்ளபேர்கள் உரைத்துள்ள நீதிமுறைகளை எனக்கு ஓதினீர். நமது மதுராபுரிபட்டணத்திலுள்ளவர்களும் தாங்களும் எனது அண்ணியாரும் புத்தியுடன் அனுப்ப, என்னுடைய பர்த்தாவின் பின்னே பலபோதும் ஸ்தோத்திரஞ் செய்யாநின்ற காசிமாநகரம் போய்வருகின்றேன் அண்ணாவே.

நல்லண்ணன் வசனம்

மகாராசியாகப் போய்வருவாய் அம்மணி.

காசிராஜன் வசனம்

ஓய் நல்லண்ணமகாராஜனே! எனக்கும் விடைதாரும் போய் வருகிறோம்.

நல்லண்ணராஜன் வசனம்

நல்லது போய்வாரும். என் தங்கையின் முகம் கோணாமற் படிக்கு சாட்சாத் சோமசுந்தரக்கடவுள் கிருபாகடாட்சத்தினாலே புத்திர பாக்கிய முதலான சகல சம்பத்தும் பெற்று சந்தோஷமாக வாழ்ந்துவாக்கடவீர் காசிமாநகர்க்கு அதிபதியே.

காசிராஜன் தரு

பல்லவி

வழிகொண்டு நடந்தார் காசிராஜன்
வழிகொண்டு நடந்தார்

அநுபல்லவி

விழிகொண்டமடமாது தொழஅண்ணன்வாழ்த்திட
எழுமூரசொடுகூட முழவார்த்தமுழங்கிட வழி

### சரணங்கள்

விடைகொண்டுநடந்தார் சகலமன்னர்
உடனின்றுதொடர்ந்தார்
நடையின்றிநடந்தனர் அடவிதனிலேயெங்கும்
புடைசூழ்ந்துவருவோரை நடவுமென்றேயுரைத்து வழி

முனைகொண்டுநடந்தார் மதுரைவிட்டு
அனைவருந்தொடர்ந்தார்
இணையில்லாதாசனர் மனைவியுஞ்சிவிகைமேல்
மணமாலையுடன்வர அனைவரும்புடைசூழ வழி

மன்னர்புகுந்தார் நகரிலுள்ளோர்
பலபேரும்புகழ்ந்தார்
முன்னேவேதியர்கூட பின்னேவித்வான்கள்பாட
கன்னியர்நடமாட தன்னகர்சேர்ந்தார் வழி

### பொது விருத்தம்

மன்னவன்காசிராஜன் மனைவியுந்தானுமாக
தன்னகர்புகுந்துநல்ல சதுர்மணக்கோலம்வந்து
அந்நகருள்ளோரெல்லாம் அன்புடன்கண்டுபோற்ற
தன்னிடவாசையாண்டு தருமத்தைக்காத்திட்டாரே.

வசனம். இவ்விதமாக காசிராஜனும் நல்லதங்கையும் தமது காசிமாநகரைச்சேர்ந்து நகர்க்கோலம்வந்து அந்நகரத்திலுள்ள சகலமானபேரும் தம்மை வாழ்த்திப் போற்றவும், மந்திரி பிரதானிகளுடன் தருமம் தப்பாமல் தன் அரசைப் பரிபாலித்து கடவுள் அருளால் நல்லதங்கையம்மனவள் வருடம் ஒன்றுக்கு ஒருபிள்ளையாக ஏழுபிள்ளைகளைப்பெற்று சுகமாக வாழ்ந்துவருங்காலத்தில் காசிமாநகரில் பெரும் பஞ்சம் தோன்றியவிதம் காண்க.

## காசிராஜன் தேசவிசாரணை

### காசிராஜன் விருத்தம்

மூத்திக்குவித்தேபோற்றி மூவுருவெடுத்தாய்போற்றி
எத்திக்கும்புகழுங்காசி எழுந்தவெம்பெருமபோற்றி
சத்திக்குபாகமீந்த சதாநந்தத்தேவேபோற்றி
பத்திக்குப்பலனையீயும் பராபராபோற்றிபோற்றி.

### மந்திரி வசனம்

இந்தக் காசிமாநகர்க்கு அதிபதியாகிய எங்கள் இறைவனே! உமது பாதாரவிந்தங்களுக்கு வந்தனம் ஐயா.



### இராஜன் வசனம்

எனது சிரேஷ்ட மந்திரி! நமது நாட்டை உன்னிடம் ஒப்புவித்து மதுராபுரிக்குப்போய் நான் விவாகஞ் செய்துகொண்டு திரும்பிவர வெகுநாளானபடியால் இன்று நாட்டின் வளப்பத்தைக் கேட்க விருப்பமடைந்தேன் சொல்லுவாயாக.

### மந்திரி வசனம்

இராஜராஜேஸ்வரா! நமது நாட்டை எக்காலத்திலும் எட்டிப் பாராதிருந்த பஞ்சமென்பது தோன்றி பதினொரு வருஷகாலமாய்க் குடிகளை இடைவிடாமல் இம்சித்து வருவதுமன்றி அவரவர்களுடைய ஆடு மாடு முதலியனவும் மாண்டு வயிற்றுக்கு இல்லாமல் வாடி வதங்கி மாள்கின்றார்கள் அரசே.

### இராஜன் வசனம்

ஹா ஹா! அப்படியா! இதுவரையில் எனக்குத் தெரியாமற் போயிற்றே.

### மந்திரி வசனம்

அந்தக் குடியானவர்களும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இதோ வந்துவிட்டார்கள் மகாராஜனே.

## குடிகள் வருகிற தரு

### பல்லவி

குடிகள் நாங்களே காசிவாழ்
குடிகள் நாங்களே

### அநுபல்லவி

குடிகளாய்வாழ்ந்தோம் குறையொன்றுமில்லாமல்
துடிதுடித்திடபஞ்சம் தோன்றியதேசொல்லாமல் குடி

### சரணங்கள்

படிமிசைபதினொரு வருஷம்மழைகொட்டாமல்
பச்சைப்புல்மாஞ்செடி கொடிகளுங்கிட்டாமல்
மிடியினால்வயிற்றுக்குக் கஞ்சியுமெட்டாமல்
மெதுவாகவந்திட்டோம் காத்திடும்அசட்டாமல் குடி

வீடுவாசல்விற்றோம் விளையும்பூமியைவிற்றோம்
விசித்திரகால்நடைவிற்றோம் வேணபணிகள்விற்றோம்
வாடும்பசியால்நொந்து வந்துமதுஅடிபெற்றோம்
வள்ளலேகாத்திடும் இனிநாங்கள்உம்சுற்றம் குடி

பிள்ளைகுட்டிகளெம்மை அண்டாமற்போச்சுது
பெற்றவர்கள்பேச்சு திண்டாட்டமாச்சுது
கொள்ளைக்காரர்கள்புகும் கொண்டாட்டமாச்சுது
கொடியபஞ்சத்தில்காரும் நாங்கள்சொல்பேச்சிது குடி

ஏழைக்குடிகளைக் காப்பதுவேந்தனே
இதையறிந்துப்பாரும் அரசர்க்குள்சாந்தனே
வாழைபடிவாழை பாகவாழ்காந்தனே
வந்துபஞ்சத்திலெமை வளர்ப்பாயானந்தனே குடி

குடிகள் வசனம்

அரசர்க்கரசனே! நம்முடைய நாட்டில் சுமார் பதினொருவருஷ காலமாய் மழையென்பதே பெய்யாமல் மானம் சதிசெய்தபடியால் இதனால் உண்டான பெரும்பஞ்சத்தில் எங்களுக்கு உண்டாயிருந்த சகல பொருள்களையும் விற்றும், வயிற்றுக்குப் போதாமல் கட்டக்கந்தையுமின்றி வாழ்நாள கழிக்கமுடியாமல் ஆணொருதேசமும் பெண்ணொரு தேசமும அலைந்து திரிந்து வருந்தி கடைசியாக வந்து தங்கள் அடியில் அடைக்கலம் புகுந்தோம். இனி எங்களைக் காப்பது தங்கள் பாரமாகும, அப்படிக்கு இல்லாவிடில் காட்டுக்குப் போய் விடுகிறோம் மகாராஜனே.

காசிராஜன் வசனம்

குடிகளே! நீங்கள் ஆரண்பம் செல்லவேண்டாம், ஜெகதீசன் அருளால் என்னாலானவரையில் என் குடிகளாகிய உங்களைக் காப்பாற்றுகிறேன் பயப்படாதீர்கள்.

காசிராஜன் விருத்தம்

மந்திரிபஞ்சத்தாலே வருந்துமிக்குடிகளுக்குச்
சிந்தனைசெய்யாமலநீயே சிறந்தகமபொக்கிஷத்தில்
முந்திவேண்டியதைத்தந்து முகந்தனைக்குளிரச்செய்வாய்
ப்ரதிகம்மாலேயாகும பெருமபொருள்சேர்க்கத்தானே.

காசிராஜன் வசனம்

மந்திரி! நமது நாட்டில் தோன்றியிருக்கும் இப்பஞ்சகாலத்தில் பொன்னென்றும் பொருளென்றும் பார்க்கக்கூடாது. குடிகளாலேயே அரசன் ஜீவிப்பது. அப்படிப்பட்ட குடியானவர்களுக்கே தீங்கு நேரிட்டால் அவர்களை யார் காப்பாற்றுவது அரசனல்லவா; ஆனபடியால் நம்முடைய கஜானாவைத் திறந்து எவ்வளவிருந்தாலும் அவர்களுக்குத் தக்கபடி ஆலஸ்யஞ்செய்யாமல் பாகித்துக்கொடுத்து அனுப்புவாய் மந்திரி.

மந்திரி வசனம்

தங்களுடைய திருவுளப்படியே கொடுத்தனுப்புகின்றேன். வாருங்கள் காசிமாநகரத்துக் குடியானவர்களே! இதோ இந்த பொக்கிஷத்திலிருக்கும் தலைமுறைகண்ட திரவியங்களைச சிந்தாமல் எடுத்துக்கொண்டுபோய் ஜீவித்துக்கொள்ளுங்கள் குடிகளே.



காசிராஜன் தரு

பல்லவி

எப்படிமனங்கொள்ளுவேன் இந்தக்காலத்தை
எவ்விதமாகத்தள்ளுவேன்

அநுபல்லவி

செப்புமுலகந்தனில் செங்கோலதனைநானே
கைப்பிடித்தாள்முதல் காலமிப்படிகாணேன் எப்

சரணங்கள்

வருஷமீராறகவே மழையேயில்லாமற்போச்சே
வரவரக்காலமும் வளராமல்குறைவாச்சே எப்
மெச்சும்பணிகளெல்லாம் விலைக்குவிற்றுண்ணலாச்சு
மேலானவாழ்வுக்கு தாழ்வுவந்தடைந்ததே எப்
தாழ்வானஅரசர்க்கும் தாழ்ந்தவனானேனே
சதிகாரதெய்வத்துக்கு தயவுமிப்படியாச்சே எப்
அடவுடனிருந்தவென் ஆஸ்தானம்விற்றுண்டு
ஆச்சதென்செய்குவேன் அலைகிறேன்மனம்விண்டு எப்

பொது விருத்தம்

தெய்வமுஞ்சதிநமக்குச் செய்ததென்றெண்ணிமன்னன்
உய்யதன்னுள்ளம்நொந்து ஓவென்றுபுலம்பும்போது
மைவிழியானமாது மங்கைநற்றங்கையாளும்
துய்யதன்மக்களோடு துயரங்கொண்டேங்குவாளே.

வசனம். இவ்விதமாக காசிராஜன் புலம்பிக்கொண்டிருக்கையில் அவர் தேவியாகிய நல்லதங்கையம்மன் தன் குமாரர்களைப் பார்த்து துயரத்துடன் புலம்புவது காண்க.

நல்லதங்கை சொல் கண்ணிகள்

பன்னிரண்டுஆண்டாய் பாரில்மழையில்லாமல்
பாதவித்திடபஞ்சம் தெய்வமே
இந்நிலந்தனக்கென்று எங்களுக்காகவே
ஏற்பட்டுவந்ததையோ தெய்வமே
சீராகவந்தமுதல் தோராதனேகநாளாய்
ஜெயமாகவாழ்ந்துவந்தோம் தெய்வமே
வாராதபஞ்சம்வந்து மீளாதுயிரைக்கொல்ல
வந்ததேயென்னசெய்வேன் தெய்வமே
கணவனும்நானுமாக களிப்பாகவாழ்ந்திருந்த
காலங்களெல்லாம்போச்சே தெய்வமே

அள்ளியுண்ணும்பிராயப்　　பிள்ளைகளெல்லாமிப்போ
　அவதிப்படுகின்றாரே　　தெய்வமே
ஓடியலைந்திடினும்　　உண்டென்றீவாரைக்காணேன்
　உலகத்திலெங்குமையோ　　தெய்வமே
நாடிக்குலைந்துமனம்　　வாடியலையலானோம்
　நாதனும்நானுமாக　　தெய்வமே
கொண்டசீதனமெல்லாம்　　கண்டவிடத்தில்விற்று
　குழம்பியழுகிறோமே　　தெய்வமே
மண்டலத்தோரறிய　　மாலைதவிரநகைகள்
　மற்றதெல்லாம்விற்றுவுண்டோம்　　தெய்வமே
தாலிதவிரமற்ற　　தங்கநகைகளெல்லாம்
　தவிட்டுக்குமாற்றலானோம்　　தெய்வமே
சேலைதவிரமற்ற　　செம்பொன்னெல்லாம்விற்றுண்டு
　திகைத்திடக்காலமாச்சே　　தெய்வமே
வாதைப்படவேயெந்தன்　　மக்களையுமென்னையும்
　மண்ணில்பிறக்கவைத்தாய்　　தெய்வமே
ஆதிசிவன்செயலே　　அயனுரெழுத்திதுவோ
　அமைத்ததறிகிலேனே　　தெய்வமே

### காசிராஜன் விருத்தம்

தெய்வமேயென்றுசொல்லி திகைத்துமேயழுதிட்டாலும்
பெய்யுமோமழைதானித்தப் பெரும்புவிதழைக்குமோதான்
நையபொல்லாதகாலம் நமக்குவந்ததுவேயென்று
தையலேசொன்னால்போமோ தள்ளவுங்கூடுமோதான்.

வசனம். கேளும் பெண்ணே பிராணநாயகி! இந்த பஞ்சகாலத்தை தொலைக்க நம்மால் ஆகாதென்று சொல்லுகிறாய்; நாம் எவ்வளவு சிறுமைப்படுகிறோமோ அவ்வளவும் பெருமையுண்டாகும். வரவர காலம் செழித்து குறைவின்றி வாழ்ந்திருக்கலாம் பெண்ணே.

### நல்லதங்கை விருத்தம்

திடம்பெறவுரைக்கவந்த திண்புயத்தரசேகேளீர்
அடங்கலும்விற்றுவுண்டு அனுதியுமாகின்றோம்
இடந்தனில்காலந்தாங்க எனக்கினிமுடியாதிப்போ
விடைதாரும்தாய்வீடேகி வேந்தனேவருகுவேனே.

வசனம். கேளும் மகாராஜனே! நமது இல்லத்திலிருக்கின்ற பொருள்களையெல்லாம் விற்று உண்டு காலங்கழித்தும், இப்போது ஒருவித ஆதாரமுமில்லாமல் பரதவிக்கலாயினோம். இந்தக் காலத்தை தள்ள என்னால் முடியாது. ஆகையால் என்பிள்ளைகளை அழைத்துக் கொண்டு என் தமையன் வாழுகின்ற தென்மதுராபுரிக்குச்சென்று



நாம்படும் கஷ்டங்களை என் தமையனிடம் தெரிவித்து மக்களும் நானும் பிழைத்து வருகிறோம், விடைதந்தருளும் எனது பிராண பதமே.

### காசிராஜன் வசனம்

கேளும் பெண்ணே பிராணநாயகி! நல்லவார்த்தை சொல்ல வந்தாய். புலி இளைத்தாலும் புல்லைத் தின்னுமா? அதுபோல அரசாட்சிசெய்திருந்த நாம் இளைத்திருக்கும் இப்போது உன் தாயாருடைய இருப்பிடம்போகிறேனென்றுசொல்லுவது தகாத இழிவான வார்த்தையாகும். ஆகையால் நீ போகவேண்டாம் பெண்மணியே.

### நல்லதங்கைக்கும் காசிராஜனுக்கும் தர்க்கம்

### நல்லதங்கை தரு

அறிந்திடுவாயென்று நிரந்தரமாகவே
　அண்ணலே நீர்சொல்லலாகுமோ இந்த
　மண்ணின்மேல் மாதரெல்லோருமே
　பிறந்தஇடமதனை மறந்திடுவார்களோ
　பூவையாள்போய்வாறேன் மன்னவா　　அறிந்

### காசிராஜன் தரு

ஞாயமோபெண்ணேநீ போய்வாறேனென்றிங்கே
　நன்றல்லவே சொல்வதெல்லாம
　எண்ணங்குலையுமே இதெல்லாம்
　தாயிருந்தாநீசென்றாள் செய்வந்ததென்றுமே
　சகலமும்நடக்குமே பெண்ணே　　ஞாய

### நல்லதங்கை தரு

வழக்கிட்டுவுண்டுமே தழைத்திடும்பாலர்கள்
　வாடுதேஎன்றும் செப்பாதீர்அண்ணன்
　வீடதைத்தேடி இப்போதே
　மக்களை அழைத்துக்கொண் டேகிப்பிழைத்துநான்
　வருகிறேன் அப்படி சொல்லாதீர்என்மன்னவா　　வழக்

### காசிராஜன் தரு

வாழ்ந்து அவ்விடஞ்சென்றால் தாழ்ந்துஉபசரித்து
　வர்ணத்தடுக்கிடுவார்கள் உந்தன்
　எண்ணப்படியே நடப்பார்கள்
　வாழ்ந்துகெட்டுநொந்து தாழ்ந்தோமென்றுபோனால்
　வலதுநகைபார்களோ பெண்ணே　　வாழ்

### நல்லதங்கை தரு

சின்னவயதில்மணம் செய்தநாள்முதலாக
　திரும்பிநான்சென்றதும் இல்லையே அண்ணன்

வருகிறேனென்றவர் வல்லையே அதை
எண்ணிப்பாராமலென்னை சின்னமாய்க்கைப்பாரென்று
ஏன்சொல்லவந்தீர் மன்னவா        சின்ன

காசிராஜன் தரு

எண்ணினபடிபோக இதுவல்லகாலமும்
ஏற்கெனவேமுன்னே போச்சுதேநமக்கு
தோற்பானகாலங்க ளாச்சுதே அதை
எண்ணிநீபாரடி ஒண்ணுதநீபோக
என்சொல்லைத்தட்டாதே பெண்ணே        எண்ணி

நல்லதங்கை தரு

போனால்போதுமேஅண்ணி யானவளும்அண்ணன்
பிறந்தபிறப்பு வந்ததென்றுசொல்லி
மறந்துபோவாரோ என்னைக்கண்டு
கோணாமலென்னுடன் வீணாவார்த்தைகள்
நீர்சொல்லித்தடுக்காதீர் மன்னவா        போனால்

காசிராஜன் தரு

போய்வருகிறேனென்று தோகையரேசொன்னால்
போயறிந்தாலெல்லாம் வெளிப்படும்எந்தன்
வாயினால்சொன்னாலென்ன தெரியும்அங்கே
போகிறதைவிட ஞாயமாயிருவரும்
புல்லைவிற்றுண்ணலாம் பெண்ணே        போய்

நல்லதங்கை கவி

நகைபெறயிந்தவார்த்தை நன்றாகவெனக்குச்சொன்னீர்
தகைபெறனது அண்ணன் தழைத்துவாழ்ந்திருக்கயானும்
புகைமணமூட்டிச்சீவி பூமுடித்திடுங்கூந்தல்மேல்
இகல்பெறவிறகுபுல்லும் எடுத்திடவிதியோமன்னா.

வசனம். கேளும் பிராணநாயகா! தென்மதுரையில் என் தமையன் மகாகீர்த்தியாக வாழ்ந்து அரசாண்டிருக்க, அவர் தங்கையாகிய நான் சம்பங்கி எண்ணெயிட்டு தலைசீவி வாசமுள்ள புஷ்பங்களை முடிக்கும் என் தலையின்பேரில் விறகும் புல்லும் எடுத்து விற்பதற்கு எனக்கு என்ன தலைவிதி வந்திருக்கிறது என் பிராணநாயகா.

இராஜன் விருத்தம்

விதியெனச்சொல்லவந்தாய் விதியினாலல்லோசொக்கர்
மதிபெறவிறகும்விற்று மண்சுமந்தடியும்பட்டார்
அதிவிதஆலமுண்டு அலைக்கோட்டிலிரந்துமுண்டார்
இதுவெகுவெளிதோபெண்ணே எனக்குநீசொல்லவந்தாய்.



வசனம். கேளும் பெண்ணே பிராணநாயகி! எனக்கு என்ன தலைவிதியென்று சொல்லுகிறாய்; அந்த விதியினாலல்லவோ மதுரை சொக்கநாதர் விறகுவிற்றார்; மண்சுமந்து பிரம்பால் அடியும்பட்டார்; ஆலகால விஷத்தையும் உண்டார். ஆகையால் நீ அதை எளிதாகச் சொல்லலாகுமோ பெண்ணே பிராணநாயகி.

நல்லதங்கை விருத்தம்

என்னதான்சொன்னபோதும் இருந்திடமுடியாதிப்போ
கன்னலுங்கமுகுதெங்கு கதலிகாவனமுஞ்சூழும்
என்னண்ணன்நகருக்கேகி யிருந்துநான்வருவதற்கு
மன்னவாவிடையைத்தாரும் வழிதடுத்துரைத்திடாதீர்.

வசனம். கேளும் நாயகா! தாங்கள் என்னசொன்னபோதிலும் நான் இவ்விடமிருந்து இந்தக் கொடுமையான பஞ்சகாலத்தை தள்ளுவதற்கு முடியாது. என்றும் குறைவின்றி செழுமையாக மதுரையில் வாழ்ந்துவரும் என் தமையனிடஞ் சென்று சிலநாள் காலங் கழித்து வருகிறேன் உத்திரவு தாரும் என்துரையே.

இராஜன் கவி

புருஷர்தம்சொற்கேளாத பெண்ணெமனென்பாமேலும்
பெருநரகத்தில்வீழ்ந்து பேயெனத்தவிப்பார்கண்டாய்
இருமெந்தன்வார்த்தைகேளு இதுவுனக்கியற்கையல்ல
மருவிலாப்பெண்ணேசும்மா வல்லடிவழக்கிடாதே.

வசனம். அடி மாதரசி! கொண்ட புருஷன் வார்த்தையைக் கேளாத பெண்ஜாதி தொல்லும் எமனுக்குச் சமானமென்று பெரியோர்கள் கூறுவார்கள். அன்றியும் பொல்லாத ரவுரவாதி நரகத்தில் வீழ்ந்து தவிப்பார்களென்றும் சொல்லுவார்கள். அவர்கள் வார்த்தையைக் கடந்து நடப்பது சரியல்ல, வீணா வழக்கிடாதே; உன் தாய் வீட்டுக்குப் போகவேண்டாம் பிராணநாயகி.

நல்லதங்கை தரு

போய்வாரேன்மன்னவனே        சந்தோஷமாய்
புகலுவீரென்னுடனே
போய்வாரேனென்னிட        தாயார்வீட்டைத்தேடி
சேயரும்நானுமாய்        திருமதுரைநாடி        போ

இராஜன் தரு

போகாதேபோகாதே        என்வார்த்தையை
பூவையேதள்ளாதே
போகாதேபோகாதே        புத்திரருடனிப்போதே
ஆகாதகாலத்தில்        அடிவைக்கலாகாதே        போ

நல்லதங்கை தரு

இப்பெரும்பஞ்சத்திலே என்மக்கள்தான்
இருக்குமோகொஞ்சத்திலே
செப்பவந்நீர்பாரும் சேப்கள்செப்கோலத்தை
எப்படிதள்ளுவேன் எதிர்க்குமிக்காலத்தை இப்

இராஜன் தரு

இத்திசைவிட்டுசெல்லவே மதுரைநகர்
இங்கல்லஅங்கல்லவே
புத்திரருடனேநீ போவதற்குத்தானே
எத்தனங்கொள்வது ஏற்காதடிமானே இத்

நல்லதங்கை தரு

பிள்ளைத்துணையைவிட ஆதிசிவப்
பெம்மானுமேகூட
வள்ளலேயான்போகும் வழியினில்துணையாக
உள்ளபடிவருவார் உண்மையதாகப்போய் பிள்

இராஜன் தரு

பிள்ளைகளையழைத்துப் போகிறேனென்று
பெருமையாய் நீயுரைத்தாய்
எள்ளளவாகிலும்நீ என்சொல்லைக்கேளாமல்
தள்ளியேபோனாய் சதியாகுமீளாமல் பிள்

நல்லதங்கை தரு

சென்றிடில்சதியேன்வரும் அண்ணனிட
தேவியென்முகத்தையே
கண்டால்விடுவாளோ கண்மணிமைபோல் ...ர்த்து
தொண்டுபொருளெனக்கு கொடுப்பாளனேகஞ்சேர்த்து செ

இராஜன் தரு

கொடுப்பாளுன்தாயிருந்தாலதுமெய்தான் அண்ணன்தேவி
கொடுப்பாளென்பதும்பொய்தான்
நடக்காதவொருக்காலும் நம்பவும்போகாது
இடக்கென்னுடனேவாது இனிபேசவும்போகாது கொ

நல்லதங்கை விருத்தம்

ஆகாமல்போச்சோமன்னா அருமைபென்னண்ணிவார்த்தை
யேகமுன்சொந்தமானால் இப்படிசொல்லமாட்டீர்
போகுதுஅடிப்பாள்மீது பொருத்தம்வைத்தன்புகூர்ந்து
வேகமாய்தாய்வீடேக விடைதந்துஅருள்செய்வீரே.



வசனம். என் தமையன் பெண்சாதி என் அண்ணியார் பேச்சு என்றால் ஏனோ தங்களுக்கு ஆகாமற்போச்சுது. உமக்குச் சொந்த தமையன் தங்கையாக இருந்து போகவேண்டுமென்றால் இப்படிக் கெல்லாம் சொல்லுவீரோ; சொல்லமாட்டீர். எனக்குச் சந்தோஷமாக விடைதந்து அனுப்பும் பிராணநாதா.

இராஜன் விருத்தம்

விடைதாருமென்றுசொன்ன மெல்லியிடையாளேகோளாய்
அடவியில்சிறுவர்தன்னை யழைத்துநீபோறேனென்றாய்
மடமயிலுன்னைப்போல மன்னவன்சொற்கேளாத
திடமுளபெண்ணையானோ தேசத்திற்கண்டதில்லை.

வசனம். கேளாய பெண்ணே நல்லதங்காய்! என் வார்த்தையைக் கடந்து சிறு குழந்தைகளை அழைத்துக்கொண்டு போகிறேனென்று சொல்வது சரியல்ல. இந்தப்பிரபஞ்சத்தில் உன்னைப்போல புருஷன் வார்த்தையைத் தடுத்துப் பேசப்பட்ட ஸ்திரீகளை நான் பார்த்தது இல்லை; உன்னைத்தான் கண்டேன் பெண்ணுயகமே.

நல்லதங்கை கவி

கண்டதுமில்லையென்ற கணவனே சொல்லக்கேளீர்
மண்டலந்தன்னிலமாதர் மனுஷர்தம்அண்ணனதாய்வீடு
உண்டெனச்சொல்லிச்செல்வார் உமைப்போதுமதடைசொல்வாரை
மண்டலந்தன்னிற்கானேன மதித்தென்னையனுப்புவீரே.

வசனம். பிராணேசா! தாங்கள் சொல்லிய வார்த்தை சரியானதல்ல; இவ்வுலகத்தில என்னைப்போல பெண் புருடனிடமிருந்து மனிதர் மக்கள் அண்ணன தமபி தாய் தகப்பன வீடென்று போகவும் வரவுமில்லையோ? அப்படிப் போகப்பட்ட என்னை வேண்டாம் என்று தடுக்கும் புருஷரை நான் எங்கும் கண்டதில்லை. நான் தங்களிடம் வந்தநாளாக என் தாய்வீடு அறிவேனோ? இப்போது போவதற்கு வேண்டாமெனறு தடைசெய்கிறீர். இனித் தடைசெய்ய வேண்டாம் போய்வருகிறேன் பிராணநாதா.

காசிராஜன் கவி

போவதற்கெண்ணிநீயும் பிள்ளைகள்எழுவரோடு
தேவியேநிற்கின்றாயென் திறமைசொலதடுத்துமீறி
கேவலம்ஏகொணாது கிளைகிளைதன்னிவந்து
ஆவிசோர்சகுனமுன்னே பாருதேபாராய்பெண்ணே.

வசனம். கேளாய் பெண்ணே! என் மொழியைக் கேளாமல் உன் அண்ணன் மாளிகைக்குப் போகிறேனென்று என் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீதியிலவந்துநிற்கின்றாய். இன்னம்பொல்லாத விளையமான சகுனங்களைப் பாராய் காதலியே.

### தரு

காசி நடக்கும்போதெதிராக நல்லசகுனமில்லை
நங்கையேநீபோராய் போகவொண்ணாது
மங்கையேநீபோராய் நட

நல்ல பாருமென்றுரைத்தீரே பாலருடனேநானும்
வந்துபின்வாங்குவது அடுக்குமோதான்
எந்தலோகத்திலாவது பாரு

காசி கன்னிகழியாப்பெண் கையில்நெருப்பெடுத்து
கரும்புகைபெழுப்பிடவே வருகிறாளே
திரும்புமடமயிலே கன்னி

நல்ல ஒண்ணுதென்றுனக்கு உரைத்திடும்மன்னவரே
ஊட்டிபெந்தனைவளர்த்த என்தமையனார்
வீட்டுக்குச்சகுனமென்று ஒண்

காசி போகக்கூடாதெதிரே புதுப்பானைவருகுதேசெம்
போத்திடமாகுதடிபெண்ணே இப்போது
பேர்த்தடிவைக்கொணாது போக

நல்ல திடுக்கிடபெந்தனுக்கு செப்பியமன்னவரே
செம்போத்தைகண்டுசென்றால் உலகிலுள்ளோர்
சம்பத்துண்டாகுமென்பார் திடுக்

காசி வலிபாலும்வலமாக மாரிடமாய்க்கட்டுதே
மறுத்துவார்த்தைசொல்லாதே திரும்புவாய்பெண்ணே
எதிர்த்தசகுனம்பொல்லாதே வலி

நல்ல பொல்லாச்சகுனமென்னைக் கொல்லவந்தபோதிலும்
போய்நான்வருவேனே அண்ணன்வீட்டுக்கு
சேயருடனேநானே பொல்

காசி அடவியில்வேடர்கூடி அழுகிறாரெதிராக
அதுவும்பொல்லாச்சகுனமே விறகுதலை
இதுவும்பொல்லாச்சகுனமே அடவி

நல்ல பொல்லாச்சகுனமெல்லாம் போயறிந்துவாரேன்
புகலுவீர்மன்னவரே தடையில்லாமல்
இபனுடன்போய்வாரேன் பொல்

### காசிராஜன் விருத்தம்

பொல்லாதசகுனங்கண்டு போகவுங்கூடாதிப்போ
நல்லதுபோய்வாமக்கள் நங்கையேயதனமிந்த
எல்லையில்பழிவந்தாலும் இனிசும்மாவிடுவதில்லை
சொல்வதுவசையில்லாமல் தோகையேவருகுவாயே.



வசனம். கேளும் பெண்ணே! வினைவாக நேரிடும் பொல்லாத சகுனங்களைக்கண்டு நீ போகக்கூடாதென்று தடுத்தும் கேளாமல் பிடிவாதமாகப் போய்வருகிறேனென்று சொல்லுகிறாய்; அப்படியே போய்வாராய். உன் தமையன் வீட்டில் நம்மைக்குறித்து இழிவான வார்த்தை நேரிடுமாகில் உன்னை தண்டிப்பேன். மக்களைப் பாது காத்து பத்திரமாய்க் கொண்டுவந்து சேர்க்கவேணும் மாதரசே.

### நல்லதங்கை வசனம்

தங்களுடைய கட்டளையின்படியே அடியாள் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். நமஸ்காரம் போய்வருகிறேன் நாதா.

## நல்லதங்கை தாய்வீட்டுக்குச் செல்லல்

### நல்லதங்கை கண்ணிகள்

போய்வாரேனென்றுரைத்து புருஷன்தன்
பொற்பாதமேதுதித்து
தாய்வீடுபோறேனென்று பெற்ற
தனையர்களையழைத்து
தேடினபொருளிழந்து பஞ்சமிகுந்து
சிறுமைகள்பட்டலைந்து
வாடிபழுது அண்ணன் அரண்மனைக்கு
மாபாவிபோறேனையே
ஐயோவிதிவசமே எனக்காகாத
காலமிதோபுவியில்
தையலெந்தனைப்போலே பொல்லாதபாவி
தானுண்டோவையகத்தில்
பெண்பிறந்ததுறையோ இந்தப்
பெருவனந்தனில்வந்து
பெற்றகண்மணியான மக்களுடன்நான்
கலங்கவிதியிதுவோ
ஜான்வயிறுவளர்க்க முடியாமல்
தனித்துயிவ்வனந்தன்னிலே
எந்தன் ஆண்பிள்ளைகளையழைத்து வனத்தில்வந்து
எனக்குஅலையவிதியாச்சே
நாடுநகரம்விட்டு இக்காட்டினில்
நடுக்கமுற்றேநடக்க
அபன்தேடிபெழுதினரோ தலையோட்டில்
தெய்வமேஎன்னசெய்வேன்
காட்டுக்குள்நான்தயங்கி வழிகாணாமல்
கலங்கியேவாடுறேனே

மாட்டுசாயக்கால்வழிபோ அறிகிலேன்
மனிதர்கள்போம்வழிபோ
சாலவேஅறிவோமென்றால் எனக்குமுன்
தகைப்படுவோரைக்காணேன்
நாலுவழிபுக்கூடிபிரியுதே இப்போ
நான்போகும்வழியெதுவோ
எந்தவழியைக்கண்டு என்மக்காள
ஏகுவோம்இவ்வனத்தில்
வெந்திடவெய்யலிலே இக்காடெல்லாம்
விணுபலைகிறேனே
வழிதடுமாறியைபோ மிருகங்கள்
வாழும்வனத்தில்வந்தேன்
பழிகாரியாகினேனே என்மக்காள
பாவினானென்னசெய்வேன்
அண்டிப்பயந்திர இக்காட்டினில்
யாரையுங்காணேனையோ
குண்டிக்குலைநடுங்குதே எந்தன்
குழந்தைகளும்அலையுதே
எந்தன்வயிற்றினிலே என்மக்காள
ஏளுவந்துபிறந்தீர்
உந்திக்கமலவனும் உங்கள்தலை
எட்டிலெழுதினானே
எடுத்தோடிமறைவோமென்றால் என்மக்களை
என்கால்நடுக்குதைபோ
தடுத்துக்கணவன்சொல்லை நான்பாவி
தள்ளிவந்தசகமோ
வெய்யலிலென்பாலர் வெதும்பிட
வேகுதேயென்மனது
செப்பும்வகையறியேன் நான்பாவி
தெய்வமேஎன்னசெய்வேன்
செல்வத்துரைமக்காள வாங்களென்று
சேர்த்தெடுத்திடவே
அல்லித்தண்டதுபோலே துவண்டுமே
அழுகுறாரென்னசெய்வேன்

நல்லதங்கை விருத்தம்

மக்காளவாருமிந்த வனத்தில்வாழ்மிருகங்கண்டு
சிக்கெனத்திரும்புமுன்னே சீக்கிரமாகவோடி



நிற்காமல்நாமெல்லோரும் நிலைதனைக்கண்டுபோக
ஒக்கவேநடந்துநீங்கள் ஓடியேவருகுவீரே.

வசனம். அப்பா! அருமைச் செல்வங்களாகிய என் மக்காள! இந்த வனத்தில் இருக்கப்பட்ட மிருகங்கள் நம்மைக் கண்டு திரும்பி வருவதற்குமுன் அவைகட்குத் தெரியாமல் சீக்கிரமாய்ப் போய்விடுவோம் என்னுடன் கூட ஓடிவாருங்கள் மைந்தர்களே.

பெரியபிள்ளை விருத்தம்

ஓடிவாருங்களென்று உகந்துமேசொன்னதாயே
கூடியவீட்டில்நாங்கள் குலாவியேயிருந்தவேளை
நாடியேயிட்டுவந்தாய் நாங்களும்பசியால்நொந்தோம்
வாடியேயிளைப்பினாலும் வருவதெப்படிசொல்லம்மா.

வசனம். கேளுமம்மா தாயே! வீட்டில் விளையாடிக்கொண்டு இருந்த எங்களைக் காட்டுக்கு அழைத்துவந்து இளைத்துப் பசித்திருக்கும் இவ்வேளையில் ஓடிவாவென்றால் நாங்கள் எப்படிநடந்துவருவது வரமாட்டோம் தாயே.

நல்லதங்கை வசனம்

வாருங்களப்பா என் செல்வங்களே! நாம் இனி இங்கிருந்தால் இவ்வனத்திலுள்ள மிருகங்கள் வந்து கொன்றுவிடும். ஆகையால் நாம் முன்னதாகப் போய்விடுவோம் வாருங்கள் என் செல்வக் கண்மணிகளே.

ஏழுபிள்ளைகள் தரு

அம்மம்மாசொல்லக்கேளும் என்தாயே உந்தன்
அடியிணைக்கேசரணம் என்தாயே
பிரமனருளினாலே என்தாயே எங்களைப்
பெற்றுவளர்த்தெடுத்த என்தாயே
வயிறுபசிக்குதம்மா என்தாயே நாங்கள்
வருவதெப்படிசொல்லும் என்தாயே
தயிருஞ்சாதமுமிட்டால் என்தாயே இப்போ
சாப்பிட்டுடன்நடப்போம் என்தாயே
பாலுஞ்சாதமுமிட்டால் என்தாயே நாங்கள்
பசியாறியேநடப்போம் என்தாயே
காலுங்கடுக்குதம்மா என்தாயே எங்கள்
கண்பூத்துப்போகுதம்மா என்தாயே
காதைபடைத்திடுதே என்தாயே இப்போது
களைத்துஉயிர்போகுதே என்தாயே
வாதைப்படுவதற்கோ என்தாயே உந்தன்
வயிற்றில்பிறந்துவந்தோம் என்தாயே

பாதகங்கள்செய்தோமோ என்தாயே நாங்கள்
பண்ணினபலனிதுவோ என்தாயே
ஏதுகுறைகள்செய்தோம் என்தாயே நாங்கள்
இளைத்துடல்வாடலானோம் என்தாயே
வீட்டிலிருந்தோமானால் என்தாயே நாங்கள்
வேளைக்கமுதுகொள்வோம் என்தாயே
காட்டுக்கழைத்துவந்து என்தாயே உன்னால்
கடைதேரும்வழிகாணோம் என்தாயே
பரிதாபமில்லையோதான் என்தாயே உந்தன்
பாலரென்றறியாமல் என்தாயே
துரிதமாய்நடக்கச்சொன்னால் என்தாயே கால்கள்
சோர்ந்துமடிபுதம்மா என்தாயே
வேர்த்துமேகளைக்குதே என்தாயே கானல்
வெப்பலாலெங்களுக்கு என்தாயே
பார்க்குமிடங்களெல்லாம் என்தாயே இப்போ
பயங்காயாகுதம்மா என்தாயே
வேண்டாமென்றேயுரைக்க என்தாயே தந்தை
வார்த்தையேன்தள்ளிவந்தாய் என்தாயே
வீணேயெனிட்டுவந்தாய் என்தாயே நமது
வீட்டுக்குப்போவோம்வாராய் என்தாயே
வனமெல்லாம்உன்பிறகே என்தாயே ஓடி
வந்தோமேகால்கள்நோக என்தாயே
இனிநடக்கமாட்டோம் என்தாயே எங்களை
எடுத்துக்கொண்டால்வருவோம் என்தாயே

பிள்ளைகள் விருத்தம்

எங்களைப்பெற்றதாயே இனிநடந்திடவுமாட்டோம்
தங்கிடாநடந்ததாலே தாளுஞ்செங்குருதிகொண்டு
மங்கியேவலியினாலே வழிநடந்திடயிப்போது
எங்களாலாகாதம்மா எடுத்துக்கொண்டேகுவாயே.

வசனம். கேளுந்தாயே! இனிமேல் நடக்க எங்களால் முடியாது. நீ இந்த வனத்தில் எங்கும் நிற்காமல் கானலில் நடந்துவரச் சொன்னபடியால் எங்கள் கால்களெல்லாம் கொப்பளித்து சிவந்து நோகுதே? இனிமேல் நடக்கமுடியாது. எடுத்துக் கொண்டால் வருவோம்; இல்லாவிடில் வரமாட்டோம் தாயே.

நல்லதங்கை வசனம்

வாருங்கள் என் மக்களா! விதிவசம் யாரை விட்டது? கொஞ்ச நேரம் பொறுத்துக்கொள்ளுங்கள்; உங்கள் அம்மான் அரண்மனை



அருகிலிருக்கிறது சீக்கிரம் போய்விடலாம், உங்கள் பசி தணியும்படி வேண்டிய கனிகளைப் பறித்துத்தருகிறேன், இதைத் தின்றுகொண்டு என்பின்னே வாருங்கள் என் செல்வங்களே.

நல்லதங்கை தரு

நீதிராசன்பெற்ற என்னிடமக்களா நீங்களும்வந்திடுங்கள்
ஆதியால்வந்த அறிவுள்ளமைந்தரே அருகிலிருந்திடுங்கள் நீதி
காதலிளம்பிள்ளைகாள் என்தோளின்மேல் கரந்தால்தலைபிடித்து
ஆதரவாகயிருங்கள் இருவருமே அஞ்சாதேகண்மணிகாள் நீதி
இடுக்கினேன்ஒருபிள்ளை முதுகின்மேல் இடுப்பினில்ஒருபிள்ளையை
மடிக்குள்ளேஇளம்பிள்ளை மார்பின்மேல்ஒருபிள்ளையுடன்போகிறேன்
நடக்குமென்பாலர்களா வீடுசென்று நல்லமுதுண்ணுமட்டும்
எடுக்கும்பசியுமாற உங்களுக்கு இன்பக்கனிதாரேன் நீதி
வள்ளிக்கொடிபோலே என்மக்களா வாடித்துவளாதீர் இதோ
கள்ளிருள்ளையான் கவலைக்கிழங்குமே கனமுடன்நான்தாறேன் நீதி
உள்ளபடியேமக்களா இக்காட்டினில் ஓடியோன்தேடி இப்போ
கிள்ளிபசிட்டிலாங் கொடியும்கிழங்கும் களாப்பழமுந்தாறேன் நீதி
காரைப்பழந்தாறேன் என்மக்களா கருநாவற்பழந்தாறேன்
சீரானகொஞ்சிக்கனியும் வனந்தனில சேபர்களேதருவேன் நீதி
சூரைக்கனிதருவேன் சிவந்திருக்கும் தொன்றுங்கனிதருவேன்
பாரிதுபர்ந்தபலா எலுமிச்சன் பழங்களும்நான்தருவேன் நீதி
வாழைப்பழந்தாரேன என்மக்களா வாருங்களென்பிறகே
ஏழைக்கிரங்கியிருக்குது எதேஷ்டமாய் இன்பமதாப்புசிப்போம் நீ
தாழக்கிடந்துருளும் விளாங்கனி தருகிறேனென்மக்களா
ஆழித்தயிலுமால் அன்பர்க்குதவும் அரிநெல்லிக்கனிதாறேன் நீதி
பிள்ளைபெற்றோர்களிலே பெரும்பாவி பேதைதன்னைப்போலுண்டோ
அள்ளுமண்துள்ளாட ஆரணியந்தனிலே அவதிப்படவிதியோ நீதி
கந்தமூலம்புசித்த என்மக்களா களைதன்னையாற்றிடவே
இந்தவனத்தில தடாகமிருக்கும் இடமறிந்தேபோவோம் நீதி
வந்தயிளைப்பாரும் மக்களாநீங்கள் வகையாகஇந்நீருந்தி
சிந்தைமகிழ்ந்திட்டமுடன் பகவானைத் தோத்திரஞ்செய்திருங்கள் நீ

பொது வசனம்

இவ்விதமாக நல்லதங்கையம்மனவள் தன் குமாரர்களுக்கு கானகத்திலிராநின்ற பலவிதமான கனிகளைப் பறித்துக்கொடுத்து தடாகததிற்கழைத்துக்கொண்டு தாகத்தையாற்றி அவ்விடமிருந்த ஆலவிருட்சத்தினகிழ் அவர்களுடன தானுமாக அவ்வாலமரத்தடியில் வீற்றிருக்கையில சூரியபகவான் மறைந்தருளினர். அப்போது தென்மதுராபுரியில் நல்லண்ணராஜன் நித்திரையில கனவுகண்டு அதை மந்திரிகளுடன் சொல்லும்விதங் காண்க.

## நல்லண்ணராஜன் கனவுகண்டு மந்திரிக்குரைத்தல்

### நல்லண்ணராஜன் விருத்தம்

செப்பெருமந்திரிமாரே சிவன்செயல்தானேயிங்கு
எப்போதும்போலேநானும் என்னரண்மனைக்குள்நித்திரை
இப்போதான்செப்பும்போது என்னைக்குங்காணாப்பொல்லா
சொப்பனங்கண்டேன்கேளீர் சொல்லுவேன்மந்திரிமாரே.

### தரு பல்லவி

கண்டேனொருகனவை அதைக்கேளும் ஒருநாளும் நான்
கண்டதுமில்லைசிவன் தெண்டனைபோயிது   கண்

### அநுபல்லவி

வண்டலர்குழலுடையாள் என்தங்கை அவளெங்கேவெகு
வறுமையுடனே வெகு சிறுமைகளாகவே   கண்

### சரணங்கள்

தேடினபொருள்களெல்லாம் விற்றுத்தோற்று சுற்றிப்பார்த்து தன்
சேயர்களுடனேநான் தாய்வீடுபோறேனென்று
நாடிப்புருஷனைவிண்டு வழிதேடி மனம்வாடி   அவள்
நலிந்துச்சிறுவருடன் மெலிந்தடவியில்வரக்   கண்

வேட்டைகளாடவென்று விருதுடனே சுறுருடனே   கன
வேட்டைக்காரருடனே காட்டினில்சென்றிருந்தேன்
பாட்டைவழியைக்கடந்து பாதவித்து வனந்தனித்து   அவள்
பாடிபழுவதைக்கண்டு ஓடியழைத்துவர   கண்

தங்காநீமுன்னேபோவென்று நான்சொல்ல அவள்செல்ல
சதியறிந்தவள்வன மதின்றுறவினில்விழ
அங்கேநான்கண்டுமனம் வெட்கிபினமடக்கி மனந்துடிக்க
அரசர்களறியபென் மனைவியைச்சுடநான்   கண்

மக்கள்மனைவியைக்கண்டு கொண்டுபோகவந்தசாக   எந்தன்
மைத்துனருடனேநான் அட்சணமுயிர்விட
சொக்கநாதரும்விடையேறி என்னைநாடி தேவர்கூடி   வந்து
சகமுடனவர்களை வகையுடனெழுப்பிட   கண்

### நல்லண்ணன் விருத்தம்

தாஷ்டிகமுள்ளபெந்தன் தளகர்த்தமந்திரிமாரே
காட்டினிற்சென்றநாமும் கனவேட்டையாடவேணும்
ஈட்டியும்அம்புவில்லும் எப்போதுங்கைவிடாத
காட்டினில்வாழும்வேட்டைக் காரரையழைத்திடீரே.



வசனம். வாருங்கள் மந்திரிமார்களே! நாம் கானகஞ் சென்று வேட்டையாடி வரவேண்டும். ஆதலால் நமது வேட்டைக்காரரை அழைப்பியுங்கள் மந்திரிமார்களே.

### மந்திரி வசனம்

தங்களுடைய திருவுளம்போல் வேடரை இதோ நொடிப் பொழுதில் வரவழைக்கின்றோம் தென்மதுராபுரிக்கு அதிபதியாகிய மகாராஜனே.

## வேடர் வருகிற தரு

### பல்லவி

வேடர்வந்தாரே   மலையில்வாழ்
வில்லியர்வந்தாரே   வேடர்

### அநுபல்லவி

வேடர்வந்தாரிதோ   காடுமலைதனில்
வீறிடுமிருகத்தை   தேடிப்பிடிக்கின்ற   வே

### சரணங்கள்

கன்னிவலைகவு   தாரிவலைகொண்டு
இன்னமின்னம்பல   ஆயுதமுங்கொண்டு   வே

துஷ்டமிருகங்கள்   மட்டுமிதமில்லாத
பட்டுவிழுந்திடக்   கட்டும்வலைகொண்டு   வே

மானும்கடம்பைசேர்   நாயும்முயல்பன்றி
போனவழிகண்டு   தேடிப்பிடித்திடும்   வே

### வேடர் வசனம்

கேளும் மகாராஜனே! தங்களுடைய பாதாரவிந்த கமலங்களுக்கு அடிமைகள் அனேக வந்தனம். எங்களை அழைப்பித்தவிபரம் தெரியச்சொல்லவேணும் சுவாமி.

### நல்லண்ணராஜன் விருத்தம்

வந்ததோர்வேடரோநான் வனவேட்டையாடவென்று
சிந்தையில்நினைத்தேனிப்போ சீக்கிரமாகநீங்கள்
குந்தம்வாள் ஈட்டிவில்லாக் கோலுடன்படைகளோடு
எந்தனேடிசைந்துவாரீர் இட்சணமேகுவோமே.

வசனம். வாருங்கள் வேடர்களே! நாம் கானகஞ்சென்று வேட்டையாட யோசித்திருப்பதால் நீங்களெல்லோரும் ஆயுத முஸ்திப்புடன் புறப்படுங்கள்.

### நல்லண்ணன் தரு

**பல்லவி**

வாரும்வாருங்கள்வீரரே வனவேட்டையாட
வாரும்வாருங்கள்வீரரே வாரும்

**அநுபல்லவி**

வாரும்வாரும்வேடரே பாரும்பாருங்களிப்போ வாரும்

**சரணங்கள்**

கங்குலெங்கும்போகாமல் இங்குவனத்தில்
சங்கைகளொன்றுமில்லாமல்
தங்கியுலாவுமிருகங்கள் எங்குந்தள்ளாமல்
சஞ்சரித்திடநீங்கள் இங்கேநில்லாமல் வா

ஆடுதுபார்மயிலும் அதைக்கண்டு
வாடுதுவான்கோழியும்
கூடுதுபார்கலை ஓடுதஇன்னமும்
தேடியேஅதனினத்தில் நாடிப்பதங்குமுன்னே வா

எந்தன்முன்பாகயிதோ வேங்கைப்புலி
வந்துறவாடுதுபார்
அந்தமாகவேஅதைக்கண் டொருபுலிவந்ததே
இரண்டையுங்கொல்வேன் கரமிரண்டும்துடிக்குதிதோ வா

### வேறு தரு பல்லவி

வனத்தில் வேட்டைகளாடுவோம்
வனவீரர்களே ரணசூரர்களே வன

**அநுபல்லவி**

கனத்தமிருகமனை அனைத்தும்என்கையம்பால்
காட்டில்படவே வதைசெய்துயிர்
வாட்டிக்குடி போகவேசெய்வோம் வன

**சரணங்கள்**

வலையவலைபைநாட்டுங்கள் மிருகமெல்லாம்
வந்துசிக்கவேஓட்டுங்கள்
படபடென்றடன் அளவில்நெருக்கிடில்
மேவும்புலிமேலிதோ பாய்விடுமே
தாவும்உடனேயினி போய்விடும் வன

மானுக்கலைபுக்கூடுதே நம்மைக்கண்டிதோ
வாய்வேகமாகஓடுதே
வாரணம்புலியுமொன் றாகவேஓடுதே
வலையிற்படசெய் தயிராகவே
நிலையிற்பெறக்கண் டுடனேகவே வன



### நல்லண்ணராஜன் விருத்தம்

அடர்பெரும்வனத்தில்வேட்டை யாடியேமிருகத்தோடு
துடரநாம்வந்தோமிப்போ சோகமுமாகிதாகம்
விடாயதுகொண்டேனிந்த வெய்யலில்மந்திரிமாரே
தடாகமுமொன்றுகண்டு தாகமும்தீருவோமே.

வசனம். ஆஹா வாருங்கள் மந்திரிமார்களே! இந்த வனத்தில் வேட்டையாடி மிருகங்களை வதைத்து வெய்யலில் திரிந்துவந்தமை யால் அதிக தாகமாகிவிட்டது. ஆகையால் இந்த வனத்திலிருக்கும் ஓர் தடாகத்தைக்கண்டு தாகந்தீருவோம் மந்திரிமார்களே.

### பொது வசனம்

இவ்விதமாக நல்லண்ணமகாராஜன் வேட்டையாடி தாகந்தீர்ந்து குளக்கரையில் இரங்கியிருக்கையில் முன்னுளில் ஏழுபிள்ளைகளுடன் கானகத்தில்வந்து ஆலாலவிருட்சத்தின்கீழ் சோகங்கொண்டிருந்த நல்லதங்கையம்மன் தன் சோகந்தெளிந்து புலம்பிக்கொண்டு மதுராபுரிபட்டணம் வரும்விதங்காண்க.

### நல்லதங்கை காட்டில் புலம்பல்

**கண்ணிகள்**

மதுரையில் என்தகப்பன் ஓதெய்வமே-என்னை
வளர்த்திட்ட நேர்த்தியென்ன ஓதெய்வமே
அதைவிட என்தமையன் ஓதெய்வமே-என்னை
அருமையுடன் வளர்த்தார் ஓதெய்வமே
பிறந்தவிடத்தின்மேலாய் ஓதெய்வமே-கொண்ட
புருஷனும்வைத்திருந்தார் ஓதெய்வமே
சிறந்திருந்தவேர்க்கும் ஓதெய்வமே-கன
செல்வமுடனிருந்தேன் ஓதெய்வமே
செல்வமிகுதியினால் ஓதெய்வமே-பின்பு
அல்லலதிகமென்பார் ஓதெய்வமே
சொல்லும்பிசகிடாமல் ஓதெய்வமே-அந்த
சுகமெனக்குண்டாச்சே ஓதெய்வமே
அல்லல்பட்டலையவும் ஓதெய்வமே-நான்
அரும்பாவியாவதற்கே ஓதெய்வமே
அருமையுடன்வளர்த்த ஓதெய்வமே-எந்தன்
அண்ணன்பானிகைக்கேக ஓதெய்வமே
சிறுவர்களுடன்வந்து ஓதெய்வமே-இப்போ
திகைத்துமயங்கலானேன் ஓதெய்வமே

குந்தித்திசையுங்காணேன் ஓதெய்வமே-எந்த
திசையைபறிந்துபோவேன் ஓதெய்வமே
பதுமைப்போல்பாலர்கள் ஓதெய்வமே-காட்டில்
பாதவிக்கவிட்டாயே ஓதெய்வமே
இந்தக்கண்காட்சிக்கு ஓதெய்வமே-என்னை
ஏனேசென்மித்துவைத்தாய் ஓதெய்வமே
உற்றயோசித்துப்பார்த்து ஓதெய்வமே-எந்தன்
உள்ளமுருகுதையோ ஓதெய்வமே
ஆருமறியாக்காட்டில் ஓதெய்வமே-யானும்
அலறிப்புலம்பலாச்சே ஓதெய்வமே
ஓரியாய்காணும்நின்று ஓதெய்வமே-எனக்கு
ஒருவர் துணையுங்காணேன் ஓதெய்வமே
நம்பிநான்வந்துவிட்டேன் ஓதெய்வமே-எந்தன்
நாதன்மொழிகடந்து ஓதெய்வமே
கும்பிட்டடிபணிந்தேன் ஓதெய்வமே-எந்தன்
கூடபிருந்தகாரும் ஓதெய்வமே

நல்லண்ணராஜன் விருத்தம்

எந்தன்மந்திரியேகேளாய் இதுவெகுபுதுமையாக
விந்தையாய்வனத்தில்யாரோ நெடுங்குரலிட்டுக்கொண்டு
சந்தமாயழுவதென்ன தானறிந்திடவேவேணும்
அந்தநல்லிடத்துக்கேகி அறிந்துநாம்வருகுவோமே.

வசனம். கேளுங்கள் மந்திரிமார்களே! இதுவென்ன ஆச்சரியமாக விருக்கிறது. இந்த வனத்தில் ஒண்டியாக நெடுங்குரலிட்டு அழவேண்டிய காரணம் யாது? அதை நாம் சென்று தெரிந்துவருவோம் வருவாய் மந்திரி.

மந்திரி வசனம்

அப்படியே சென்று பார்ப்போம் அரசே.

நல்லண்ணராஜன் வசனம்

அப்பா மந்திரி! நாம்வந்து பார்க்குமளவில் என் தங்கையைப் போல் காணுகிறது. அம்மா! இது என்னகாரணம்? நீ தனித்து இப்பிள்ளைகளுடன் ஒண்டியாக வரலாகுமோ என் தங்கையே.

நல்லண்ணராஜன் விருத்தம்

என்னகாரணங்களம்மா எவ்வுலகத்திலிந்த
அன்னீதமுண்டோதங்கா யாருமேதுணையில்லாமல்
தன்னமுந்தனியாயுந்தன் தனயர்களோடுபிந்த
வன்னிரும்வனத்தில்வந்த வண்மையையுரைசெய்வாயே.



வசனம். வாருமம்மா தங்கையே! நீசெய்தகாரியம் இவ்வுலகத்தாருக்கு அடுக்குமா? நீ தனிமையாக உன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு இந்த கானகத்தில் வரவேண்டிய காரணம் யாது? தெரியச் சொல்லும் தங்கையே.

நல்லதங்கை விருத்தம்

தாயில்லாக்குழவிக்கன்னை தானும்வந்துதித்ததேபோல்
காயும்நற்புழுக்குநீழல் கார்த்ததுபோலேமேகம்
தீயுநற்பயிர்க்கொத்தாப்போல் திகைத்தபென்முன்னேவந்து
மாட்மாயுதித்தஅண்ணா மலரடிபோற்றிபோற்றி.

வசனம். தாயில்லா பிள்ளைக்கு தாயார் வந்ததுபோலும், வெய்யலில் காயும் புழுவுக்கு நிழல் வந்ததுபோலும், தீயும் பயிருக்குப் பெய்த மழையைப்போலும், நான் வனத்தில்தவித்து வருத்தமுற்று வரும்போது மாய்மாக என்முன்புவந்த அண்ணாவே! உமது பாதாரவிந்தங்களுக்கு சரணம் சரணம்; நான் வந்த விபரங்களை தெரியச் சொல்லுகிறேன் கேளும்.

நல்லதங்கை கண்ணிகள்

திருவளரும்மதுரா புரிதனிலெந்தனை
அருமையுடன்வளர்த்த அண்ணாவே
உன்றன்மருமலரொணும் இருதிருவடியிணைகளில்
சரணம்சரணமெந்தன் அண்ணாவே
சின்னவயதிலென்னை அன்னைதந்தையைப்போலே
சிருடனேவளர்த்த அண்ணாவே
பொன்னும்பூஷணமிட்டு உள்ளன்புடன்காத்து
என்னைவளர்த்ததோர் அண்ணாவே
துடியிடைமீனாட்சி இடமருவுஞ்சொக்கர்
அடிமறவாதபெந்தன் அண்ணாவே
முடியரசருக்கென்னை கொடிபெறவேயுலகில்
கடிமணஞ்செய்துவைத்த அண்ணாவே
நீடும்வரிசைகோடி தேடியெனக்களித்தென்
வீடதுபோவதற்கு அண்ணாவே
ஆடம்பரதமும் கூடிவரவெனக்கு
நாடியனுப்பிவைத்த அண்ணாவே
திட்டமுடன்மதுரை பட்டணம்விட்டுவந்து
இஷ்டமுடனிருந்தேன் அண்ணாவே
கஷ்டகாலமாகி பட்டபாடதையெல்லாம்
விட்டுச்சொல்கிறேன்கேளும் அண்ணாவே

வையம்புகழ்ந்தரச செய்யும்போதெங்கள்நாட்டில்
ஆறிரண்டுஆண்டாய் அண்ணாவே
பெய்யுமழையில்லாமல் செய்யுந்தொழிலில்லாமல்
தெய்வமேயென்றலைந்து அண்ணாவே
நெஞ்சமுருகிதேசம் கெஞ்சிப்பறந்திடவே
பஞ்சம்வந்தடைந்ததே அண்ணாவே
கஞ்சதுந்ததுபோலேயென் நெஞ்சலைந்துமேவாடி
கொஞ்சும்பாலர்தவிக்க அண்ணாவே
இருந்திடமுடியாமல் பிறப்பிடம்போறேனென்று
சிறந்தமன்னர்க்குரைத்து அண்ணாவே
அரும்பாலகருடனே பெருங்கானகந்தனிலே
வரும்வழிதெரியாமல் அண்ணாவே
ஓடிவனங்களெல்லாம் தேடித்திகைத்திருந்து
வாடியலைந்துவந்தேன் அண்ணாவே
தேடினதெய்வமது நாடிவந்ததுபோலே
ஓடியென்முன்வந்தீர் அண்ணாவே

நல்லண்ணன் அகவல்

என்னுடன்பிறந்த எழில்பெருந்தங்காய்
உன்னையான்வளர்த்த வுவமையென்சொல்வேன்
கண்ணிமைபோலும் கஞ்சமாமலரைத்
தண்ணீர்காப்பது போலுமேயுன்னை
பாதுகாத்துப் பட்சமாய்வளர்த்து
மாதரைமதிக்கும் மாதரசாக்கினேன்
பானுவின்சுடர்மேல் பட்டுநீபழியாய்
நானிலமதன்மேல் நடந்துநீபழியாய்
மாங்குயில்போலவே மாதர்கள்சூழ
பாங்குடன்வளர்த்த பாவையேதங்காய்
அப்பப்போவுன் அழகெலாங்குலைய
வெப்பமில்மெலிந்து வேகவுமானாய்
உன்திருப்பாலகர்கள் உதித்தநாள்முதலாய்
நீவந்துமில்லையே மனங்களிப்பாக
இருக்கவுமில்லையே எழில்பணியாடை
தரிக்கவுமில்லையே தனையருக்கழகாய்
சரப்பளிபதக்கம் சந்தமாமணியும்
சிறக்கவேயளிக்க சிந்தையில்நினைந்து
உந்தனூருக்கு உகந்துநான்வந்து
அந்தமாயுந்தனை யழைத்திடவிருந்தேன்
இப்படியாகவே இளைஞர்களுடனே
மைப்பெருங்காட்டில் நீவரலாகுமோ



என்னுடன்பிறந்து இப்படியானால்
என்னையேயுலகோர் இகழ்ச்சிசெய்யாரோ
கஷ்டமும்நீங்கிக் கடைதேருவதற்கு
இஷ்டபாக்கியங்கள் இருக்குதுதாறேன்
பாலரைப்பார்க்கப் பரிதாபமாகுது
சாலவேமனைக்குச் சடுதியிலேகி
அன்னமும்புசித்து அன்புடனிருங்கள்
இன்னமுமிங்கேயிருந்துநான்வேட்டை
பாடியேயின்னம் அரைநொடிதனிலே
ஓடியேவருவேன் உகந்துநீசெல்வாய்.

நல்லண்ணன் வசனம்

கேளும் என் தங்கையே! உன்னை அருமையுடன் வளர்த்து இப்பேர்ப்பட்ட துன்பங்களை நீ அனுபவிக்கவும் அதைக்கேட்டு என் மனம் வாடலானேன். இப்போது நீயும் உன் பிள்ளைகளும் இந்த பல்லக்கில் ஏறிக்கொண்டு இருபக்கமும் காவலர்சூழ நம் வீட்டிற்குச் சென்று போஜனஞ்செய்து சந்தோஷமாக இருங்கள்; நான் வேட்டையாடி இதோ உன்பின்னால் வருகிறேன் தங்கையே.

நல்லதங்கை வசனம்

அநேக நமஸ்காரம் போய்வருகிறேன் அண்ணாவே.

நல்லதங்கை தரு

பல்லவி

அண்ணன் தன்மொழியைக்கேட்டு மகிழ்ந்தாநல்ல
தங்கையும்வாராளே மதுரைநாடி

அநுபல்லவி

பண்ணும்பாலருடன் படாதபாடுகள்பட்டு
மண்ணும்விண்ணுமேயழ வனங்கள்தன்னையேவிட்டு அ

சரணங்கள்

மனதுமிகவேமகிழ்ந்து அண்ணியிரு
மலர்பதமேபணிந்து
தனதுமைந்தரைக்கண்டு தைரியம்சொல்லிக்கொண்டு
இனிமேல்நமக்கொன்றும் இடர்களில்லையென்று அ

போனால்உங்கள்மாமி ஆசையாய்வந்து
புகழ்தேடுப்பாளடாசாமி
கானல்விடாயினால் களைத்ததெல்லாம்சொல்லி
தேனமுதூட்டியே சீராட்டுவாளென்று அ

தோனுமுன்னகரைக்கண்டு மனமகிழ்ந்து
சுத்தமதிலையுங்கண்டு
பூனுஞ்சந்தோஷமாய் பூரித்துமனந்தேறி
வேணமணிதர்சூழ மிகவுஞ்சிவிகையேறி அ

### பொது வசனம்

இவ்விதமாக நல்லதங்கையும் ஏழுபிள்ளைகளும் தென்மதுரா புரிக்குவந்து சேர்ந்தவுடன் யாவரும் கண்டு மனமகிழ்ச்சிகொண்டு இருக்க, தனது அண்ணன் தேவியாகிய மூளியலங்காரி யென்னும் அலங்காரசுந்தரி வருவது காண்க.

## மூளியலங்காரி வருகிற தரு

### பல்லவி

அலங்காரசுந்தரிவந்தாள் கெடுமனதை யுடையமூளி
அலங்காரசுந்தரிவாராள்

### அநுபல்லவி

நலங்கொள்முகவிலாசம் துலங்கும்நகைப்பிரகாசம்
துள்ளியமடமயில் என்னவுமாதிவள்
நன்னயமுடனிதோ உன்னிதமாக அல

### சரணங்கள்

வாசங்கமழுங்குழலாள் அன்னநடையையுடையாள்
தேசுபெறவே ஒயிலாள்
ஆசையுடனேயெங்கும் பூசும்பரிமளகெந்தம்
வாரணியுந்தன் பாரமுடனேயிதோ
ஆரமலங்கிர்த நாரியர்சூழ அல

பட்டுச்சேலைகளுடுத்தி இருமருங்கினிலொளிபெற
ஒட்டியாணமும் இறுக்கி
வட்டமதாய்ச்சிந்தூர பொட்டும் நுதலிலிட்டு
தொட்டிருவிழிதன்னில் இஷ்டமுடன்மையிட்டு
செங்கைவளையலும் பொற்கங்கணமுடனே அல

சாமரையிருபால்போடவே எழில்மிகுந்தவழகொடு
மாமடவன்னம்போலவே
கோமுகாசன்பெற்ற மாமகளிவளென்ன
கன்னியரிருபுறம் உன்னதமாகவே
நன்னயமுடன்வர மன்னவர்களிக்க அல

### பொது விருத்தம்

ஆரடிதாதிமாரே அதோவருகிறவளாரு
பாரடிநீங்களோடி பார்த்துசொல்லென்றாள்மூளி
காரிழைமாதர்தாமும் கணவனுருடன்பிறந்த
சீர்பெரும்நல்லதங்கை என்றுரைத்திகைத்திட்டாளே.

வசனம். மூளியானவள் தாதிகளைப் பார்த்து, ஆரடி தாதிமார் களே! நமது அரண்மனைக்கு நேராக அதோ கூட்டமாய்க்கூடி பல்லக்கில் வருபவள் யாரென்று அறிந்துவந்து எனக்குரையுங்களடி என்றுரைக்க, தாதிகள் நல்லதங்கையம்மன் தன் ஏழுபிள்ளைகளு டனே வருகின்றாளென்று பதில்கூற, மூளியானவள் திகிலடைந்து கோபமேலிட்டு தாதிகளுக்குச் சொல்லும்விதம் காண்க.

### மூளியலங்காரி விருத்தம்

நன்றுநன்றாகச்சொன்னீர் நாரியிங்கேண்டிவாராள்
அன்றறுக்கூலிபோலே அனைத்துந்தான்தாலிகட்டிப்
புண்டுபோனாளேயெல்லாம் பூனைபோலிருந்துக்கொண்டு
கொண்டுபோனப்போலின்னம் கொடுபோகவருகிறாளோ.

வசனம். அடி தாதிமார்களே! அந்த நாரிசிரிக்கி ஏன் இங்கு வருகிறாள்; தாலி கட்டிக்கொண்டு முன்னால் அறுகூலி வாங்கிப் போனாளே, இனமும் அப்படியே பலிக்குமென்று ஆசைகொண்டு வருகிறாளோ; நல்லது ஆகட்டும் பார்த்துக்கொள்ளுவோம் தோழி மார்களே.

### மூளியலங்காரி தரு

108589

### பல்லவி

வாரதேதுக்கோ இவளிங்கு வாரதேதுக்கோ
வாரதேதுக்குயிங்கு வகைகெட்டநாரியும வா

### அநுபல்லவி

ஆரழைத்தவரிங்கே அறிவுகெட்டநாரியை
அதுக்குத்தானிசை விருக்குதாயினி
மதிப்பதாரவளை எதிர்த்துமேசனி வா

### சரணங்கள்

குப்பலாகவே இவள்கூடி இங்கேவாரதேன்
அண்ணன்சம்பாதனையிலிங்கு சார்ந்துண்ணவாறளோ
அம்பாரங்கொட்டி அளக்கிறாரோயிங்கே
அடித்துப்போகவே மூடுககதாகவே
எடுத்துப்பொருள்களைக் கொடுத்தாப்போலவே வா

மக்களைக்கூட்டிவர இவளுக்கு வெட்கமில்லையோ
தக்கடித்தைகள் நானகாட்டவாறளோ
கொககுகார்த்துமீனைக் கொண்டோடிப்போனபபோல்

குடிக்கத்தண்ணியும்     கொடுப்பனோயிங்கே
எடுத்தடிவைக்க     விடுப்பனோயினி     வா
மாசைக்கண்ணியாள் இவள்வெகு     ஆசைக்காரியாள்
வேசிபோல்பிள்ளையை     வேடிக்கைகாட்டிவாராள்
பூசிப்பொருள்பரிக்கப்     புறப்பட்டுவருவதேன்
பொருத்தம்நமக்கினி     இருக்கலாகுமோ
சிரிக்கிவருகிற     சருக்கைப்பார்க்கிறேன்     வா

### மூளியலங்காரி விருத்தம்

பண்டாசைக்கிழவிகொண்டு பசமஞ்சள்குளித்தாப்போலே
குன்றாசைக்கொண்டுவந்தாள் இவட்குமுன்னிற்கொணாது
உண்டானதெல்லாம்வீட்டில் ஒளித்துமேகதவடைத்து
மண்டையில்பத்துமிட்டு மர்ம்மமாய்படுப்பேன்பாரீர்.

வசனம். கேளுங்கள் பாங்கிமார்களே! இவள் வருவதை போசிக்க கிழவியானவள் வயதுகாலத்தில் நடந்த பழைய எண்ணைங் கொண்டு மஞ்சள் குளித்த பாவனைபோல் வருகிறாள். அன்றியும் உப்புச்சட்டி வரவோடு முதலாகிய சகல சாமான்களையும் எடுத்து அவளுக்குத் தென்படாமல் ஒளித்துவைத்து கதவைச்சாதந்தி தாள் இட்டு மண்ணரைந்து என் தலைபிற் பத்திட்டு மூலையில் படுத்துக் கொண்டால் அவள் வந்து பார்த்து ஏமாந்து போய்விடுவாள் சகிமார்களே

### நல்லதங்கை தரு

#### பல்லவி

கதவைத்திறவும் அண்ணியே     ஓ அண்ணியே
கதவைத்திறவும் அண்ணியே

#### அநுபல்லவி

கதவைத்திறவும்அண்ணி     கடினமதாகவே
ததியில்எந்தனைவந்து     தான்காணாணமாய்
எதிர்கொண்டுவரபெண்ணியே     நின்றாபோநீ
அதுக்கென்னவாஉன்னியே
பகலிரவாபிதற்கோ     நினைந்துபெண்ணியே
ஓடிநான்வந்தேன் மதிக்காதிருக்க அண்ணியே சும்மாவந்து     கத

#### சரணங்கள்

திறவுங்கதவை அண்ணியே     ஓ அண்ணியே
திறவுங்கதவை அண்ணியே
திறவுங்கதவைஅண்ணி     தெருவாசற்படிவந்து
பரிவுடனெங்களை     பார்த்துமனதுவந்து
திருவாயால்அழைப்பாயே     இருநீயென்று
பரிவாய்வந்தழைப்பாயே



உனக்குப்புண்ணியம்     வருமின்னம்பெறுவாயே
என்மேலுந்தன்கருணை     புரிவாயேதயைசெய்து     கத
சாத்துங்கதவைத் திறவாய்     ஓ அண்ணியே
சாத்துங்கதவைத் திறவாய்
சாத்துங்கதவிட்ட     தாப்பாளைவாங்கிடு
வேற்றுமனிதரென்று     நீவீணாயோசிக்காதே
நாத்திவந்தேனெதிரில்வா     இங்கேவந்து
பார்த்துவுன்வாய்திறவாய்     கூவிடுமெந்தன்
வார்த்தையுங்கேட்க     விலைபோயாலுமிங்கே
காத்துநானிருப்பது     நீதிபோசற்றேவந்து     கத
நல்லதுனக்கிதுவோ     என் அண்ணியே
நல்லதுனக்கிதுவோ
நல்லதுனக்கிது     வல்லபிநேரமும்
சொல்லிபேயுங்கள்கக     மதைவாழ்த்திபென்
செல்வர்களோடுகந்துபிறந்த     என்னில்லமேபுகுந்து
நிற்கவுன்மனங்கல்லோ     சற்றேனுமிப்போ
கரையாதோஇவ்விடம்     நாளும்வந்துதவித்திட
பிரியம்வைத்தெந்தனுக்காய்     உன்கையால்     கத
தெரியாதோயான்வந்தது     உனக்குஅண்ணி
தெரியாதோயான்வந்தது
தெரியாதோயான்வந்த     சேதியுனக்குஅண்ணி
அறியாதோநானிங்கு     அதட்டிக்கதவைத்தட்டி
திறவுமென்றுரைசெய்தது     வெகுநேரமாய்
சிறுவர்களுடன்வந்தது     காலுங்கடுக்க
தெருவாசலில்நான்     நின்றதுநீயறிந்தும்
அறியாதுபோலிருப்பது     ஆச்சரியம்அண்ணி     கத
வீட்டிற்பிறந்தவடி     அடிஅண்ணி
வீட்டிற்பிறந்தவடி
வீட்டிற்பிறந்தவள்     விருந்தாடிபாய்தயங்க
காட்டினில்அடுக்குமோ     நாணிப்படியுங்கூவ
நீவீட்டிலிருந்துகொண்டு     கேட்காதுபோல்
கேட்டிருப்பதும்நன்றோ     என்பிள்ளைகள்
வாட்டுதேபசிக்குதென்று     திறந்திடுவாய்
பூட்டியகதவையின்று     கண்மணியண்ணி     கத

### நல்லதங்கை விருத்தம்

தந்தையுந்தாயுமாகத் தவஞ்செய்தவரத்தால்வந்த
பைந்தொடிநானேயாகில் பகருமென்னெறியிருந்து
எந்தனற்கணவன்தெய்வ மென்றகற்புடையாளாகில்
இந்தமாளிகைக்கபாடம் இனிதிறந்திடுவதாமே.

வசனம். என் தாயும் தந்தையும் செய்த தவமானது ஈடேறி பரமசிவன் பார்வதியும் வந்து கொடுத்த வரத்தினால் பிறந்த பெண் நானேயாகில், என் கணவனே தெய்வமென்னும் கற்புடையவள் நானேயாகில், சாத்தியிருக்கும் கபாடமானது படீலெனத் திறந்து வழிவிடக்கடவது என்று சொன்னபோது கதவு திறந்தது. அப்போது நல்லதங்கை மூளியைப் பார்த்துச் சொல்வது.

நல்லதங்கை தரு

சிந்தையில்நொந்திட வந்தவிதியென்ன அண்ணியாரே
சென்னியின்மீதிரு கன்னங்கள்மீதிலும் அண்ணியாரே
கிழ்கவேபற்றுகள் பறக்கவேபோட்டுநீதான் அண்ணியாரே
நிலத்தினில்கவிழ்ந்துநீ கலக்கமாய்ப்படுத்ததேன் அண்ணியாரே
வாதமோ சீதள சூதகத்தோஷமோ அண்ணியாரே
மண்டைவலியோசொல்லும் கண்டவிதமென்ன அண்ணியாரே
எத்தனைநாளாகப் பற்றிட்டுப்படுத்திட்டாய் அண்ணியாரே
என்னமாயிருக்குது இன்னம்லகுவில்லையோ அண்ணியாரே
திண்டோளன்காட்டினில் கண்டானென்னண்ணனும் அண்ணியாரே
சேதியுஞ்சொல்லாமல் சூதாயனுப்பினார் அண்ணியாரே
ஆசைக்குரியவிஸ் வாசமானபெந்தன் அண்ணியாரே
ஆகாதவியாதியும் மாய்கையாய்வந்ததோ அண்ணியாரே
நல்லாயிருந்தாலும் உள்ளமகிழ்ந்துமே அண்ணியாரே
நடக்கும்வரிசைகளை எடுத்தெதிர்வருவாயே அண்ணியாரே
மக்களும்நானுஞ்செய்த வினையின்பயனாலோ அண்ணியாரே
நீமண்மேலயர்ந்துருள கண்ணாலேயான்காண அண்ணியாரே

விருத்தம்

அண்ணியார்தமக்குத்துன்ப மாகியவியாதிபோக
என்னதானவிழ்தமுண்டா ரிதற்குபசாந்தியாக
பன்னும்பண்டிதரைக்கொண்டு பார்க்கவொண்ணாதோநீங்கள்
என்னநோப்பாங்கிமாரே எனக்கதையுரைசெய்வீரே.

வசனம். கேளுங்கள் பாங்கிமார்களே! இந்த என் அண்ணியாருக்கு வந்த வியாதி தீரும்படி ஏதாவது அவிழ்தமுண்டாரா? அல்லது வைத்தியரைக்கொண்டு உபசாந்தியாக வைத்தியம் செய்தீர்களா? நான் கூப்பிட்டும் அண்ணன்தேவி பேசாமலிருப்பது என்ன வியாதியினாலே? தெரியச்சொல்லுங்கள் தோழிமார்களே.

தாதி வசனம்

கேளும் தாயே! இந்த அம்மாளுக்கு வந்திருக்கும் வியாதியானது தீரப்பட்டதுமல்ல; தீராமலிருக்கப்பட்டதுமல்ல. இப்போதிருக்கும வியாதி ஏதென்றால், அந்த அம்மன் பூமியிலுதித்தபோதே கூடப்



பிறந்த வியாதியாகும். அது என்னவியாதியென்றால் மனக்காய்ச்சல் அதாவது வஞ்சகப்பிணி என்று சொல்லாநின்ற வியாதிக்கு என்ன வைத்தியம் செய்தபோதிலும் தீராதம்மா; எங்கள் அரச குடும்பத்திற்பிறந்த நல்லதங்கையே.

போது வசனம்

இவ்விதமாக நல்லதங்கையானவள் தாதிகளை விசாரித்துக்கொண்டிருக்கும்போது பிள்ளைகள் ஏழுபேரும் அம்மானாகிய நல்லண்ண மகாராஜனுடைய மாளிகையின் அழகைக்கண்டு சந்தோஷிப்பது காண்க.

மூத்தபிள்ளை விருத்தம்

தம்பிமார்களேவாருங்கள் தாயுடன்பிறந்தநல்ல
அம்மான்தன்வீட்டிலுள்ள வதிசயமதனைக்கண்டால்
உம்பர்கோனுலகைப்போலும் ஒளிதருகின்றதாலே
அன்புடன்சுற்றிப்பார்த்து அறிந்திதைவருகுவோமே.

மூத்தபிள்ளை தரு

பல்லவி

மாளிகையழகெல்லாம்பாருங்கள் தம்பி
மார்களேயெல்லோரும்வாருங்கள்

அநுபல்லவி

ஆளுமிந்நகரத்தில் அம்மானும்வாழ்கின்ற
அரண்மனையுமெத்த திருமகளுமேபொருந்த மாளி

சரணங்கள்

பன்னும்பவளத்தால்தூண்களும் பச்சை
பதித்தவிசித்திரப்பதுமையும்
என்னுடன்வாருங்கோள் இந்தஉத்திரந்தன்னில்
இருக்குஞ்சித்திரமெல்லாம்
உரைக்கப்போமோஇதெல்லாம் மாளி

பங்கயத்தான்தங்கும்வாசமும் சித்திர
படமுங்கண்ணாடிப்பிரகாசமும்
தொங்குங்குலோப்புகள் துயிலரண்மனைக்குள்ளே
தூங்கும் மஞ்சம்சொர்ணம்
ஓங்கும்மயமாய்வர்ண மாளி

மாடமாளிகைசித்திரகூடமும் கண்டோம்
வச்சிரமுத்தியகபாடமும்
கூடவேவாருங்கள் ஓடுவோம்பாரண்ணே
கூப்பிடுவானிந்நேரம்
சாப்பிடப்போவோம்வாரும் மாளி

### ஏழுபிள்ளைகளில் இளையபிள்ளை சொல்லல்

#### விருத்தம்

அண்ணன்மார்களேவாருங்கள் அன்னைபால்செல்வோமிங்கே
குன்றுபோல்கும்பலாகக் கூடத்தின்நடுவேகொட்டி
தின்னவேகிடைத்ததிப்போ தேங்காய்கள்நம்மெல்லோர்க்கும்
நண்ணியுமெல்லோர்முன்னே நானொன்றையெடுத்தேன்பாரீர்.

வசனம். வாருங்கள் அண்ணன்மார்களே! நமது அன்னையானவள் சாப்பிடக் கூப்பிடுவாள்; நாம் அனைவரும் போகலாம். இதோ கும்பல் கும்பல் கும்பலாகக் கொட்டியிருக்கும் தேங்காய்களில் நாம் தின்னும்பொருட்டு இதோ ஒரு தேங்காயும் ஒரு மாங்காயும் எடுத்துக்கொண்டேன் பாருங்கள் அண்ணன்மார்களே.

பிள்ளைகள் எடுத்த தேங்காயை மூளிபலங்காரி பிடுங்கிக்கொள்ளல்

#### மூளிபலங்காரி விருத்தம்

நாரியின்பிள்ளைபேர் நவமுடனென்னைக்கேட்கச்
சீரியோனன்கொடுக்கத் தின்பதைவிட்டுச்சொந்தக்
காரன்போலெடுக்கலாமோ காயையீந்திடுவாய்பையா
பாரெனவினைத்தாப்தாடா நல்லதேங்காயைத்தானே.

வசனம். அடி வாருங்களடி தாதிமார்களே! ஒரு பையன்வந்து பேய்போல் அலைந்து தேங்காயையும் மாங்காயையும் வாரிக்கொண்டது. இன்னும் எவ்வளவு வாரிக்கொண்டு போகுமோ, நியாயமாய்க் கேட்டால் கொடுக்காதகனென்று அதன் கைகளைத் திருகி படுக்கெனப் பிடுங்கிப் போட்டுக்கொண்டேன். இவைகளை உள்ளே கொண்டுபோய் பத்திரமாய் அடைக்கலம் பண்ணிவிட்டு இவைகளில் மெத்தவும் அழுகிப்போயிருக்கும் தேங்காய் ஒன்றும் மாங்காய் ஒன்றும் கொண்டுவந்து பெரும்வயறு படைத்த இந்தப் பையன்கள் முன்னே போடுங்களடி. என் தலை நோகிறது, சற்று படுத்துக் கொள்ளுகிறேன் தாதிமார்களே.

#### நல்லதங்கை விருத்தம்

படுத்தபெண் அண்ணியாரே பாலர்தேங்காயெடுக்க
அடுக்காதோவம்மாநீதான் அதற்குள்ளேஓடிவந்து
வெடுக்கெனப்பிடுங்கிக்கொண்டாய் விம்மியேயழுதுபாலர்
துடிக்குதேபசிதாளாது சோறுண்டோசொல்வாயம்மா.

வசனம். கேளும் அண்ணியாரே! இதோ குவியல் குவியலாகக் கொட்டியிருக்கும் கோடி தேங்காய்களில் என் குழந்தைகள் ஒன்று எடுத்தால் உன்மனம் பொறுக்கக்கூடாதோ, அடித்துப் பிடுங்கிக் கொண்டாய், உனக்குப் பாலகரென்று பட்சாதாபம்கொஞ்சமேனும் இல்லையோ? என்பிள்ளைகள் தேம்பித்தேம்பி அழுகின்றதே, சாதமாகிலும் கொஞ்சம் போடும் அண்ணியாரே.



#### மூளிபலங்காரி விருத்தம்

தடுக்காதென்மொழியைக்கேட்கும் தாதிமார்களேநீர்கேளீர்
துடுக்கானபசங்களோடு சோறுண்டுசொந்தங்காட்டக்
குடிகேடிவந்தாளிங்கே கூப்பிடாதோட்டவேண்டும்
கடுகேழ்வரகுடைத்துக் காய்ச்சிக்கூழ்வார்ப்போம்நாமே.

வசனம். அடி தாதிமார்களே! இவள் ஒருத்தியாக வந்தாள் ஆகாதென்று (பெண்பன்றி தன்குட்டிகளைக் கும்பல் கூட்டி வருவது போல) தனது பிள்ளைகள் ஏழையும் இழுத்துவந்தாள். இந்தப் பிள்ளைகளைக் காட்டி என் பொருள்களைக் கொள்ளையிட வந்தாள். இவள் பிள்ளைகளும் இவளும் ஒரு கொள்ளையில் போகார்களா? இவள் பிள்ளை ஒரு தேங்கா யெடுக்க அதை நான் கைபற்றிக்கொண்டேன் என்று எதிர்த்துப் பேசுகின்றாள். யாருடைய பொருளுக்கு அலைகிறாளோ தெரியவில்லையே; இவளுடன் முகங்கொடுத்துப் பேசுவோமானால் இந்த இல்லமே தனது என்பாள். உடனே இவளை அப்புறப்படுத்தவேண்டும். குழியிலிருக்கும் பன்னிரண்டு வருடத்திய பழைய கேழ்வரகை யெடுத்து ஒன்றிரண்டுமாயுடைத்து வெந்ததும் வேகாததுமாகக் கொட்டுகூழ் காய்ச்சி கடச்கடக் காட்டி ஓட்டிவிடுவோம் தோழிமார்களே.

#### பொது விருத்தம்

செற்றகேழ்வரகுமாவைச் சில்லிப்பானையிலிட்டு
பற்றவேஅடுப்புக்கேதான் பசும்வாழைத்தண்டைவைத்து
நெற்றியிலவேர்வைசொட்ட நெடுநேரம்ஊதக்கண்ட
நற்றங்கைகோபங்கொண்டு நாத்திமுன்நவிலுவாளே.

வசனம். பன்னிரண்டு வருடமாகக் குழியில் கறுத்திருக்கும் கேழ்வரகைப்பரைத்து அதைச் சில்லிப்பானையிலிட்டு அடுப்பின்மேல் வைத்து வாழைத்தண்டை முறித்துவைத்து நெருப்பிட்டு ஊதுகிற மூளியின் செய்கையைப் பார்த்து வயறெரிந்து நல்லதங்கையானவள் சொல்லுகிறவிதம் காண்க.

மூளிபலங்காரி அடுப்புமூட்டிய பச்சைவாழைத்தண்டு
நல்லதங்கையின் பதிவிரதாதர்மத்தால்
தீப்பற்றியெரிந்து கூழ்கொதித்தல்

#### நல்லதங்கை விருத்தம்

அஞ்சியநெஞ் சடையவளாய் வாதஞ்சூதும்
அணுவளவில் லாதவளாய்த் தேவபக்தி
நெஞ்சகலா தவளாகி அன்னமேனோடு
நிமலனரு ளாலுதித்தவள் நானுமாகில்

கொஞ்சுமா சன்புதல்வ ராகிற்கப்புக்
கொண்டவளும் நானுகிற் கொடியாள்செய்த
வஞ்சகமி லாதவிந்த வாழைத்தண்டு
வளர்ந்தெரிந்து கூழ்கொதித்து வரவேண்டும்மே.

வசனம். கிஞ்சித்தும் களங்கமில்லாதவளாயும், பரமசிவனுடைய வரத்தினுல் என் தமையனுடன் பிறந்தவளாயும், என் பிள்ளைகள் ஏழும் நெறியுள்ள என்நாயகனுக்குப்பிறந்தது மெய்யானுல், கொடிய பாவியாகிய மூளிபலங்காரிசெய்த வஞ்சகமும்நிஜமானுல் அவளிட்ட வாழைத்தண்டானது பற்றிக் கலகலவென்று எரிந்து கூழ் கொதிக்கக்கடவது.

மூளிபலங்காரி விருத்தம்

பத்தினிபோலவேதான் பதுக்கியேகுதுக்குகின்றாய்
உத்தமிபென்னுலல்லோ ஊற்றுங்கூழ்கொதித்ததிங்கே
பித்தங்கொண்டலையவேண்டாம் பிறைமூன்றுகண்டபின்னே
நத்தும்பிள்ளைகட்குக்கூழு நானளித்திடுவேன்பெண்ணே.

வசனம். பத்தினியைப்போலப் பேசவந்த நல்லதங்கையே! வாழைத்தண்டை பெரித்து கூழாக்கினவள் மாதுசிரோன்மணி நானல்லவா, உன் பத்தினி வாக்கால் கூழ் கொதித்ததென்று நினைக்காதே. இதிருக்கட்டும், இந்தக் கூழையும் மூன்றாம்பிறைச்சந்திரன் மூன்றுதரம் உதித்தபிறகல்லவோ வார்க்கப்போகிறேன். நீ அது வரையில் இங்கே இருந்தாலிரு, போனுல்போ.

நல்லதங்கை விருத்தம்

மக்களேவாருமிந்த மாபாவிகூழும்வேண்டாம்
திக்கிலாதேசம்வேண்டாம் தீமைகள்வந்தேதீரும்
இக்கணம்நடந்துமுன்னோர் இருக்குமில்லிடத்தைச்சேர்ந்போம்
பக்குவமதுவேயாகும் பகர்வதொன்றில்லைதானே.

வசனம். வாருங்களடா என் அருமை மக்களா! மகாபாவியாகிய இந்த மூளியின் கூழும் வேண்டாம்; இந்த நகரம் என் அண்ணனுடையதாயிருந்தும் தற்காலம் ஆதரிப்பார் இல்லாமையால் இந்த தேசமும்வேண்டாம் நம் மூதாதைகள் வாழும் பட்டணமே போய்ச் சேரலாம், வாருங்கள் அடா மக்களா! என்பிறகே வாருங்கள், வாருங்கள்.

பிள்ளைகள் விருத்தம்

எங்களம்மான் வீடென்றும் இதுவேயுன்தாய்வீடென்றும்
பொங்கமாயழைத்துவந்தாய் போஜனங்கிடைக்காதாலே
தங்கவேகூடாதென்று சதிமோசமாகின்னம்
எங்குதான் அழைக்கின்றாயோ எங்களுக்குரைசெய்வாயே.



வசனம். கேளுமம்மா எங்களைப்பெற்ற மாதாவே! எங்களுடைய அம்மான் வீடென்றும், உன்னுடைய தமையன் வீடென்றும், எங்களை அழைத்துக்கொண்டு வந்தாய் இங்கே மூளியென்னும் கொடும்பாவி செய்த மோசத்தாலே பட்டினிகிடந்தழ நேரிட்டபடியினுலே இனி எந்த இடத்துக்கு எங்களை அழைக்கின்றாய் சொல்லுவாய் அம்மா.

நல்லதங்கை வசனம்

அடா என் அருமைப் புதல்வர்களே! இந்த வீடு நம்மதல்ல, இரவல்வீடு, இங்கு இரங்கியிருந்தோம், நமது சொந்த வீட்டுக்குப் போகப்போகிறோம். அந்த மூளி கொடுத்த அழுகல தேங்காயை தலையைச் சுற்றி எறிந்துவிட்டு என்பின்னே வாருங்களடா மக்களா.

மூளிபலங்காரியின் கொடுமையைக்கண்ட நல்லதங்கை
அண்ணன் வீட்டை விட்டு வெளிப்படல்

நல்லதங்கை தரு

பல்லவி

ஐயோ பெண்விதிவசமே இனிபென்ன
செய்வேன் விதிவசமே

அநுபல்லவி

ஐயோ பெந்தனைப்போலே அவனியில்தானுண்டோ
தெய்வமேநீசெய்யும் செய்கைக்கிரண்டுண்டோ ஐ

சரணங்கள்

மங்கைமாரவர்களிலே என்னைப்போல்பாவி
எங்கினுங்கண்டதுண்டோ
மங்கையர்தங்களிலே எங்கேயாகிலுமுண்டோ
வந்தேன்கிந்தனைக்காக வகையில்லாதெனைப்போலே
பெண்களுலகிலுண்டோ பிறந்தவிடம்வாய்க்காமல்
புவிமேலலையவிளி புகுந்தவிடமில்லாமல் ஐ

ஆரக்குறைக்காளானேன் ஐயையோவந்து
நீரப்பழிக்காளானேன்
ஆருதகுறையெல்லாம் ஆறவேணுமென்று
அண்ணனரண்மனைக்கு அடியவளபோறேனென்று
கூறவும்நீபோகக் கூடாதென்றூர்மன்னன்
கொடுநீலிகான்வந்து கொண்டேனிந்தப்பேரைதான் ஐ

சண்டாளிமகாபாவி கொடுமையென்மேல்
கொண்டாளேமூதேவி

சண்டாளிமூளிசெய்த — சதிவஞ்சகத்தினாலே
சதிருள்ளோர்நகைப்பார்கள் — தானதுவசையாலே
கொண்டவர்கைவாளால் — கொல்லுவார்போனாலே
கொல்லுமுன்மடிவது — குணமாகுமினிமேலே ஐ

தண்ணீர்க்குடங் கொண்டுபோகிற பெண்களைப்பார்த்து
நல்லதங்கை கூறுதல்

தரு

தண்ணீர்க்குடங்கொண்டு முன்னேநடக்கிற மாதர்களே — நல்ல
தம்பியென்னண்ணனைக் கண்டால்மூளிசெய்த
சதியினைச்சொல்லுவீர் தோகையரே

பெண்ணைப்பிறந்தவள் பிள்ளைபசிக்குக்கூழ்வார்க்காமல் — அவள்
பேசாதும்பேசியே ஏசித்துறத்தினாள்
மாசில்லாதுரைப்பீர் அம்மையாரே

பெண்கள் தரு

போனால்போறாள்பாவி ஊராளரசர்க்குத் தங்கையாளே — நாங்கள்
புதியஅரிசியாதும் தேனும்தினைமாவும்தாரோம்
புசித்துப்பசியாறிப்போம் மங்கையாளே

கானிலிளைத்துவந்த களைநீக்கிப்பிள்ளைகளைக் காத்திடம்மா — நீயும்
கவலைப்படாதேதாயே சொக்கர்துணையிருந்து
காத்துஇரட்சிப்பார் செங்கையாலே

நல்லதங்கை தரு

கோபங்கொள்ளாதீர்கள் அசல்வீட்டுத்தண்ணீர்யாங் குடிபோமம்மா
குலத்துவழக்கமிது வலதாய்ச்சொல்லவில்லை — [எம்
குற்றமாய்க்கொள்ளாதீர் அப்பிமாரே

பாபத்தால்நேரிட்ட பஞ்சத்திலடிபட்டு வாழ்ந்திருந்த — காசி
பட்டணத்தைவிட்டு பாலருடன்வந்து
பரதவித்துப்போறேன் பாவைமாரே

நல்லதங்கை வசனம்

கேளுங்களம்மா தாய்மார்களே! நாங்கள் ஒருவர்வீட்டிலும் புசிக்கிறதில்லை யென்று சொன்னதற்கு என்பேரில் கோபங் கொள்ளவேண்டாம்; அது எங்கள் குலதர்மம். நீங்கள் என்பேரில் கிருபைகூர்ந்து என அண்ணனார் வந்தபின்பு எந்தன் அண்ணியார் செய்த கோலத்தைச் சொல்லுங்களம்மா. நான் போய்வருகிறேன். வாருங்களடா மக்களா.



பொது விருத்தம்

அடுத்துறவாடிவந்த அணிநகர்மாதர்சொல்லை
தடுத்துதன்மக்களோடு தடர்வனந்தன்னிற்சென்று
சடுத்தங்கொண்டுரைத்தநீலி சண்டாளிமூளிசெய்த
நடத்தையைக்கண்டுவிண்டு நங்கையும்புலம்பிவாராள்.

வசனம். அகோதெப்படியென்றால், தன் அண்ணன் மாளிகையைத்தேடிச்சென்ற நல்லதங்கையானவள் மூளியலங்காரியால்மனது வாடி வெளியேவருகையில் ஜலந்திரட்டப்போகும் அசலாத்துப்பெண்கள் உபசாரவார்த்தையால் தடுத்தும் கேளாமல் ஏழுபிள்ளைகளுடன் தானும் சாவதே சரியென்று ஒரேவுறுதியாய் காட்டைத்தேடி புலம்பிக்கொண்டு வருகிறவிதம் காண்க.

நல்லதங்கை புலம்பல்

கண்ணிகள்

தெய்வமே என்னசெய்வேன் — இந்த
தீவினைக்காணவோ நானும்வந்தேன்
ஆறாத என்கவலையெல்லாம் — நான்
யாருடன்சொல்லியே ஆறுவனோ
மாறாத செல்வமுடன் — பெற்ற
மக்களும்நானும் மிகந்தானே
வெந்து உடல்மெலிந்து — நொந்த
வேளையிலேதெய்வம் போலவந்து
வேட்டைக்கு வந்த வண்ணன் — கண்டு
கேட்டுசந்தோஷமுடன்வந்து
மூளியலங்காரி சண்டாளி — பாவி
மூதேவியாள்செய் காதகமே
நாளும் வசையாச்சே — இந்த
நானிலமெல்லாம் இழிவாச்சே
பேதைமதியாள் அண்ணனை — எந்தன்
பிறப்பென்றுநம்பி இப்போதுவந்தேன்
காதகப் பாவியென்னை — இந்தக்
காதையில்விடுத்தாளே சதிகாரியவள்
கொண்ட கணவன்சொல்லைத் — தள்ளிக்
கொண்டுவந்தபழியி னருமைகண்டேன்
அன்றவர் சொல்படிக்கே — எனக்கிழி
வாச்சுதினிப்போனால் மாய்த்திடுவார்
பாவிநான் என்னுயிரை — வைத்து
பாரிலிருப்பதும் நேர்மையல்ல

ஆவிதனை பொழித்தால்        நமக்கு
  ஆருமோநற்பேர் புவிதனிலே
அடவிதனிலோடி        ஒரு
  ஆழக்கிணறுதேடி போய்விழுவேன்
தொடர்ந்தோடி வந்திடுவீர்        மக்காள
  துறவுதனைத்தேடி போய்விழுவோம்
கண்மணி என்மக்காள        நாமெல்லோரும்
  கிணற்றில்விழுந்து மடிந்திடுவோம்
அண்ணனும் தேடிவந்தால்        ஒருவேளை
  அவருக்கு அடையாளந்தானறிய
கைவிரல் மோதிரத்தைக்        கழட்டியே
  காணவழிதேடிப் போடுவேனே
செப்ப வனந்தனிலே        மோதிரத்தை
  தெரியவழிதேடிப் போட்டிடுவேன்
ஆவாரங்கொத்தொடித்து        வழிகளில்
  அடையாளமாகவே போடுவேனே.

காட்டில் நல்லதங்கை இடையரைக் கண்டு
கிணறு இருக்குமிடத்தை கேட்குதல்

நல்லதங்கை விருத்தம்

ஆயரே அண்ணன்மாரே ஆரண்யந்தன்னிலெங்கும்
போய்த்திரிந்தறிந்துநீங்கள் புகழ்கிணறறிந்திருப்பீர்
தூயதண்ணீர்குடிக்கத் துரிதமாய்க்காட்டுவீரேல்
சேயருநானுமிப்போ திருப்தியையடைகுவோமே.

வசனம். அப்பா ஆடுமேய்க்கும் ஆயர்களே! நீங்கள் இந்தக் கானகமெங்கும் திரிந்துவருகிறவர்களாதலால் கிணறுகள் இருக்குமிடம் உங்களுக்குத்தெரிந்திருக்கும், அருகிலிருக்கும் ஒருதுறவைக் காட்டினால் நானும் பிள்ளைகளும் தாகவிடாய் தீர்த்துக்கொள்வோம்.

இடையர் வசனம்

யாரம்மா தாயே! நீ யார்? உன்னைப் பார்த்தால் பட்டத்தரசி போல் காண்கிறது; ஏதோ மனவருத்தத்தால் வாடி வதங்கி மாணிக்கம்போன்ற எழுபிள்ளைகளுடன் வந்து கிணறு இருக்கின்ற இடத்தைக் கேட்பதைப் பார்த்தால் சந்தேகமாயிருக்கிறது. கிணற்றைத் தேடவேண்டாம். நல்ல கிழங்குகளையும் பழங்களையும் பரித்துத் தருவதுடன் பாலும் கறந்துகொடுக்கிறோம், அவைகளைச் சாப்பிட்டு தாகவிடாய் தணிந்து சுகமாய் போய்வாரும் தாயே.



நல்லதங்கை வசனம்

கேளுங்கள் ஆயர்குலத்து அண்ணன்மார்களே! நாங்கள் உபவாசமிருக்கும் நாட்களில் கிணற்று ஜலத்தைவிட வேறெதையும் சாப்பிடுகிறதில்லை யாதலால் கிணற்றைமாத்திரம் காட்டுங்கள்.

இடையர் வசனம்

ஆனால் அதோ தெரிகிற ஆலவிருட்சத்தின் தென்பாரிசத்தில் பாழடைந்த பழங்கிணறு இருக்கிறது; வேறெதுவும் அருகிலில்லை. எங்கள் ஆடு மாடுகளும் வெகுதூரம் போய்விட்டது. நாங்களும் போய் மடக்கிவருகிறோம் தாயே.

நல்லதங்கை விருத்தம்

கானலைநீரென்றெண்ணிக் கடுவெளிதிரியுமான்போல்
நானுமென் அண்ணன்வாழ்வை நம்பியேவந்தேன்கான
லானவண்ணியாலேநாமும் அடவியில்திகைக்கலானோம்
கானகவழியேசெல்வோம் கடுகியேவாரீர்வாரீர்.

வசனம் அடா செல்வங்களே! அண்ணன் வாழ்வை நம்பிவந்த எனக்கு அண்ணன்தேவி கானலுக்கு ஒப்பானாள் அதனாலே இந்தக் காட்டில் நாம் திகைக்கலானோம். ஆனாலும் பெரிதல்ல என்னுடனே வாருங்களடா மக்காள.

பிள்ளைகள் தரு

அம்மம்மாவெங்களுக் கதிகமாய்ப்பசிக்குதே
அழைத்துப்போவதுவெங்கே சொல்லம்மா        இப்போது
இழுத்துப்போவதுவெங்கே நில்லம்மா        அம்

நல்லதங்கை தரு

சும்மாவென்பிள்ளை சந்தோஷமாய்வாருங்கள்
சோகந்தீரவேவிடாய் ஆறவே        துறவில்
ஆகமுடனேதாகம் தீரவே        சும்

பிள்ளைகள் தரு

வந்தநகரைவிட்டு எந்தநகர்க்குமினி
மாதாவேபோவது சொல்வையோ        இன்னம்
வாதைப்படமிழுத்துக் கொல்வையோ        வந்த

நல்லதங்கை தரு

அடங்காதபசியெல்லாம் ஆற்றலாய்விடுபோய்
அதுவரைகனிதாரேன் உண்ணுங்கள்        உம்மைச்
சதிசெய்தமாமியை எண்ணுங்கள்        அட

பிள்ளைகள் தரு

என்னுமுலகினில் உண்ணும்பொருள்களில்
என்னத்தைதாயுண்ண போதிலும் — தாயே
அன்னத்துக்கீடுண்டோ ஏதாகிலும் — என்

நல்லதங்கை தரு

கண்ணுமறிவுள்ள நான்பெற்றபாலர்காள்
காட்டில்அமுதுக்கினை இல்லைதான் — காட்டில்
கனிகளைவிட்டாலோ கொல்லைதான் — கண்

பிள்ளைகள் தரு

கனிபுசித்தடவியைக் கடந்துபோய்வீட்டினில்
கலத்தினில் அமுதன்ன வைப்பையோ — இன்னம்
காடுபோடெல்லாம் இழுப்பையோ — கனி

நல்லதங்கை தரு

கூறியபடிபோனால் பறிக்கிறேன்கனிகளைக்
குழந்தைகளாயிங்கே வாருங்கள் — கொஞ்சிக்
கோவைக்கனிபால்பசி பாருங்கள் — கூறிய

நல்லதங்கை பிள்ளைகளைக் கிணற்றில் தள்ளல்

நல்லதங்கை கண்ணிகள்

வாருங்களென்மக்களா அந்த மாட்டிடையர்சொன்னவார்த்தைப்படி
பாருங்களென்மக்களா இதோ பாதாளமேவியபாழ்கிணற்றை

மாண்டுமடிவமடா என்மக்களா மாபாவிமூளிவாழ்சீமையிலே
நீண்டவனந்தனிலே பொல்லா நிஷ்டூரனென்னண்ணன்சீமையிலே

காலமுடிவாச்சே அந்தக் கலைக்குதவாமூளியைக்காணவந்து
நீலிமுகம்விழித்து நாமும் நீடூழிகாலம்வாழலாமோ

போற்றுமுலகினிலே பெற்ற பிள்ளைகள்தாயுமொருமிக்கவே
காற்றியின்கொடுமையினால் சகியாது நல்லதங்கைமடிந்தாளென்று

கீர்த்தியிருந்திடவே என்மக்காள் கிணற்றில்விழுந்துமடிவோமே
போற்றிபெண்குலதெய்வமே போட்டேன் கிணற்றிளம்பிள்ளையை

போட்டயிளம்பிள்ளையோடு ஒரு புத்திரனையும்போட்டுவிட்டேன்
வாட்டமதாயுடனே ஒரு மைந்தனையுந் தூக்கிப்போட்டுவிட்டேன்

மடிந்திடும்மூவருடன் நாலாம் மகனையுமாகக்கிணற்றில்விட்டேன்
உடனோடிவந்தொரு பாலனை ஒக்கவேதூக்கிக்கிணற்றிலிட்டேன்

ஏற்றயிருவருக்கும் இளையோனை எடுத்துக்கிணற்றிலேபோட்டேனே
மூத்தமகனவனும் நான்கூப்பிட முகத்தைதிரும்பாமலோடினனே.



நல்லதங்கை விருத்தம்

ஓடவும்வேண்டாமென்தன் ஒப்புள்ளமகனேநீதான்
ஓடிநீபோனாயானால் உலகத்தார்நகைப்பார்கண்டாய்
ஓடவேவேண்டாம்வாடா உன்னுடன்பிறந்தார்மாண்டார்
ஓட வேவேண்டாம்நாமும் ஒருமிக்கமடிவோம்வாடா.

வசனம். அடா என் கண்மணியே! நீ ஓடவேண்டாம்; ஒளிய வேண்டாம். இந்தக் காட்டில் உன்னைத்தேட என்னால் முடியாது; வாடா.

மூத்தபிள்ளை தரு

ஓடிப்பிழைத்துப்போறேன் என்தாயேநான் ஓடிப்பிழைத்துப்போறே
ஓடிப்பிழைத்துப்போறேன் உன்பேரைச்சொல்லியே [ன்
காடுமலைபுந்தாண்டி — நாடுநகரந்தேடி — ஓடி

நல்லதங்கை தரு

பிழைக்கயிடமுமேதடா மகனேயுன்னை அழைக்கமனிதரேதடா
வழக்குமுனக்கேதடா — வழிபோர்கண்டால்நம்மை
இழுக்கமாகச்சொல்வார் — அழைக்கச்சேபோகாதே — பிழை

மூத்தபிள்ளை தரு

அழைத்துவந்தாயே எங்களைநீதானே பிழைக்கவேசெய்யாது
ஒழுக்கமுடனேபேசி — உளவாகயிட்டுவந்து
இழுத்துக்கிணற்றில்போட்டு அழுத்திக்கொல்லாதேஅம்மா — அ

நல்லதங்கை தரு

ஆறுபேருஞ்சாகவே இனியிரண்டு பேரிருந்தென்னபலன்
காரியமென்னடா — ஓரியாய்நின்றதினால்
வீரியமாகநாம் — சேருவோம்ஒருமிக்க — ஆறு

மூத்தபிள்ளை தரு

ஊரைக்கண்டோடிபோனால் உந்தன் பேரைச்சொல்லிபோனால்
கூறும்நமதுகுலம் — கோத்திரமும்விளங்க
பாரில்திவஷம்திங்கள் — தோறும்நான்தருகிறேன் — ஊ

பொது விருத்தம்

காடெலாம்பதுங்கியோடும் கருத்துள்ளமைந்தன்தன்னை
தேடியேபோடிபெண்ணை திகைத்துப்பின்கானலாலே
மாடுகள்மேய்ப்போர்தம்மால் மடக்கியேபிடித்துவந்து
நீடியகிணற்றில்போட்டு நின்றுரைசெய்குவாளே.

வசனம். இவ்விதமாக ஓடிப்போன மூத்தகுமாரனை மாடுமேய்க்கும் இடையர்களின் சகாயத்தால் பிடித்துவந்து அப்பிள்ளையையும் கிணற்றில் தள்ளிவிட்டு தானும் அக்கிணற்றில் விழுந்து இறக்கப் போகிறவிதம் காண்க.

### நல்லதங்கையும் கிணற்றில்விழுந்து உயிர்விடல்

#### நல்லதங்கை அகவல்

அரஹராசிவசிவா அவனியிலென்னைப்போல்
பெரியதுயருறும் பேதைகளுண்டோ
மருவியேயெந்தன் மக்களும்நானும்
திரவியமிழந்து தேசமும்விட்டு
மன்னனைப்பிரிந்து வசையதுகொண்டு
உன்னியேஅண்ணன் உறவதைமறந்தேன்
மக்களைக்கொன்ற மாபாவியாகினேன்
திக்கில்லாப்பிணம்போல் திகைக்கவுமானேன்
வனமதில்தனியாய் வந்துநான்நின்றேன்
இனிமேல்நானுமே யிருக்கலாகாது
கனமானகூபக் கரையோரமாக
தன்னந்தனியளாய் தாமரையிலைமேல்
பொன்னாபரணம் பொற்கடகங்கள்
கைமோதிரமும் காலாழிகளும்
செப்பிடுந்தாலியும் சேர்ந்தணிபணியுடன்
எல்லாப்பணியையும் இன்பமாய்வைத்து
நல்லாயிருக்கக் கடவதென்றுரைத்து
பாப்பாரஆடையைப் பாங்குடனுடுத்தி
காப்பாய்நீயென்று கதிரவன்தன்னை
கைதொழுதேற்றிக் கிணற்றையுஞ்சுற்றி
தெய்வமேமதுரைவாழ் தேவனேபோற்றி
திங்களையணிந்த சிவனேபோற்றி
எங்கள்மீனாட்சி இறைவியேபோற்றி
தங்கமுமணிபோல் தனையரும்யானும்
இங்ஙனேவுமது இணையடியணையும்
பாக்கியமருளும் பாழ்ங்கிணறுதனில்
சீக்கிரம்விழுகிறேன் சிவனே
காக்கவேணுமென் கணவனைநீரே.

#### பொது வசனம்

இவ்விதமாக நல்லதங்கையம்மன் தனது இஷ்டதேவதைகளைத் துதித்து கிணற்றில் விழுந்தமாத்திரத்தில், கங்காபவானி மனம் தாளாமல் மூன்றுதரமும் தூக்கிக் கரையில்விட, மறுபடியும்வீழ்ந்து மதுரை மீனாட்சியம்மையாருடைய பாதாரவிந்தங்களிற் சேர்ந்த பின்பு, வேட்டையாடப்போன நல்லண்ணமகாராஜன் துர்ச்சகுனம் கண்டு பட்டணம் நாடிவருவது காண்க,



### காட்டில் வேட்டையாடும்
### நல்லண்ணன் துர்க்குறி காணுதல்

#### நல்லண்ணன் தரு

பல்லவி

என்னமோ அறியேன்    இக்குறியாலே
என்னகர்தனிலே

அநுபல்லவி

என்னமோவென்னகர்    தன்னில்விளைந்தது
இன்னதென்றறிகிலேன்    என்மனந்துடிக்குது    என்

சரணங்கள்

எந்தன்இடதுதோள்    பந்துபோல்துடிக்குது
கந்தமுங்கண்டுநற்    கந்தங்களாகுது    என்
இயலானகண்களில்    ஈவந்தடிக்குது
அசைந்தாடும்மயில்களோ    அலறிபறக்குது    என்
பட்டத்தானையிதோ    பதறிவிழுகுது
பகருஞ்சேனைபுரவி    பழுதுமடியுது    என்
இப்படியெல்லாம்    இடறுகள்நேர்வதால்
இக்கணமேவீடு    சேர்வதேநலமென்று    என்

#### பொது வசனம்

இவ்விதமாக வேட்டையாடும்படி கானகஞ்சென்ற நல்லண்ண ராஜன் அங்கே சில துற்குறிகள்கண்டு உடனே தன்னகரம் வந்து சேர்ந்ததும், தன் மனைவியாகிய மூளியலங்காரி கள்ள வுபசாரஞ் செய்யும்விதம் காண்க.

### காட்டில் துர்க்குறிகண்டு வீட்டுக்குத் திரும்பிய
### நல்லண்ணனுக்கு மூளியலங்காரி
### கள்ளவுபசாரணை செய்தல்

#### மூளியலங்காரி தரு

வாரும்ராஜனே எந்தன் பிராணநேசனே
ஸ்ரீயென்பாகனே எனை மறவாநாதனே
மதனகிரீடியே சுவாமி மன்னர்மேட்டியே
வதனசுந்தரனே உன்னை துதிகள்செய்யவே
தண்டாமலர்ப்பதம் நாதா இரண்டையானுமே
கண்டிகைஜலம் நான் கொண்டலம்பினேன்
ஆசைப்பட்டினால் அடைத்து பூசகந்தமும்
வாசம்வீசவே வெகு நேசமாகவே

முல்லைசெவ்வந்தி மலர் நல்லசாமந்தி
மல்லிகைமுதல் மலர் எல்லாங்கொண்டுநான்
பாதம்அர்ச்சனை செய்தேன் போதநாளுமே
காதல்நேசனே உந்தன் பாதமேசரணம்
வேகமாய்வந்த உந்தன் சோகம்தீரவே
தாகந்திருமே வந்து போகமன்னனே
உருசிகளாகவே செய்த அறுசுவைகளை
பசிதான்தீரவே உண்ணும் உசிதமன்னனே வாரும்

மூளிபலங்காரி விருத்தம்

பூசனைபுரிந்தேனெந்தன் புகழ்பெருமன்னனேகேளீர்
தேசமெய்க்களைபுந்தீர செங்கைசாமரையினாலே
வீசினேன்வாருமுந்தன் மேதுநீராடிபன்னம்
ஆசைபாயதிர்துநீரும் அன்புடனிருந்திடீரே.

வசனம். வாரும் எனது பிராணநாயகா! தங்கள் பாதத்திற்கு அர்ச்சனை செய்து பூசித்து வெய்யிலில் வந்த இளைப்பு தீர வெண் சாமரையால்வீசினேன். தாங்கள் எழுந்திருந்து வெந்நீராடி அன்னம் புசித்து மகா சந்தோஷமாக யிருக்கலாம் வாரும் நாதனே.

நல்லண்ணன் விருத்தம்

ஒருநாளுமில்லாதிந்த வுபசாரவார்த்தைசொன்னாய்
திறமானமாதேயெந்தன் தேவியேசொல்லக்கேளாய்
மருவியான்வேட்டையாடும் வனத்தில்கண்டனுப்பவந்த
உரிமையென்தங்கையெங்கே யுரைத்திடுவாய்நீபெண்ணே.

வசனம். அ ோகேளும் பெண்ண ப ைநாயகி! எனக்கு ஒருநாளும் செய்யாத உபசாரஞ் செய்த ய ல்லதாகட்டும். நான் கானகத்தில் வேட்டையாடினபோது அங்கேகண்டு அனுப்பின என் பிறவியாகிய நல்லதங்கையும் எழுபிள்ளைகளும் எங்கேயிருக்கிறார்கள் சொல்லும் பெண்ணே பிராணநாயகி.'

மூளிபலங்காரி விருத்தம்

நாத்தினார்வந்தாளிங்கே நானுபசரித்துபென்னால்
வேற்றுமையில்லாமலேதான் வேண்டியபடிக்குத்தாழ்ந்து
போற்றிநற்பணியைச்செய்தேன் புண்ணியவாசேநீதான்
காத்திருப்பதுயேன்சும்மா கடும்பசிதீரவாரீர்.

வசனம். கேளும் பிராணநாயகா! என் நாத்தினாரும் நாத்தியின் பிள்ளைகள் எழுபேரும் வந்தார்கள். நான் எதிர்கொண்டுபோய் சரணஞ்செய்து உபசரித்து அழைத்துக்கொண்டுவந்து கபடமில் லாமல் வேண்டினபடிக்கு போஜனம் தந்தேன். அவர்களுக்கு ஒரு வித குறைவுமில்லை, நீரேன் இளைப்பாகக் காத்திருக்கிறீர்; போஜனம் செய்ய எழுந்துவாரும் பிராணேசா.



நல்லண்ணன் தரு

அடிபாவி எனக்குவாய்ப் பூசாதே நல்ல
தாகட்டும் அறிவேண்டி பேசாதே
வடிவானயென்தங்கை வனத்திலெந்தனைக்கண்டு
வந்தவள்தன்னைநீ கண்டபா அவள்
வருமுன்னேஎதிரோடி சென்றுயா
இட்டுவந்து அரண்மனைக்குள் புகுந்தையா
நீயும்மகிழவுபசரித்து நின்றையா அடி
குடிகேடியேன்சும்மா கூறுகிறாயென்முன்
கூறும்வார்த்தையைக்கேட்டால் பாரினில்விசமென்பார் அ

மூளிபலங்காரி தரு

ஏனேயித்தனைகோபம் கொள்கிறீர் மன்னா
எந்தனையேன்சும்மா வைகிறீர்
ஆனாலுமென்சொல்லை அறியாமலெந்தனை
அதட்டிப்பேசவதென்ன சிரமமா உமக்கு
அடுக்குமோசொல்லும்வார்த்தை தர்மமா என்னை
அடிப்பேனென்றுரைப்பதும் வர்மமா சுவாமி
அப்பப்போயிதுவென்ன தர்மமா
மானனவுன்தங்கை வரவுங்கண்டெதிரோடி
வணங்கிப்பின்னயம்பேசி வந்தயெந்தனையேசி ஏ

நல்லண்ணன் தரு

எத்துக்கள்ளிமெத்த கற்றகல்விகளெல்லாம்
எனக்குநீசொல்ல வந்தாயடி என்னை
ஏமாற்றவோ நினைந்தாயடி உன்
சூதெல்லாமறிகுவேன், பாரடி அடி
எங்கேதப்பித்துக் கொண்டாயடி
சற்றுமெண்ணாமலே சமர்த்தாகயென்னுடன்
சாதிப்பதெல்லாமிப் போதேநானறிவேன் எத்

மூளிபலங்காரி தரு

மகராசியுன்தங்கை மக்களும்தானுமாய்
வருவதைக்கண்டுநான் மகிழ்ந்து வெகு
வரிசையுடனேகிப்புகழ்ந் தழைத்து
வந்தேனரண்மனையில் புகுந்து மிக
மகிழ்வாகயிருந்தாளே உகந்து
வெகுவாயென்னுடன்நயம் பேசியின்பமுங்காண
வேணதுபசரித்து நாணமுடனிருக்க மக

### நல்லண்ணன் தரு

மக்களும்தானுமாய் வந்தபென்தங்கைநான்
வந்தபின்நோமாய்க் காணேமே இருந்தால்
வருவாளென்னெதிராகத் தோணுமே இன்ன
வகைபென்றறிகிலேன் நானுமே அடி
உன்மாறுபாடென்றெண்ண வேணுமே போடி
இக்கணமெங்கேயிருந் தானும்வருவாளோ
ஏதோவுனதுபெண்ணம் சூதும்நான்தெரிகிலேன் மக்

### மூளிபலங்காரி தரு

நாத்தினியார்க்குநான் வேற்றுமைசெய்தது
நாதனேநீயறியாயோ இல்லை
நான்சொல்லுவேனோ தகாதமொழி
நங்கைக்குநான்செய்தால் சூது உமக்கு
நான்மனையாளென்பதேது வெகு
நேர்த்திநீர்சொல்வது நீரிருந்தால்வேறே
நின்றபென்றால்வேறே புண்டாசொல்லுவீர்மன்று நா

### நல்லதங்கை தரு

பேறுனபெனக்குநீ பெண்டல்லடிநீலி
பேசாதேபோடி பென்னுடி சும்மா
பினத்துறுபிதுவென்ன வாதடி அடி
பேபேபுன்நடத்தையைபென்றும் அறியாப்
பேர்க்குச்சொன்னால் கேட்பாரடி நான்
மாறுநிருந்தவுன் வழக்கமறிந்தெனக்கு
மாறுபாடானசொல்லை யாரிடஞ்சொல்கிறுப் பே

### மூளிபலங்காரி தரு

தனக்குத்தானேயுமது தங்கைபென்நாத்தினி
தானவளைக்கண்டதாலே கோடி
சம்பத்துண்டானது போலே வெகு
சந்தோஷங்கொண்டேனே மேலே இப்போ
சதிநடக்குமோ எந்தனுலே
எனக்கில்லாதஅக்கரை உமக்கென்னயிருக்குது
ஏன்சும்மாபேசுறீர் நான்சொன்னதேசரி தன

### நல்லண்ணன் விருத்தம்

எடுத்தெனக்குரைப்பதெல்லாம் இமைப்போதும்நம்பமாட்டேன்
அடுக்குமென்தங்கையாளை அடிபாவியின்னங்காணேம்
இடக்கென்னசெய்தாபோதான் எனக்கதைபுரைசெய்வாய்நீ
நடுக்குதேபெனதுதேகம் நல்லதங்கையைக்காணுதே



வசனம். அடி நீலி! உன் வார்த்தையை ஒருபோதும் நம்புகிற தில்லை; நீ சொல்லிய வார்த்தை உண்மையாகவேயிருந்தால் என் தங்கையானது இன்னம் என்னெதிரில்வாராமலிருக்குமா? அடிபாவி! இன்னமுங் காணேனே, நீ எவ்விதமான கபடுவஞ்சனைசெய்தாயோ, நிஜத்தைச் சொல்லடி பாவி.

### மூளிபலங்காரி தரு

வந்தாத்திக்குசெய்த வரிசைகளைக்கேளும்
முந்திப்போய்நின்றபான் முக்கால்வணங்கினேன்
சந்தோஷமாகக்கூட்டி சதிருடன்வந்தேனே
வநதவுடன்சித்திர வர்ணப்பாய்போட்டேனே
தட்டுதாம்பூலம்பன்னீர் சந்தனபுஷ்பமும்
மட்டுமிதமில்லாமல் வரிசைகள்வைத்தேனே
கொண்டதாகந்திரமோர் மொண்டுகொடுத்தேனே
கண்டு அவளிளப்பை கடுகிபுலையைவைத்தேன்
சின்னசம்பாசாதம் சமைத்தேனொடிக்குள்ளே
தென்னங்காய்சமைத்து தேன்பாகைப்போல்வைத்தேன்
வாழைக்காய்நெய்தனில் வடைபோலேசமைத்திட்டேன்
ஈழப்பலாக்காயை இன்பமாய்ப்பொரித்திட்டேன்
கொத்தவரைக்காயும் கொம்புபாகற்காயும்
கத்தரிக்காய்களும் கனிவாய்ப்பொரித்திட்டேன்
அப்பளம்வடைபோளி அதிரசந்தோசையும்
முப்பழஞ்சர்க்கரை மோர்குழம்பும்வைத்தேன்
வற்றல்வகைகறி வகைவகையானதும்
சுற்றிவைத்தின்பமாய்த் தோணப்பருப்புமிட்டேன்
முத்துபோல்சாதத்தில் மொண்டுநெய்வார்த்திட்டேன்
இத்தனையுஞ்செய்து இருந்துவுபசரித்தேன்
தையலுண்டபின்தட்டில் தாம்பூலமும்வைத்தேன்
நயமாயிருபுறம் நாரியர்விசிறிட
தூங்கினள்வெகுநேரம் சொர்ணக்கட்டிலின்மேலே
தூங்கியெழுந்துசற்றே சொக்கட்டாணுடினள்
ஆடியபோதல்லோ அன்பாதவெந்தனைக்
கோடிசேலையொன்று கொடுக்கவேணுமென்றாள்
ஒன்றுகேட்கவென்னை ஒன்பதுஅளித்திட்டேன்
அன்றவள்கேட்காமுன் ஆபரணந்தந்தேன்
வழக்கம்போலெப்போதும் நான்மாளிகைப்புறம்
புழக்கடைபோய்வந்தேன் பூவையைக்காணேனே
தேடினேனூரெங்கும் திசையெங்கினுமதிரிந்தேன்
காடெல்லாம்தேடினேன் கண்ணில்காணுமல்வந்தேனே

### மூளிபலங்காரி விருத்தம்

கண்ணிற்கண்டதுகளெல்லாம் கனமுடனளித்திருந்தும்
என்னிடஞ்சொல்லாமற்சென்ற ஏந்திழைதனைநினைந்து
அன்னமாகாரமின்றி அதுமுதல்துக்கமின்றி
எண்ணியேவுருகலானேன் என்மீதிற்கோபம்வேண்டாம்.

வசனம். கேளும் பிராணநாயகா! இவ்விடம்வந்த எனது நாத்தியார் கண்ணில்கண்டு கேட்டதெல்லாம் தடையின்றி கொடுத்திருந்தும் என்னுடன் சொல்லாமற்போனதற்கு நான் என்ன கொடுமைசெய்தேன். அவள் போனநாள் முதற்கொண்டு அன்ன ஆகாரமில்லாமல் நித்திரையில்லாமல் நினைந்துநினைந்து மனமுருகுகிற அடியாளைக்கண்டு கடிந்து கோபங்கொள்வது தர்மமோ என் பிராணநாயகா.

### நல்லண்ணராஜன் விருத்தம்

கண்டுசெய்தாற்போல்சொன்ன கபடவஞ்சியாளான
மூண்டைசண்டாளிமூளி மூதேவியாலேதங்கை
விண்டதைக்கண்டுதேட வேணுமென்றுடனேமன்னன்
அண்டர்சூழ்மதுரைதன்னு டனைத்துமேதேடலுற்றான்.

வசனம். அடி மாயக்கள்ளி! நீ இப்போது சொல்லியவண்ணம் செய்திருந்தால் என் தங்கையும் பிள்ளைகளும் இவ்விடத்திலிராமல் ஏன் போகிறார்கள்? உண்மையாகச்செய்தவள்போல் சொன்ன கபடவஞ்சகியாகிய மூளிபலங்காரி! உன்னால் வெளிப்பட்ட தங்கையை என்று காணப்போகிறேன்; நான் எங்குகண்டுதேடுவேன் ஜெகதீசா.

### நல்லண்ணன் கண்ணிகள்

இந்தமதுரையிலே தேடி — எந்தவிடம்போவேன்
வந்தவென் தங்கையும் — மக்களுமெங்கேபோனாள் இ
இங்கிர்தமாகவந்த பெந்தன் — தங்கையைக்காணேனே
மங்கைமடந்தையரே நகரில்வாழ் — தங்கைதமக்கையரே இ
மாநிலமீதினிலே உயர்ந்த — மேன்மையில்தானிருந்த
நான்மறைவேதியரே தங்கை — தான்வரக்கண்டீர்களோ இ
வர்த்தகசெட்டிகளா பிறப்பு — வந்ததைப்பார்த்தீர்களா
கர்த்தன்கிருபையிதோ வீட — வீதியுஞ்சுற்றினனே இ
அருமைவேளாளர்களே நீங்கள் — அறிந்தீரோ தங்கைவர
தெருவழிவரக்கண்டால் உடனே — தெரிவிப்பீரெந்தனுக்கு இ
போற்றுமதுரையிலே எங்கெங்கும் — பார்த்துதான்வாறேன்
ஏற்றசூத்திரர்களே என் — தங்கையைக்காண்கிலனே இ
விண்ணப்பங்கிறேன் என்தங்கையைக் — காணமல்ஏங்குகிறேன்
ஆறுதுமென்பிறவி ஊரைவிட்டுப் — போனாளோஎன்செய்வேன் இ



### நல்லண்ணன் விருத்தம்

ஊரிலுள்ளோரேபெந்தன் உடன்பிறப்பானதங்கை
காரிழைமக்களோடு கடிநகர்வீதிதன்னில்
சேருடன்வந்திருப்பாள்தன்னைத் தெரிந்தவரெவராகிலும்
நேருடனெனக்கிப்போது நிகழ்த்துவீரியபத்தானே.

வசனம். இந்தப் பட்டணத்திலுள்ள பிரஜைகளே! என்தங்கை கோபமாக தனது மக்களை அழைத்துக்கொண்டு வந்ததாம். இதை யாராகிலும் பார்த்தீர்களோ? பார்த்திருந்தால் சொல்லுங்கள் தாய் தமக்கைமார்களே.

### ஜலந்திரட்டச்சென்ற வழியில் நல்லதங்கையைக் கண்டு வார்த்தையாடிய பெண்களில் ஒருத்தியாகிய புண்ணியவதி சொல் விருத்தம்

மதுரைமாநகர்க்குவேந்தே மதனிநின்மனைவிசெய்த
சதியினால்பசிதாளாது தனையருந்தானுமொந்து
எதிரினிலெம்மைக்கண்டு ஏந்திழைநல்லதங்கை
துதியுடனுமக்குச்சொல்லச் சொல்லியேவனஞ்சென்றாளே.

வசனம். கேளும் மதுராபுரிக்கரசே! உமது தங்கையானவள் தனக்கு நேர்ந்த பஞ்சத்தினாலே பிறந்தவீடு தேடிவந்து உமது அரசியாகிய மூளிபலங்காரி மரியாதையில்லாமல் அவமதிப்பான வார்த்தைகளைச்சொல்லி, தேங்காய்களைக்கண்டு பிள்ளைகள் ஓடி எடுக்க, அவ்வளவு பதட்டமாவென்று அப்பிள்ளைகளை அடித்து ஆயிரந்தேங்காயில் அழுகல்தேங்காய் ஒன்றுகொடுத்து அவர்கள் பசிக்கு அமுதளிக்காமல் அவர்களுக்காக கூழைக் காய்ச்சியதையும் வார்க்காமல் வீட்டைவிட்டுத் துரத்தினாள். ஜலந்திரட்டச்சென்ற நானும் என்தோழிகளும் அதுவறிந்து அரிசி நெய்முதலிய உணவுப் பொருள்கள் தருகிறோமென்று பலவாறு வருந்திக்கேட்டுக்கொண்டும் மறுத்துவிட்டு இந்த என் விருத்தாந்தத்தைமாத்திரம் என் அண்ணனிடம் சொல்லுங்களென்று பிள்ளைகளை அழைத்துக்கொண்டு கானகமார்க்கமாகப் போயினள் அரசே.

### நல்லண்ணன் வசனம்

ஆஹா பஞ்சத்தால்நொந்து பாலருடன்வந்த பசுங்கிளிபோன்ற என் அருமைத்தங்கையைப் பலவித பட்சணங்களால் பசியாற்றி உபசரித்துப் பாதுகாக்காமல் பிள்ளைகள் பதறும்படியாக அடித்ததுமன்றி, அவர்களுடைய பசியையும் ஆற்றாமல் துரத்திய பாவியாகிய மூளியை என்னசெய்தாலாகாது; இருக்கட்டும் பிறகு பார்த்துக் கொள்ளலாம், உடனே கானகஞ் சென்று தேடுவோம்.

### நல்லண்ணன் தரு

ஐயோவென் தங்கையைக்காணேன் — இந்த
அடவியில் என்செய்குவேனே — ஐயோ

செப்பவேதனைசெய்தமூளி பாவி
  நாத்தினுள் பிறப்பையுக்காளி ஐயோ
அதோதெரியுது ஆரண்யவழியும் கணை
  யாழியும் அடையாளத்தழையும் ஐயோ
சுதர்களிடப் பாதக்குறியும் இதோ
  தோணுது சென்றிடில்தெரியும் ஐயோ

வசனம். சரி நமது தங்கை இவ்வழியாகத்தானே சென்றிருக்க வேண்டும். நாம் ஒருசமயம் தேடிவந்தால் வழி தெரியும்பொருட்டு தான் சென்ற மார்க்கத்தில் ஆவாரந்தழைகளை ஒடித்துப்போட்டது மல்லாமல் தனது கணையாழியையும் எரிந்துவிட்டிருக்கிறதாகத் தெரிகிறபடியால் இவ்வழியே செல்வோம். இதோ மாடுமேய்க்கும் ஆயர்களும் எதிர்ப்பட்டார்கள். இவர்களைக் கேட்டுப்பார்ப்போம்.

நல்லண்ணன் இடையர் சொல் தரு

நல்ல-எழுபிள்ளையுந்தாயும் இவ்வழிவந்ததை ஆயரேகண்டதுண்டா
இடை-பாழுங்கிணறுகேட்டனள்காட்டினேம்பாப்பரப்பாய்நடந்தாள்
நல்ல-தங்கையவளாச்சே எங்ஙனம்சென்றாளோ சரியாய்சொல்வீரே
இடை-எங்களரசரே உங்கள்தங்கையென எண்ணினால்விடுவோமோ.

வசனம். கேளும் மகாராஜனே! உமது தங்கையென்பது எங்களுக்குத் தெரிந்திருந்தால் வீட்டுக்கே அழைத்துக்கொண்டுவந்துவிட்டிருப்போம். வழிப்போக்கர் யாரோவென்றல்லவோ துறவைக் காட்டினோம். அதுவுமல்லாமல் பாழுங்கிணற்றுநீர்உங்களுக்குதவாது பால் கொண்டுதருகிறோம் பல்லாக்களில் கூழிருக்கிறது குடியுங்கள் என்றுசொல்லி வாதாடினோம், அதற்கு நாங்கள் உபவாசமிருக்கிற நாட்களில் ஊற்றுஜலத்தைத் தவிர வேறெதுவும் சாப்பிடக்கூடாதென்று நாங்கள் காட்டிய இந்த வழியே போனார்கள் மகாராஜனே.

நல்லண்ணன் வசனம்

நாம் இனி தாமதிப்பது சரியல்ல, ஆயர் குறிப்பிட்ட வழியே சென்று பார்ப்போம். ஆஹா இதென்னவிந்தை. இக்கிணற்றின்மேல் ஆபரணங்கள் கழற்றிவைத்திருக்கிறது. கிணற்றிலும் தலைமயிர் அலைமோதுகிறது. ஐயையோ தெய்வமே! தவத்தால் பிறந்த பெண் கிணற்றில் விழுந்து இறக்கநேர்ந்ததே? பிள்ளைகளும் இதிலேதான் இறந்துகிடப்பார்கள். இறங்கி தேடிப்பார்ப்போம். அட்டா நாம் பூர்வஜென்மத்தில் பெரும்பாவத்தைச் செய்திருப்போம். இல்லாவிடில் எழுபிள்ளையுந் தாயுமாக நம்முடைய பாழுங்கண்ணால்பார்த்து வெளியேஎடுத்துப்போட்டு துக்கிக்கவும் தகனஞ் செய்யவுமாச்சே.

நல்லண்ணன் புலம்பல் கண்ணிகள்

சீராட்டிவளர்த்தபெண் தங்கையரே இந்த
  ஸ்திதியில்காணவோதான் தங்கையரே



பார்புகழ்காசியாள் தங்கையரே இந்த
  பழிக்குநான் ஆளானேனே தங்கையரே
மக்களும்நீயுமாய் தங்கையரே இங்கு
  மாளவோவந்தீர்கள் தங்கையரே
திக்கில்லையென்றுதான் தங்கையரே இங்கு
  திகைத்துவிழுந்திறந்தீரோ தங்கையரே
சித்திரப்பதுமைப்போல் பிள்ளைகளும் தானே
  ஜீவனைவிட்டதுவோ தங்கையரே
உத்தமிநீபெற்ற பிள்ளைகளும் கங்கைக்
  குறவாகிபோயினவோ தங்கையரே
மூளியலங்காரி படுபாவி பாலே
  மோசம்போனேன்நான் கொடும்பாவி

தகனஞ்செய்தல் வசனம்

ஓ ஜெகதீசா! பரமேசா! பிரகாசா! எல்லாம் உனது திருவிளையாட்டென்றெண்ணி இறந்த எனது சகோதரியையும் எழுபிள்ளைகளையும் வேதவிதிப்படி சந்தனகமழும் விறகுகளின்மீது வைத்து தகனஞ் செய்கிறேன். திக்கற்றவர்கள்போல் இறந்த என்தங்கையையும எழுபிள்ளைகளையும் தமது திருவடிகளில் சேர்த்துக் காக்க வேண்டும் பார்வதிசமேதா

பொது வசனம்

அகோதெப்படியென்றால் நல்லண்ணன் நல்லதங்கையைத் தேடி வருகையில் மூளிசெய்த கொடுமையால் நலதங்கை வீட்டைவிட்டு வெளிப்பட்டு காட்டுமார்க்கமாய்ச் சென்றாளென்று புண்ணியவதி யென்பவள் சொல்லக்கேட்டு அக்காட்டுவழியேசென்று அங்கு ஆவாரந்தழையையும் மோதிரத்தையும்பார்த்து இதுதங்கைபோட்ட அடையாளமென்று தெரிந்து அதற்கப்புறம் ஆயர்களைச் சந்தித்து அவர்களாலும் தங்கை சென்றவழியில் சில குறிப்புகளைக் கொண்டு கிணற்றில் விழுந்திறந்த தங்கையையும் பிள்ளைகளையும் வெளியே யெடுத்து தகனஞ்செய்துவிட்டு அரண்மனைக்குவந்து மஞ்சத்தின் மீது படுத்துக்கொண்டு நமது எண்ணத்தை முடிக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு இருக்கும்போது மூளியலங்காரி புருஷனை உபசரிக்கும்விதம் காண்க.

மூளியலங்காரி விருத்தம்

அருமையாமாசேர்தான் அசையாதுமஞ்சமீது
மருமமாயிருப்பதேனோ மதிமுகம்வாடியின்று
கருதியதென்னதங்கை தன்னையேதேடிசொந்து
குருகியேயிருப்பதாகக் குறியினால்தெரிந்தேன்யானே.

வசனம். வாரும் பிராணநாதா! இது என்ன ஆச்சரியம் இப்படி மனவருத்தமுற்று இருப்பது. அந்த கொடும்பாவியாகிய நல்லதங்கையைத் தேடி ஆயாசமடைந்தீரோ? பாவியால் பாதங்கள் நொந்ததோ? இன்னம் எவ்வித கஷ்டங்கள் படடீரோ? இதோ மயில்விசிறியால் விசுறுகிறேன், பன்னீரால் கால் அலம்பிக்கொண்டு ஆகாரம் புசித்து ஆயாசம் தீர்த்துக்கொள்ளும் நாதா.

நல்லண்ணன் விருத்தம்

மதிநுதல்ரதியேகேளாய் மாநிலமெங்குஞ்சுற்றி
விதியதுவென்றுவந்தேன் வீணிலேதேகம்நொந்தேன்
சதிசெய்ததங்கைபேச்சுத் தகாதினிநமக்குநித்த
சுதனுக்குவிவாகஞ்செய்ய வேண்டும்பெண்தேடுவாயே.

வசனம். பூரணசந்திர பிம்பத்தைபொத்த நெற்றியையுடைய இரதிக்கிணையானவளே! சதிசெய்த என்தங்கையின் வார்த்தையைப் பேசாதே; இனி நமது ஜேஷ்டகுமாரனுக்கு விவாஹஞ்செய்யவேண்டியகாலம் சமீபித்துவிட்டபடியால் நல்லபெண்ணொன்றுபேசிமுடிக்க வேண்டும். இதைப்பற்றி யோசனை சொல்லுவாய் கண்மணியே

மூளியலங்காரி விருத்தம்

எந்தனுக்குகந்தநாதா எங்குநான்பெண்ணைக்கேட்பேன்
சிந்தனைசெய்துபார்த்தால திருமகள்தனையொப்பானேன்
சொந்தமாம்தமையனூர்தன சுரூபசுந்தரியைக்கொண்டால்
வந்தனைவழிபாடோடு வகையுடநமைகாப்பாளே.

வசனம். கேளும் அரசே! நமது புத்திரனுக்கு வேறெந்தவிடத்தில் பெண்ணைத் தேடுவேன. அப்படித் தேடினும நமக்கு அடங்கி நடக்குமென்பது என்ன நிச்சயம கவனித்துப் பார்த்தால நமது சொந்தத்தில் என் தமையனூர் செல்வபுத்திரியாகிய ரூபசுந்தரியென னும் மாதுசிரோன்மணியைக கொண்டால் நமது தளளாதகாலத்துல் நமக்குவேண்டிய வந்தனைவழிபாடுகளுடன் பணிவிடை செய்வாள நாதனே.

நல்லண்ணன் வசனம்

ஆனால் உன் மனம்போல் செய்படி மாதரசே! உன் அண்ணனுக்கு தெரியப்படுத்துவாய்.

மூளியலங்காரி வசனம்

அடா சேவகா! இம்மணவோலையைக் கொண்டுபோய் கேகய தேசத்துக்கு அதிபதியாகிய என் அண்ணன் அழகானந்த மகாராஜ னிடம கொடுதது விவாஹத்துக்கு வேண்டிய முஸ்தீபுகளுடன சீக்கிரமாய் வருமபடியாகச சொல்லுவாய் சீக்கிரம ஓடு ஓடு.

சேவகன் வசனம்

அம்மணி! உங்கள் இஷ்டப்படியே நொடிப்பொழுதில் திரும்பி வருகிறேன.



போது வசனம்

அகோதெப்படியென்றால் மணவோலை கொண்டுசென்ற சேவகர் கேகயதேசஞ்சென்று அழகானந்தமகாராஜனிடம் கொடுக்க அதை அவ்வரசன் பிரித்துப் படித்துப்பார்த்து மகா சந்தோஷமடைந்து தன் மனைவிக்கும் பந்துஜனங்களுக்கும் அறிவித்து தன் குமாரத்தியாகிய ரூபவதியைச் சிங்காரித்து மணக்கோலத்தோடு பானை சேனை தண்டு தளத்துடன் மதுராபுரியையடைந்து மூளியலங்காரியைக் கண்டு மகிழ்ச்சியடையும்விதம் காண்க.

மூளியலங்காரி தரு

பல்லவி

வாரும்வாரும் அண்ணா இவள்
ரூபசுந்தரியாம் பெண்ணா

அநுபல்லவி

சீரும்சிறப்பும்வாய்ந்த திறமானபெண்பிள்ளைக்கு
கோரியவுமதுபெண் கொண்டுவந்தயென்னண்ணா வா

சரணங்கள்

பாரில்வேறெந்தப் பாவையும்வேண்டாமென்று
சீரியென்பத்தாவைநான் திருப்பினேனென்று வா

அண்ணியும்நீரும் அனைவருமவந்திப்போ
கண்ணியமாச்சுது கடலுலகுமொப்போ வா

முடிப்போம்விவாஹத்தை பிடிப்போம்நமக்ஷேமத்தை
கெடுப்போம்நல்லதஙகையே அடிப்போம்ராஜரீகத்தை வா

முத்தும்பவழமபோல சித்தித்ததேயெனக்கு
இத்தரையில்பிள்ளைபெண்ணும் ஒத்துமேவாழ்வதற்கு வா

மூளியலங்காரி வசனம்

மதுராபுரிக்கதிபதியாகிய எனது நாதனே! நாம் எழுதியனுப்பிய மணவோலையைக் கண்டவுடன் கேகயதேசத்துக்கதிபராகிய எனது அண்ணனும் அண்ணியாரும், மற்றுமுள்ள பந்துஜனங்களும் விவாஹத்துக்குவேண்டி சகல ஆடம்பரத்துடன் வந்துவிட்டார்கள். இனி நடக்கவேண்டியவைகளைத தயாரிக்க வேண்டுகிறேன் அரசே.

நல்லண்ணன் வசனம்—மகா சந்தோஷம், மகா சந்தோஷம். உன் மனம்போலவே செய்கிறேன் வாரும் எனது மைத்துனராகிய கேகய தேசாதிபதியே! வாதனம்.

அழகானந்தமகாராஜன் வசனம்

உமக்கு நானும் வந்தனஞ் செய்கிறேன். நாள் குறிப்பிட்டுச் சீக்கிரத்தில் திருமணத்தை முடியுங்கள். என் ராஜ்ஜியததை மந்திரி வசம் ஒப்பித்துவிட்டு வந்திருக்கிறேன்; சடுதியில் போகவேண்டும்.

நல்லண்ணன் வசனம்

சீக்கிரத்தில் முடிக்கத்தான் காத்துக்கொண்டிருக்கின்றேன்.

மூளியலங்காரி வசனம்

நாதா! நமது இந்த விவாஹத்துக்கு எல்லா பந்துஜனங்களையும் வரவழைப்பீர். மந்திரி! வேறொருவருக்கும் தெரிவிக்கவேண்டாம், என்றாய்விட்டு பந்துஜனங்களுக்குமாத்திரம் அறியப்படுத்துவாய்.

மந்திரி வசனம்—அம்மணி! உமது பர்த்தாவுடைய அந்தரங்கமான இஷ்டமும் இதுவே.

நல்லண்ணன் வசனம்—மந்திரி! என் அருமைத் தங்கையின் புருஷராகிய காசிராஜனுக்கு மாத்திரம் தெரிவிக்க வேண்டாம். உடனே சிற்பசாஸ்திரியை வரவழைப்பாய்.

மந்திரி வசனம்—இதோ வந்தார் அரசே.

நல்லண்ணன் தரு

பல்லவி

சிற்பசாஸ்திரியேவாரீர் நான்சொல்வதை
அற்புதமெனத்தேர்

அநுபல்லவி

விற்பனவிவேகியென் தங்கைநல்லதங்காளை
துர்க்குணிமூளியும் துறவில்விழச்செய்தாளை சி

சரணங்கள்

என்னெண்ணம்நடேற வைப்பேன் புவிமேலே
எழில்பெறுமண்டபம் செய்வீரதனாலே
தன்னிகரவளையும் மனுஷாள்மக்களையும்
தயவில்லாமற்கொல்ல வேண்டுமாதலாலே சிற்ப
பாரிலவளைப்போல பாவியுமுண்டோதான்
பதறுதேயென்தேகம் செய்குவீரின்றேதான்
சீருஞ்சிறப்புடன் தருகிறேன்பொன்னைத்தான்
சீக்கிரஞ்செய்குவீர் மண்டபமொன்றுதான் சிற்ப
பழிக்குப்பழிவாங்க வேண்டுமென்பதாலும்
பாவையைமுன்வைத்து பார்பேனொருக்காலே
அழிக்கும்வகையைத்தேடும் அனபானதாலே
அழைத்தேனுமைநானும் அருகிலிருப்பதாலே சிற்ப

நல்லண்ணன் வசனம்— ஐயா சிற்பசாஸ்திரியாரே! நான் சொன்னவைகளைத் தெரிந்துகொண்டீரா.

சிற்பசாஸ்திரி வசனம்— மீன்குஞ்சுக்கு நீந்துதல் கற்றுக் கொடுக்கவேண்டுமா? எல்லாம் தெரிந்துகொண்டேன்; தாங்கள் உத்திரவிட்ட மண்டபத்தை க்ஷணநேரத்தில் கட்டிமுடிக்கிறேன்.



சிற்பசாஸ்திரி தரு

சிற்றாளும்பெரியாளும் சித்திரவேலையாளும் சீக்கிரம்வாங்களடா[டா
கொற்றவர்மொழிப்படி சுற்றவித்தையைக்காட்டி கோபுரமுடிப்பம
காரார்குழல்மாது நல்லதங்கையைக்கொன்ற காளியைக்கொல்வதற்கு
பாராளுமன்னவன் எதிரியானவளாகும் பாவியைவெல்வதற்கு
அடிக்கோலால்பூமியை பளர்துகால்நாட்டுங்கள்
அதற்குத்தகுந்தாப்போல் பலகையைப்பூட்டுங்கள்
வெடிக்கும்புகைவேட்டுகள் வேணதுமாட்டுங்கள்
வேற்றாட்கள்காணாது வித்தையைக்காட்டுங்கள் சிற்

வசனம். இராஜாதிராஜனாகிய எங்கள் தென்மதுராபுரிக்கரசனே! நீர் குறித்தபடி மண்டபங்கட்டி முடித்தோம். அம்மண்டபம் சமயத்தில் வேலைசெய்துவிடும்.

நல்லண்ணன் வசனம்

மகா சந்தோஷம். மந்திரி! நமது சிற்பசாஸ்திரியாருக்கு வேண்டியமட்டும் வெகுமதி கொடுத்தனுப்புவாயப்பா.

பொது வசனம்

அகோதெப்படியென்றால், மூளியலங்காரியின் புத்திரனாகிய கார்த்திபனுக்குக் கலியாணமென்று சகலதேசத்திற்கும் மணவோலையனுப்பியதும், அவர்களெல்லாம் வந்துசேர்ந்ததும், சிற்பசாஸ்திரியார் கலியாணமண்டபம்ஜோடித்ததில் கலியாணமாகும்விதம்காண்க.

மூளியலங்காரி வசனம்

நீங்களெல்லாம் யாரையா? அழையாவீட்டுக்கு நுழையாச் சம்பந்திபோல் வந்துவிட்டீர்கள்.

நல்லண்ணன் பந்துக்கள்

நாங்களெல்லாம் நல்லண்ணமகாராஜனுடைய பந்துக்கள் மணவோலையைக்கண்டு வந்தோம் எங்கள் அடையாளம் உனக்குத் தெரியாதுபோல் பேசுகின்றாயே; கல்யாணத்தில் கண்மூடிக்கொண்டாற் போல் தோணுகிறதே.

மூளியலங்காரி வசனம்

ஆனாலும் பெரிதல்ல, நீங்களெல்லாம் ஒருபுறமாக இருங்கள்.

நல்லண்ணன் பந்துக்கள்

இதென்ன விபரீதம் நல்லண்ணமகாராஜனே! பெண்ணுக்குப் பெரியதனங் கொடுத்துவிட்டீரே.

நல்லண்ணன் வசனம்

என் தங்கையைக்கொன்ற படுபாவியிவள்தான், இவளைக் கொல்லவே இந்த விவாஹத்தை ஏற்படுத்தினேன் எல்லாம் நாளைக்குத்

தெரிந்துவிடும், வெளியில் சொல்லவேண்டாம். இரகசியமாகவே மனதில் வைத்துக்கொள்ளுங்கள். நமது பந்துக்களுக்குத்தெரிந்தால் அழுகுரல் ஏற்படும்.

நல்லண்ணன் பந்துக்கள்

தங்கள் இஷ்டம்போல் இரகசியத்தை வெளியில் விடவில்லை.

காந்திபனுக்கும் சுகரூபவதிக்கும் திருமணம்

மாங்கல்யப்பெண்கள் நலங்கிடல்

மூளிசொல் தரு

பல்லவி

நலங்கிடவாரும்
காந்திபராஜனுக்கும் நங்கைசுகரூபவதிக்கும் நலங்

அநுபல்லவி

இளங்கிளிஜானகி மீனாட்சிகாமாட்சி
இந்திராணிசிவகாமி சரஸ்வதிநாச்சாரு நலங்

சரணங்கள்

குலமதுதழைத்திட பிள்ளைக்கும்பெண்ணுக்கும்
குறித்தநாழிகைக்குள்ளே சிரித்துமங்களம்பாடி
பலபலவிதமான பாட்டுகளும்பாடி
பந்துக்கள்முன்னாலே சிந்துக்களும்பாடி நலங்
கோலவிழிமாதர் ஆலாத்தியேந்துங்கள்
கொஞ்சுமொழிமாதர் பூச்செண்டுபற்றியே
சிலமாம்சந்தன தாம்பூலம்பன்னீரும்
சிறக்கமரியாதைநம் மனுஷாளுக்கேவழங்குங்கள் நலங்

வேதியர் வசனம்

அம்மா அலங்காரி! ஆலஸ்யமென்ன? நான் போகவேண்டும்; சீக்கிரம் கொண்டுவாரும்; மணப்பெண்ணையும் பிள்ளையையும் லக்கினம் தப்பிப்போகிறது. நான் இன்னம் வெகு கருமாந்திர வீடுகளுக்கும் போகவேண்டியதாய் முடியும்போ லிருக்கிறது. ஆகட்டும் சல்தி, அப்பா பெண்ணின் தகப்பனாகிய கேகயதேசத்தரசனே! நீரும் உமது மனைவியுமாக சகலதேசத்தரசருங் காண உமது பெண் சுகரூபவதியைத் தாரைவார்ப்பீர்.

கேகயதேசத்தரசன் விருத்தம்

வேதவேதியரேயிந்த மேதினியாளும்வேந்த
ராதியோர்காணவின்று அருமையாமகளைத்தாரை
நீதியாய்வார்த்துத்தந்தேன் நிமலர்சொக்கேசரோடு
ஆதியாமீனாட்சித்தாயும் அன்புடன்காக்கத்தானே.



வசனம். வேதமுணர்ந்த புரோகிதரே! நாங்கள் அருந்தவமிருந்து பெற்ற புத்திரியைச் சகலமான தேவர்களும் வேதியர்களும் மன்னர் மண்டலீகர்களுங்காண காந்திபராஜனுக்குத் தாரைவார்த்துதந்தேன் சிவபெருமானும் சிவகாமியம்மையும் காப்பாராக.

வேதியர் வசனம்

அம்மா சுகரூபவதியே! இதோ இந்த மாலையை மன்னனாகிய காந்திபன் கழுத்தில்போட்டு அவரை நமஸ்கரிப்பாயாக. அப்பா காந்திபனே! நீயும் இந்த மாலையை மணப்பெண்ணாகிய சுகரூபவதி கழுத்தில் மூன்றுமுடி போடுவாயாக. சுபம் சுபம் சுபம் சதா சுபம்.

மூளியலங்காரி வசனம்

நாதா! வெகுசந்தோஷகரமாக விவாஹமகோத்ஸவம் நடந்தேறி விட்டது. இனி நடக்கவேண்டிய போஜன விஷயத்தைக் கவனிக்க வேண்டும். பெண்வீட்டைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் ஒரு இடத்திலும், புருஷன் வீட்டைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் வேறோரிடத்திலும் பிரிவினையாகப் பந்திபோஜனம் நடத்துகிறேன்.

நல்லண்ணன் வசனம்

எல்லாம் உன்னிஷ்டம்போல் விட்டுவிட்டேனே; என்னையேன் கேட்கின்றாய்.

மூளியலங்காரி தரு

பல்லவி

போடுங்கள்போடுங்கள் இலையைச் சகிமார்களே
போடுங்கள்போடுங்கள் இலையை

அநுபல்லவி

நாடுமதுஜன பந்துக்களுக்குச்சோறாய்
தேடிவடைபாயசம் போளிஅப்பளம்நேராய் போ

சரணங்கள்

ஆடுமது அரசர் அன்பாமுறவோருக்கு
அகத்திகீரைசோறு அதைவிடவேறெதுக்கு
பிடைபிடித்தவர்க்குப் பின்பந்திநீதுக்கு
பேசாதீர்ஜலங்கேட்டால் அடைக்கட்டும்மார்புக்கு போ
நல்லவயணமாகப் போட்டால்பலகாரிங்கே
கட்டுக்கொண்டிருப்பார்கள் செய்வதுயாரிங்கே
வல்லடிவேலைசெய்தால் சொல்லாமலோடுவார்கள்
வாழைக்கட்டையைப்போடு இதுதானவர்கள்பங்கே போ
நமதுஜெனங்களெல்லாம் நன்றாகத்தின்னட்டும்
நாடெங்குமென்பெயரைச் சொல்லட்டும்திக்கெட்டும்

உமையவளாணைப்படி விடுவேனோசெப்சொட்டும்
ஊதாரிஜெனங்களெல்லாம் ஓடியேபோகட்டும் பேர

நல்லண்ணன் வசனம்

இந்த மூளி நம்முன்னாலேயே இவ்விதமாக அகத்திக்கீரைசோறு நமது பந்துக்களுக்கிட்டாளே, இவளை இனி அரைநொடியும் வைத்திருக்கக்கூடாது. பூமாதேவி பொறுத்திருக்கமாட்டாள். ஐயா சிற்பசாஸ்திரியாரே! ஆகட்டும் உமது வேலை.

சிற்பசாஸ்திரி வசனம்

தீர்த்து திருவிழா வருகின்றேன் வந்தனம்.

மூளியலங்காரி புலம்பல் வசனம்

ஐயையோ தெய்வமே! இதென்ன விபரீதம், எத்தனைநாளாய் என்னைக் கெடுக்கவேணுமென்று மனதிலெண்ணி யிருந்தாயோ பாவி, பார்த்தால் நல்லவனா யிருந்தாயே; அடியம்மா தோழிகளா! இந்த அநீதம் எங்குண்டு, என்னடி செய்வேன்.

மூளியலங்காரி தரு

பல்லவி

படுபாவிசெய்தானேஞது என்ஜனங்களைப்
பார்த்துமடித்தான் தூமகேது

அநுபல்லவி

மடிந்தார்கள்கோடிபேர் மாபாவிசீமையிலே
இடிந்துவிழாதோவானம் இம்மன்னன்தலையிலே படு

சரணங்கள்

ஒருகோடிகும்பிழந்தேன் இதற்கோநான்பெண்பிறந்தேன்
ஒருகாலியானேனே பெருவாழ்வுமறந்தேனே படு
கல்லாலேபந்தலிட்டு சொல்லாமற்கொன்றானே
எல்லாருமென்ஜாதி இனத்தாரேமாண்டாரே படு
கையைப்பிசைந்தாலும் கதவண்டைநின்றழ
செய்தானேமன்னனும் எனைபென்னசெய்வானோ படு
ஒருத்திவாழவந்து ஒருகோடிஜனமாள
கருத்தாய்க்கொன்றானேபாவி தன்ஜனம்புவியாள படு
ஒற்றைக்குரல்கொண்டு ஒண்டியாய்நானழ
ஒருவர்துணையுமின்றி கடவுளேயுனைத்தொழ படு

நல்லண்ணன் தரு

எட்டுபேரைக்கொன்ற துஷ்டியேயுன்னைநான்
ஈனபங்கஞ்செய்வேன் பாரடி
மானபங்கஞ்செய்வேன் கூறடி



இதோபிடித்திட்டேன் கூந்தலை
இளங்கொடியைக்கொன்ற காந்தலே எட்டு

மட்டுமிதயில்லை கெட்டபழிகாரி
இரண்டுஸ்தனமறுத்தேன் பத்தாதே
இத்துடன்மூக்கையும் கத்தாதே
கொண்டையறுத்திட்டேன் கொத்தாய்
காதையறுத்திட்டேன் எத்தாய் எட்டு

மூட்டைக்கண்ணைத்தோண்டி முத்துளண்ணைவார்த்தேன்
மோசக்காரியின்னம் கேளடி
மூதேவியுன்திரு நாளடி
குலமைஞசிரித்திட மூளி
குரூரியழும்பெருச்சாளி எட்டு

நல்லண்ணராஜன் விருத்தம்

இன்னமென்மந்திரிகேளாய் எருக்கமாமாலையிட்டு
மன்னியகழுதைமீதில் மாதினையேற்றிவீதி
உன்னதமாகச்சுற்றி ஊர்கோலம்வந்தபின்பு
சுன்னம்வெந்திடும்கால்வாயில் சுட்டுமேகொல்வீர்தானே.

வசனம். அப்பா மந்திரி! இந்த மாபாவியாகிய மூளியலங்காரியை இதோடு விட்டுவிடக்கூடாது. இன்னும் அறிந்தும் அறியாதவர்களாயிருக்கப்பட்ட ஊரிலுள்ள உத்தமபுருஷரும் பெண்மணிகளும் கண்டு இவள் முகத்தில காரி துப்பும்படியாக எருக்கமாலையிட்டு கழுதைமேலேற்றி ஊர்கோலம் செய்துவைப்பாய் மந்திரியே.

மந்திரி விருத்தம்

மதுரைவாழரசேயந்த மங்கையைக்கழுதையேற்றி
விதவிதவீதியெல்லாம் வேண்டியபடியேசுற்றி
சதிசெய்தாளிவளேயென்று தரணியோர்க்கெடுத்துரைத்து
முதியர்சொற்படியேசுட்டோம் உன்மனம்குளிர்ந்ததையா.

வசனம். கேளும் எங்கள் அரசராகிய நல்லண்ண மகாராஜனே! குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக்காம்பாகிய மூளியலங்காரியை தாங்கள் கட்டளையிட்டருளியபடி கழுதைமேலேற்றி நமது மதுராபுரிபட்டணத்திலுள்ள தெருக்களிலெல்லாம் இழுத்தடித்து சுண்ணாம்புகால்வாயிலிட்டு சுட்டு சாம்பலாக்கிவிட்டோம் அரசே.

பொது வசனம்

அகோதெப்படியென்றால் நல்லண்ணமகாராஜன் மூளியலங்காரியால் நல்லதங்கை இறந்தாளென்று தெரிந்துகொண்டபின் மூளியின்பிள்ளைக்கு கலியாணமென்றுசொல்லி அவளுடைய பந்துக்களை

வரவழைத்து அவர்களையெல்லாம் சூஸ்திரப்பந்தலிட்டு கொன்றான். பிறகு மூளியின் மூக்கையும் ஸ்தனவிபங்களையும் கொண்டையையும் காதையும் அறுத்து எருக்கமாலையிட்டு கழுதைமேலேற்றி ஊர்க்கோலம் வரச்செய்து சுண்ணாம்புகால்வாயில் வைத்துச் சுட்டான பின் இந்தச்சேதியை மச்சானாகிய காசிராஜனுக்குச் சொல்லவேண்டுமென்று எதிர்பார்த்திருக்கும்விதம் காண்க.

## காசிராஜன் கொலுவிருத்தல்

### காசிராஜன் விருத்தம்

நதிமதிபணிந்தாய்போற்றி நாரணிபாகாபோற்றி
இதமுடனெம்மையாளும் ஏகனேபோற்றிபோற்றி
சுதாமனையாட்டியோடு தொல்நகர்மதுரைவாழ
நிதியிலேனிங்கிருக்க நேர்ந்ததேவிமலாபோற்றி.

வசனம். உலக சராசரங்களுக்கும் கர்த்தாவாயிருக்கப்பட்ட ஸ்ரீகைலாசபதியே! போற்றி போற்றி. என்னுடைய ஏழுபிள்ளைகளும் மனையாட்டியும் மதுரைமாநகரத்திலிருக்கவும், நான் இங்கே தனித்திருக்கவும் நேர்ந்ததே. இனியாகிலும் எங்களை ஒன்று சேர்ப்பாய் சோமசுந்தரக்கடவுளே.

மந்திரி வசனம்—எங்கள் காசிமகாராஜனே! வந்தனம்.

காசிராஜன் வசனம்—மந்திரி! நமது நாட்டில் முன்போலில்லாமல் மாதம் மும்மாரி பெய்து வருகின்றதா?

மந்திரி வசனம்—கடவுள் கிருபாகடாட்சத்தால் மாத மும்மாரி பெய்துவருகின்றது மகாராஜனே.

### காசிராஜன் தரு

சந்தோஷமந்திரி — சிந்தைகளித்திட்டேன்
சுந்தரிமைந்தரையும் — சென்று
மூதிரான்கொண்டுவாறேன்
இந்நகரத்தை — உந்தனிடம்விட்டேன்
அந்தமாயாண்டுவாராய் — சிந்தனையில்லாமலே சந்

### மந்திரி தரு

சந்தனுக்குநிகர் — சுந்தரமன்னனே
சிந்தனைசெய்தபடி — நன்று
மைத்துனர்வீடுதேடி.
ஏகதலேசென்றங்கே — இன்பமுடன்வாரீர்
வந்துமேபெமைக்காரும் — இந்துநுதலாசே சந்



### பொது வசனம்

இவ்விதம் காசிராஜன் தன் பெண்ஜாதி பிள்ளைகளை அழைத்துவர மதுராபுரிக்குச்சென்று அங்கு மைத்துனனாகிய நல்லண்ணமகாராஜனைக்கண்டு க்ஷேமலாபத்தை விசாரிக்கும்விதம் காண்க.

### நல்லண்ணமகாராஜனை காசிராஜன் காணல்

காசி — மாநிலந்தனைகாக்கும் மைத்துனரேநீரேன்
மர்மமாயிருக்கின்றீர் மனதைவிட்டுச்சொல்வீர்

நல்ல — தேனிலகுமலர் மாலைபணிந்தவரே
தேவியுமக்களும் கிணற்றிலேமாண்டாரே

காசி — ஐயையோவிதிவசமே ஹாஹாஹா இதென்னகொள்ளை
மைபார்விழிமாது மக்களுமெப்படி மண்மீதுமாண்டனரோ

நல்ல — பாவிபெணதுதேவி சீரியபடியாலே
ஆவிபோக்கிக்கொண்டாள் அருமைமக்களுடனே

காசி — மக்களுமாண்டாரோ மண்டலமாளுவதற்கு
திக்கிலலேவேறெனக்கு தெய்வமேகருணைவாதா.

### காசிராஜன் தரு

ஒருவர்இருவர்மாண்டால் என்றுறுலகம்நம்பும்
ஒருமிக்கமாண்டது எப்படி
பெருமைசேர்மதுரையாள் சிதருநமன்னனே
பேசவிருண்மை யென்முன்னமே — ஒரு

### நல்லண்ணன் தரு

திருமகள்தனையொப்பாள் தங்கைவந்தாள்காட்டில்
சீக்கிரமனுப்பித்தேன் வீட்டுக்கு
கருமம்பிடித்தமூளி துரத்தியபடியாலே
காட்டுக்கிணற்றில் மாண்டார்மக்களும் — திரு

### காசிராஜன் வசனம்

மைத்துனா! இதற்குத்தானா அண்ணன் வீடுதேடி வந்தனள்? என்கண்மணி மாண்ட கிணற்றைக் காட்டும் பார்ப்போம்.

### நல்லண்ணன் வசனம்

மைத்துனா! என் தங்கைக்கு தீங்குபுரிந்த மாபாவியாகிய அலங்காரியின் பந்துஜனங்களையெல்லாம் கொன்றதுமன்றி, அவளையும் பண்ணாத கோலமெல்லாம் பண்ணி சுண்ணாம்பு கால்வாயில் வைத்து சுட்டுப்போட்டேன். கிணற்றைக் காட்டுகிறேன் வாரும் இதுதான் கிணறு.

காசிராஜன் தரு

எந்தன்சொல்லைத்தள்ளி இந்தவிடம்வந்து
மைந்தரைக்கொன்றுபடி எந்தன்
பந்தமறந்தாயோடி

சொந்தவிடமென்று சிந்தனைசெய்தாரீ
அந்தரமேகினையோ நிந்தை
எந்தன்மேலேற்றினையோ

நானும்வருகின்றேன் நடராஜன்பாதத்தை
நாட்டிநீவைக்கவேண்டும் என்முடி
சூட்டியேவைக்கவேண்டும்

காசிராஜன் கவி

காசிவாழ்ஈசாவெந்தன் கண்மணிகுமாரர்மாண்டார்
நேசமாங்கட்டாரியாலே நின்பதஞ்சேர்கின்றேனே.

நல்லண்ணன் கவி

மைந்தனைமாளக்கண்டு மாநிலம்வாழொண்ணாது
கர்த்தனேநானும்வாரேன் கைலைபங்கிரிக்குந்தானே

பொது வசனம்

அதேதெப்படியென்றால், இந்தப்பிரகாரமாக காசிராஜனும் நல்லண்ணமகாராஜனும் தங்கள் ஆயுதங்களால் உயிர்விட்டதைக் கண்ட பார்வதியும் பரமசிவனும் அவர்கள்மீது கிருபைகூர்ந்து நல்லதங்கைமுதல் யாவத்திரனையும் எழுப்புகிறவிதம் காண்க.

பார்வதி அகவல்

கங்கையையணிந்த கடவுளேவாரும்
திங்களையணிந்த சிவனேவாரும்
துங்கமாம்நல்ல தங்கையும்மக்களும்
பங்கமாய்கிணற்றில் பரிவுடன்மாண்டார்
அந்தபாரத்தால் அவனிடபதியும்
உத்தமஅண்ணனும் ஒக்கவேமாண்டார்
கைலைவாழ்ஈசா கருத்துடன்சென்று
மயிலாமவளையும் மன்னர்மக்களையும்
எழுப்பியேவருவோம் இறைவனேவாரும்
மழுப்படையேந்தும் வள்ளலே
குறிப்புடனிருவர் குவலயமீதே.

வசனம். வாரும் ஜெகதீசா! பக்தருக்கிரங்கும் பரமேசா! நம்முடைய வரத்தால் பிறந்த நல்லதங்கையும், அவளுடைய மக்களும்,



இரண்டு மன்னர்களும் மூளியால் மாண்டார்கள். ஆதலால் நாம் சென்று எழுப்பிவருவோம் பரமசிவமே.

பரமசிவன் வசனம்

பச்சைப்பசுங்கிளியே! உன் மனம்போல் சென்று எழுப்புவோம்.

பார்வதியம்மனும் பரமசிவனும் எழுந்தருளி
இறந்தவர்களை எழுப்புதல்

கவி

கங்கையைக்கொண்டு மங்கைக்குயிர்தந்தோம்
நங்கையிவளாலே நானிலமன்னர்மீண்டார்.

நல்லதங்கை விருத்தம்

அரகராகைலைநாதா அப்பனேபருணைத்தந்த
மலையுமைபாகம்வைத்த பராபராசிவனேபோற்றி
தராதலம்காக்கும்வேந்தர் தற்பராபோற்றிபோற்றி
வரமளித்தெம்மைகாத்த வள்ளலேபாதம்போற்றி.

வசனம். அரனே! பரமசிவனே! இறந்த எங்களை யெழுப்பிக் காத்த ஈசனே! பார்வதிக்குப்பாகந்தந்தபரனே! எங்களுக்குத் தமது பாதாரவிந்தத்தை தந்தருளும் ஸ்ரீகைலாசபதியே.

நல்லதங்கை காசிராஜனிடம் சொல் விருத்தம்

பத்தாவேகாசிவேந்தே பாவியும்சொற்கேளாமல்
நத்திபெண்ணண்ணன்விடு நாடியேவந்ததாலே
இத்தனைகோலமாச்சு எம்பிரான்காட்சிதந்தார்
உத்தமாவினிநாமிந்த வுலகினிலிருக்கொண்ணாதே.

வசனம். கேளும் எனது பத்தாவாகிய காசிமகாராஜனே! உம்முடையதிருவாக்கை அலட்சியஞ்செய்துவந்தபடியால் என் அண்ணி யாகிய மூளியிடத்தில் படாதபாடுபட்டுத் திரும்பி தங்கள் முகத்தில் விழிக்கப்பயப்பட்டு நமது மக்களுடன் இப்பாழுங்கிணற்றில் மாண்டு மடிந்தேன் நாதனே.

நல்லதங்கை தரு

அண்ணலேமாண்டோர்கள் அவனியில்இல்லாது
அப்பன்பதம்சேர்வோம்
பெண்ணுனைஎந்தனுக்கு உலகிலொருகோயில்
புதுப்பிக்கவேண்டுமிப்போ அண்

மாதமொருபூசை வருஷமொருதிருநாள்
வையகத்தோர்நடத்த

மாதாநாளும்எழு பிள்ளைகளுடனே
வன்னிமரமாய்வளர்வோம் — அன்

### பொது தரு

நல்லண்ணன்காசிமன்னன் நல்லதங்கையைக்கண்டு
நற்கதியிலே சேர்ந்தார் களிகூர்ந்தார் — நல்

பொல்லாதமூளியைப் புவியோர்காரியுமிழ
வில்லங்கச்சிலே யிட்டார் பார்த்திட்டார் — நல்

### மங்களம்

மங்களஞ்ஜெய மங்களஞ்சுப மங்களந்திரு மங்களம்
திங்கள்சூடிய தேவர்க்குந்திரு மாதுக்குமவர் மைந்தர்க்கும் — மங்

மங்கைபார்வதி எங்கள்லட்சுமி துங்கபுத்தக பாணிக்கும்
ஐங்கரர்க்குமெம் மறுமுகற்குநல் லதிவள்ளி தெய்வானைக்கும் — மங்

எங்குமேபுகழ் இந்திரன்முதல் எல்லாதேவர்க்கு மாதர்க்கும்
கங்கைசூழ்புவி யந்தணர்க்கும் அரசாளுமன்னவர் தங்கட்கும் — மங்

தங்குவர்த்தகர் தங்கட்கும் வேளாளமரபினர் யாவர்க்கும்
சிங்கமாம்புல வோர்கட்கும் பலநாடகக்கவி ராயர்க்கும் — மங்

நல்லதங்கையின் சரிதைக்குயிதை நாடியே படிப்போருக்கும்
வல்லமலர்மகள் விலாசபிரஸுக்கு வன்மைமிகு மிவ்வுலகுக்கும் — மங்

### வாழி விருத்தம்

மூவரும்வாழித்தேவர் முதல்வனும்வாழித்தேவ
தேவியர்வாழிவேதத் தியானிகள்வாழிச்செங்கோல்
தாவியேபுலகையாளும் தருமகன்மன்னர்மற்றோர்
ஆவலாய்வாழிவாழி அவனியிலென்றுமன்றே.

புதிய நல்லதங்கை நாடகம் முற்றிற்று.

108539

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை-1. (6-10-65)

O-;52N.DUS, N
N65

# நாடக புத்தக விளம்பரம்

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யா
இதன் அடியிற்கண்ட புத்தகங்களும், இன்னும் அநே
புத்தகங்களும் எமது மலர்மகள் விலாச அச்சுக்கூடத்
பறச் சேர்திருத்தி அச்சிட்டுவருவதால் யாவரும் மலர்மக
கவனித்து வாங்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(ரிஜிஸ்டர் காபிரைட் செய்தது)

சுபத்திராபரிணய நாடகம் (மாசிலாமணி கவிராயர்)
சிறுத்தொண்டபத்தன் நாடகம் ,,
ஸ்ரீராம ஆஞ்சநேய யுத்த நாடகம்
மயில்ராவணன் சண்டை நாடகம்
நல்லதங்காள் நாடகம்
ஸ்ரீராமர் அஸ்வமேதயாகமென்னும் குசலவ நாடகம்
கம்ச சம்மார நாடகம்
விநாயகர் கலியாண நாடகம்
தண்டகாசூரன் நாடகம்
சந்திரன் கர்வபங்கமென்னும் சந்திராம்பாள் நாடகம்
மணிமாலன் சண்டை நாடகம்
வீமன் அர்ச்சுனன் யுத்த நாடகம்
கர்ணன் சண்டை நாடகம்
இலட்சுமணாதேவி மாலையிடு நாடகம்
சகுந்தலை நாடகம்
சித்திரசேனன் சரித்திர நாடகம்
வாணாசூரன் சண்டை நாடகம்
புனந்திரன் தூது என்னும் சின்ன அர்ச்சுனன் சண்டை
கெஜகௌரி என்னும் காந்தாரி நோன்பு நாடகம்
துரியோதனன் கெர்வபங்கமென்னும் அர்ச்சுனன்சண்டை
சந்திராஜன் பாபவிமோசன கிருஷ்ணார்ச்சுனன் சண்டை
கெம்பீரசூரன்வதை துரோபதை கல்யாணசமைந்தநாடக
கடோர்கஜன சண்டை நாடகம்
பத்மாவதி நாடகம்
தாருகாவனரிஷி சரித்திர நாடகம்
நரகாசூரன் சம்மார நாடகம்

விலாசம்:—

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாசம் பிரஸ்
28, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.